TRADITIONAL WATER MANAGEMENT

Sluice Technology in Tamil Nadu

GOVERNMENT OF TAMIL NADU
DEPARTMENT OF ARCHAEOLOGY

மரபுசார் நீர் மேலாண்மை
தமிழ்நாட்டில் குமிழித் தொழில்நுட்பம்

Traditional Water Management
Sluice Technology in Tamil Nadu

மரபுசார் நீர் மேலாண்மை
தமிழ்நாட்டில் குமிழித் தொழில்நுட்பம்

Traditional Water Management
Sluice Technology in Tamil Nadu

கா.ராஜன்

K.Rajan

தமிழ்நாடு தொல்லியல் துறை

Government of Tamil Nadu

Department of Archaeology

2026

Title

Traditional Water Management – Sluice Technology in Tamil Nadu

First Edition : **2026**

Publication No. : 375

No. of Copies : 1000

No. of Pages : 684

© **Department of Archaeology**

Author:

K.Rajan

Published by:

Department of Archaeology
Government of Tamil Nadu
Chennai – 600008

Book Designed by:

N. Ravichandran, nravi1963@gmail.com

This book has been printed with 80 gsm ITC Maplitho Paper.

Printed by:

Evershine Multipurpose Co-operative Society Ltd.

No. 32, Koya Arunagiri 1st Street

Royapettah, Chennai -600014

Price : Rs.1685.00

ISBN : 978-81-944246-7-3

ISBN 978-81-944246-7-3

9 788194 424673

திரு. தங்கம் தென்னரசு
மாண்புமிகு நிதி அமைச்சர்
சுற்றுசூழல், காலநிலை மாற்றம் மற்றும் தொல்லியல்

அணிந்துரை

ஒரு நாடு தொழில்நுட்ப அடிப்படையிலான புதுமைகளின் மூலமே முன்னேறுகிறது. சமூகத்தின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்வதற்காக புதிய கண்டுபிடிப்புகள் தொடர்ந்து உருவாகிக் கொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பும் காலப்போக்கில் மேலும் மேம்படுத்தப்பட்ட மற்றொரு புதிய கண்டுபிடிப்பால் மாற்றப்படுவது இயல்பாக நடைபெறும் நிகழ்வாகும். இத்தகைய தொழில்நுட்பம் சார்ந்த கண்டுபிடிப்புகள் மனிதகுலத்தின் உற்பத்தித் திறனை பெரிதும் மாற்றியமைத்து, பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. புதுமையாக விவசாயத் துறையில் அறிமுகமான அத்தகைய ஒரு முக்கியத் தொழில்நுட்ப நிகழ்வே குமிழித் தொழில்நுட்பம் ஆகும். தமிழில் ‘குமிழி’ என அழைக்கப்படும் இந்த திண்மையான திறன்மிக்க நீரியல் நுட்பம், குளங்களிலிருந்து விவசாய நிலங்களுக்கு நீரைப் பகிர்ந்தளிக்கும் முறையை பெரிதும் மாற்றியமைத்தது. இந்த குமிழிகளில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள், இத்தொழில்நுட்பம் கி.பி. ஏழாம் நூற்றாண்டளவில் அறிமுகமானதாகக் காட்டுகின்றன. இலக்கிய ஆதாரங்களும் பிற சான்றுகளும், இதன் பயன்பாடு அதற்கு முந்தைய காலத்திலிருந்தே இருந்திருக்கக்கூடும் என்பதை சுட்டிக்காட்டுகின்றன. காலனிய ஆட்சியாளர்கள் மாற்று நீர்ப்பாசன முறைகளை அறிமுகப்படுத்தும் வரை, இந்த நீரியல் சாதனம் தொடர்ந்து பயன்பாட்டில் இருந்தது. ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்த குமிழித் தொழில்நுட்பம் நின்று நிலைத்திருப்பது, அதன் செயல்திறனையும் பயன்பாட்டு தேவையையும் வெளிப்படுத்துகிறது. இயற்கையாக அமைந்த நீர்ப்பிடிப்பு பகுதிகளிலிருந்து விவசாய நிலங்களுக்கு நீரைப் பகிர்ந்தளிக்க, ஈர்ப்புச் சக்தியை நுணுக்கமாகப் பயன்படுத்தும் முறையை நம் முன்னோர்கள் சிறப்பாக கையாண்டுள்ளனர். ஆகவே, பண்டைய நீர் மேலாண்மை திட்டம் சிறப்பாக வடிவமைக்கப்பட்டு, சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நடைமுறையாக இருந்துள்ளது. பண்டைய குளப்பாசன முறையில் ஒரு குளத்தை அமைப்பதற்கும், அதிலிருந்து நீரைப் பகிர்ந்தளிப்பதற்கும், சுற்றியுள்ள நிலவமைப்பு, நீரோட்டம் மற்றும் மாறுபடும் காலநிலைச் சூழல் ஆகியவற்றைப் பற்றிய ஆழ்ந்த அறிவு இருந்திருத்தல் வேண்டும். குளத்திலிருந்து குறிப்பிட்ட கால்வாய்கள் வழியாக நீர் தொடர்ந்து செல்ல, இறுதியாக அதை பயன்படுத்துபவர்களின் பங்கும் மிக அவசியமானதாகும். தமிழ்நாட்டில் இந்த நீர் மேலாண்மை முறை ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து

நிலைத்திருப்பது, தலைமுறை தலைமுறையாக அறிவு பரிமாற்றம் இடையுறாது நடந்து வந்ததற்கான மறைமுகச் சான்றாகும். குளங்கள் பொதுவாக ஆண்டின் பெரும்பாலான காலங்களில் நீருடன் இருப்பதால், குறுகிய காலம் மட்டுமே வறண்ட நிலையில் காணப்படுகின்றன. எனவே, குமிழிகளில் காணப்படும் கல்வெட்டுகளைப் ஆவணப்படுத்தவும், படியெடுக்கவும், நிலத்தடியில் உள்ள நீரியல் அமைப்புகளைப் பார்வையிடவும் திட்டமிடுதல் அவசியமாகிறது. இதற்கு கூடுதல் முயற்சி தேவைபடுகிறது.

இத்தகைய சூழலில், தமிழ்நாட்டில் உள்ள இருநூற்றுக்கும் மேற்பட்ட குமிழி கல்வெட்டுகளை ஆவணப்படுத்தி, மின்னணு வடிவில் பதிவு செய்வது என்பது ஒரு மாபெரும் பணியாகும். இதனை இந்நூலாசிரியரும் அவருடன் இணைந்த குழுவினரும் குறுகிய காலத்தில் சிறப்பாக நிறைவேற்றியுள்ளனர். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வரலாற்றை அறிந்துகொள்ளும் வகையில் கல்வியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும், அனைத்து குமிழி கல்வெட்டுகளையும் ஒரே இடத்தில் தொகுத்து வழங்கியுள்ளமைக்கு என் மனமார்ந்த பாராட்டுகளைப் பதிவு செய்கிறேன். தமிழ்நாட்டின் வறண்ட பகுதிகளில் வாழும் பெருமளவிலான மக்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றும் வகையில் விவசாய உற்பத்தியை விரைவுபடுத்துவதற்கும், மேம்படுத்துவதற்கும் பேருதவியாக இருந்த இந்த மரபு சார்ந்த நீர்ப்பாசன முறையை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்த ஆசிரியரை நான் மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

Thiru. Thangam Thenarasu
Honourable Minister for Finance
Environment, Climate Change and Archaeology

Foreword

Technological innovations and their optimum utilisation drive the progress of a nation. Innovation is an ongoing process to meet the demand and expectations of society. Each innovation is normally replaced with another improved version. The technological innovations had a greater impact, transforming human capabilities and fostering economic prosperity. One notable innovation that entered the agricultural domain is the introduction of sluice technology. This simple and effective hydraulic device, popularly called *kumili* in Tamil, transformed the nature of water distribution from the tank to the agricultural field. The inscriptions engraved on the devices indicate that this technology was introduced around the 7th century BCE. The literary and other material evidence suggests its existence even before this date. This hydraulic device was in use until the introduction of another alternative system by the Colonial rulers. The survival of this sluice technology for over a millennium stands as testimony to the vibrant viability of the system. Our ancestors cleverly and skilfully mastered the gravity flow in the traditional irrigation system to distribute water from naturally occurring water catchment points to the fields. Therefore, the ancient water management system is considered one of the well-designed and socially accepted practices. The construction of a tank and the distribution of water in traditional tank irrigation requires a deep understanding of the surrounding landscape, water flow dynamics and weather fluctuations to select and design the tank. The active involvement of end users is utmost necessary in maintaining the continuous flow of water from the tank through designated channels. The long-standing survival of the water management system in Tamil Nadu over a millennium indirectly suggests that knowledge transfer from one generation to another has occurred without interruption.

Copying and studying inscriptions at these sites requires careful planning and execution. Documentation and digitisation of more than two hundred sluice inscriptions in Tamil Nadu is a stupendous task. The author and the associated team achieved this in a short period. I am so glad

to place on record my appreciation for bringing the entire sluice inscriptions at one place for the benefit of the academic community and the general public to understand the history of science and technology in the field of irrigation. I congratulate the author for bringing this traditional irrigation system that accelerated agricultural production to sustain the large populations of the dry zones of Tamil Nadu.

திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப.
தமிழ்நாடு அரசின் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர்
மற்றும் தொல்லியல் துறை ஆணையர்

அணிந்துரை

ஒரு நாட்டின் ஒவ்வொரு குடிமகனும், சமூக வாழ்வை செம்மையாக வடிவமைத்த அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வரலாற்றைப் பற்றிய தெளிவான புரிதலைக் கொண்டிருக்க வேண்டும். கடந்தகால தொழில்நுட்பங்களை அறிந்து, அவற்றை மீளமைத்துப் புரிந்து கொள்ள, இலக்கியம், கல்வெட்டியல், நாணயவியல் மற்றும் தொல்லியல் ஆகிய துறைகளில் பதிவு செய்யபட்ட சமகால முதன்மை சான்றுகளில் காணப்படும் தரவுகளை நாம் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. மனிதகுலத்தின் நீண்ட வரலாற்றில் பல்வேறு தொழில்நுட்பப் புதுமைகள் தோன்றியுள்ளன. அவற்றில், சமூகத்தின் அடிப்படை வாழ்வாதாரத்தையே தாங்கி நிற்கும் விவசாய உற்பத்தியுடன் தொடர்புடைய தொழில்நுட்பங்கள் தனித்துவமான முக்கியத்துவம் பெற்றவையாகும். தமிழ்நாட்டில், கி.பி. ஏழாம் நூற்றாண்டு வாக்கில் குளப் பாசன முறையில் அறிமுகமான *குமிழி* எனப்படும் நீரியல் தொழில்நுட்பம், மாநிலத்தின் வறண்ட பகுதிகளின் நிலவமைப்பையும் விவசாயச் சூழலையும் பெரிய அளவில் மாற்றியமைத்தது. ஈர்ப்புச் சக்தியை அடிப்படையாகக் கொண்ட இந்த தொழில்நுட்பம், தமிழ்நாட்டின் வறண்ட நிலப் பகுதிகளில் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. கோயில் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் பெரும்பாலும் சமூகத்தின் சமயம் சார்ந்த பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்துகின்றன. ஆனால், நேரடியாக நீரியல் கருவியான இக்குமிழிகளின் மீது பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள், இந்த தொழிநுட்பத்தின் அமைப்பு மற்றும் அதனால் அப்பகுதிகளில் ஏற்பட்ட மாற்றங்களை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

நூலாசிரியர், இருநூற்றுக்கும் மேற்பட்ட குமிழிக் கல்வெட்டுகளை முறையாக ஆவணப்படுத்தி, அவற்றை படித்து அதன் தன்மையை எடுத்துரைத்ததன் மூலம், மரபுசார் பாசன முறைகளிலும் நீர் மேலாண்மையிலும் பயன்படுத்தப்பட்ட பல்வேறு தொழில்நுட்பங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளார். *குமிழி, மடை, கரை, கலிங்கு, கல், மிண்டகம், வாய், நாழிவாய், அகமடை, புறமடை, நீர்க்கோவை, தூம்பு, சேரோடி* போன்ற தொழில்நுட்பச் சொற்கள் கல்வெட்டுகளில் இருந்து மீட்கப்பட்டிருப்பது, குளப் பாசனத்தில் நிலவிய உயர்ந்த தொழில்நுட்ப அறிவை உறுதிப்படுத்துகிறது. மேலும், இச்சொற்கள் இன்றளவும் குளப் பாசன நடைமுறைகளில், பயன்பாட்டில் இருப்பது,

அந்த மரபுசார் தொடர்ச்சியை உணர்த்துகிறது. குளப் பாசன முறைகளில் உள்ள நீர் மேலாண்மை அமைப்புகளை முறையாகப் ஆவணப்படுத்தி, அதன் தொழில்நுட்ப தனித்துவத்தை அறிவியல் உலகிற்கு முன்வைத்த ஆசிரியரின் முயற்சி பாராட்டுக்குரியது. அவர்களது தீவிரமான களப் பயணங்களின் மூலம் திரட்டப்பட்ட பெரும் அளவிலான கல்வெட்டுத் தரவுகள் இந்நூலில் தெளிவாக எதிரொலிக்கின்றன. இந்தத் தரவுகள், சமூக மாற்றங்களில் தொழில்நுட்பம் ஆற்றிய முக்கியப் பங்கினை விளக்குகின்றன.

எனவே, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து குமிழிக் கல்வெட்டுகளையும் முழுமையாக ஆவணப்படுத்தும் பெரும் பணியை மேற்கொண்ட பேராசிரியர் கா. ராஜன் அவர்களை நான் மனமார்ந்த வாழ்த்துகளுடன் பாராட்டுகிறேன். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வரலாற்றில் ஆர்வமுள்ளவர்கள் இத் தனிவரைவு நூலிற்கு வரவேற்பு அளிப்பார்கள் என உறுதியாக நம்புகிறேன். இது ஒரு குழுவாக முன்னெடுத்த முயற்சியாகும்; அதற்குரிய பாராட்டும் ஊக்கமும் நிச்சயமாக வழங்கப்பட வேண்டும்.

Thiru. T. Udhayachandran, I.A.S.
Additional Chief Secretary to the Government of Tamil Nadu
Finance Department and Commissioner of Archaeology

Foreword

Every citizen of a country should be aware of the history of science and technology that has transformed society's life. To understand and reconstruct past technologies, we must rely on contemporary primary sources that are embedded and interwoven within the literary, epigraphical, numismatic and archaeological sources. Several technological innovations transformed society. Among them, the technology involved in agricultural production always stands out as unique, as it supports the very survival of society. In Tamil Nadu, the sluice technology, a popular hydraulic device, introduced around the 7th century CE in tank irrigation, transformed the landscape of the dry zones of Tamil Nadu. This marvellous technology, based on gravity flow, was deployed in tank irrigations of dry zones, and it survived for more than a millennium in Tamil Nadu. Unlike other epigraphical records engraved on the temple walls displaying the religious aspects of society, the inscriptions engraved directly on the hydraulic device provide ample scope to understand the nature of technology and its role in shaping the history of the micro region.

The author has documented and deciphered more than two hundred sluice inscriptions, which demonstrated various techniques involved in the indigenous irrigation system and water management. The technical terms such as *kumili, madai, karai, kalingu, kal, mindakam, vay, nalivay, akamadai, puramadai, nirkovai, tumpu, cerodi,* etc., recovered from the inscription, demonstrated the level of technology deployed in tank irrigation. Quite interestingly, these technical terms are being preserved, remembered and reused in tank irrigation. The systematic documentation of these hydraulic devices and the sluice inscriptions is commendable. The amount of epigraphical data brought to light through their intensive explorations and documentation is reflected in the book. The volume of data reflects the role of technology in transforming society.

I congratulate the author, Prof.K.Rajan, for undertaking the stupendous task of documenting the entire sluice inscriptions across Tamil Nadu. I hope that scholars and enthusiasts interested in the history of science and technology will appreciate this valuable monograph. It is a commendable team effort and that deserves appreciation and encouragement.

CONTENTS

அணிந்துரை
Foreword

முகவுரை
Preface

விளக்கப்படப் பட்டியல்
List of Illustrations (Figures, Maps and Tables)

பின்னிணைப்பு பட்டியல்
List of Appendix

மரபுசார் நீர் மேலாண்மை - தமிழ்நாட்டில் குமிழித் தொழில்நுட்பம் 1

Traditional Water Management - Sluice Technology in Tamil Nadu 61

ஒளிப்படங்கள்
Figures 111

நூலடைவு
Bibliography 135

பின்னிணைப்பு – 1: தமிழ்நாட்டில் ஆவணப்படுத்தப்பட்ட குமிழிக் கல்வெட்டுகளின் பட்டியல் 149

Appendix – I: List of documented sluice inscriptions in Tamil Nadu 163

பின்னிணைப்பு – *II:* குமிழிக் கல்வெட்டுகள் உள்ள இடங்களுடன் அட்ச-தீர்க்க ரேகை பட்டியல் 173
Appendix – II: List of Sluice yielding Sites with Geo-coordinates

குமிழிக் கல்வெட்டுகள் பட்டியல் எண். *1-221*
Catalogue of Sluice Inscriptions Nos. 1-221 185

தளங்கள் அகர வரிசைப்பட்டியல்
Site Index 641

முன்னுரை

வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட சமூகங்களில், நீர் மதிப்புமிக்க வளமாகக் கருதப்படுகிறது. வேளாண் மக்களின் வாழ்வாதாரம் முழுமையாக நீரைச் சுற்றியே அமைந்துள்ளது. ஆகவே, நீரை சேமித்தல், பாதுகாத்தல், அதன் பயன்பாட்டை ஒழுங்குபடுத்தல், நீர்பகிர்மானம் ஆகியவற்றில் தனிக்கவனம் செலுத்தியதுடன் மேலும் அவை பொருத்தமான தொழில்நுட்பங்களுடனும் சமூக பங்களிப்புடனும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை நம் முன்னோர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். குறிப்பாக இடைகாலத் தமிழ்நாட்டில் நீர் மேலாண்மையில் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட பல தொழில்நுட்பங்களில், குமிழி அடிப்படையிலான குளப் பாசன முறை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்தச் சிறப்பான தொழில்நுட்பம், குளப் பாசனத்தில் பயன்படுத்தப்பட்டு, பலமடங்கு விவசாய உற்பத்தியை பெருக்கி சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. தமிழ்நாட்டில் பல்வேறு ஆய்வுநிறுவனங்களும் தனிநபர்களும் மேற்கொண்ட தீவிர ஆய்வுகளின் மூலம், மரபு சார் நீர்ப்பாசன அமைப்புகள் தொடர்பான பெருமளவான தரவுகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. குமிழிகளில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள், தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் அதன் நிலைத்த தன்மை குறித்த முக்கியமான தகவல்களை வழங்குகின்றன. கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் உருவான இந்த புதிய நீரியல் தொழில்நுட்பம், சமூகத்தில் பெரிய மாற்றங்களையும், அளவிட முடியாத தாக்கத்தையும் ஏற்படுத்தியது, ஆதலால் இதன் வரலாற்றுச் சிறப்பு குறிப்பிடத்தக்கதாகும். ஆய்வாளர்கள் தங்களது கண்டுபிடிப்புகளின் மூலம் கல்வெட்டு விவரங்களை மிகுந்த முயற்சியுடன் ஆவணப்படுத்தியிருப்பது பாராட்டத்தக்கதாகும். அவர்களின் நேர்மையான பதிவுகள், கருதுகோள்களை உருவாக்க உதவியதோடு, அவற்றை கள ஆய்வுகள் மூலம் ஆய்வுக்கு உட்படுத்தி மேலும் தெளிவுபடுத்துவதற்கும் வழிவகுத்தன. எனினும், குறைவான மனித வளம், தேவைப்படும் அளவிலான நிதி வளம் இல்லாமை, மற்றும் முழுமையாக ஆவணப்படுத்த முடியாமை போன்றவை தரவுகளை முழுமையாக ஒருங்கிணைத்து காணும் வாய்ப்பை குறைத்துள்ளன. பண்டைய ஏரி/குளங்களின் வரலாற்றை, புவியியல், நிலவடிவியல் மற்றும் தொழில்நுட்பச் சூழல்களின் பின்னணியில் தரவுகளைப் பொருள்படுத்திப் புரிந்து கொள்வது, இந்த பாசன முறைகள் குறித்த புதிய புரிதல்களை வழங்கியுள்ளன. கள ஆய்வுகளின் போது கிடைத்த புரிதல்களும், கிராம மக்களுடன் நடைபெற்ற உரையாடல்களும், குமிழி கல்வெட்டுகளில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பச் சொற்களின் விளக்கங்களை நுணுக்கமாகப் புரிந்து கொள்ள ஒரு வாய்ப்பை அளித்தன.

இந்நூலில், இருநூற்றுக்கும் மேற்பட்ட குமிழி கல்வெட்டுகள் ஆவணப்படுத்தப்பட்டு, மின்னணு வடிவில் பதியப்பட்டு, விளக்கப்பட்டு விரிவாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இலக்கியம், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் ஆகிய துறைகளில் கிடைத்த பெருந்தரவுகள் ஒருங்கிணைக்கப்பட்டு, வரைபடங்கள் மற்றும் விளக்கப்படங்கள் மூலம் தெளிவாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. கால வரம்பின் காரணமாக, இவ்வாய்வு முழுமையாக ஏரி/குளப் பாசன முறைகளுக்குள் மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

இந்தப் பண்டைய குளப் பாசன முறையை, குறிப்பாக நதிநீர் சார்ந்த பாசன முறைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த இரு நீர் மேலாண்மை அமைப்புகளுக்கிடையேயான வேறுபாடுகளையும், காலப்போக்கில் அவை சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கத்தையும், மாற்றங்களையும் இன்னும் தெளிவாக உணர முடியும். இந்தத் திசையில் எதிர்கால ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால், நீர் மேலாண்மையில் நம் முன்னோர்கள் கொண்டிருந்த அறிவு, அனுபவம் மற்றும் தொலைநோக்கு சிந்தனைகள் குறித்து மேலும் ஆழமான புரிதலை ஏற்படுத்தும். என் சக ஆய்வாளர்களுடன் நான் மேற்கொண்ட விவாதங்களும், கலந்துரையாடல்களும், அறிவார்ந்த ஆலோசனைகளும் மிக ஆழமானவை. அந்த அறிவியல் உரையாடல்களின் வழியாக, அவர்களுடைய மதிப்புமிக்க அறிவும் கூர்மையான சிந்தனைகளும் என்னை அறியாமலேயே இந்த நூலில் கலந்திருக்கலாம். ஆகவே, இந்நூலை முழுமையாக ஒரு தனிநபரின் முயற்சியாகக் கருதாமல் பண்பட்ட பல்சார் குழுவின் கூட்டு முயற்சியின் வெளிப்பாடாக கருதலாம்.

Preface

In an agricultural-based society, water is always considered a precious commodity. The life of the people revolves around water. Therefore, our ancestors paid greater attention to conserving and controlling water through suitable technology and societal commitments. One of the techniques developed and deployed in water management, particularly in medieval Tamil Nadu, is sluice-based tank irrigation. This well-demonstrated indigenous technology was deployed in tank irrigation that transformed society through multi-fold surplus agricultural production. The intensive explorations carried out in Tamil Nadu by various institutions and individuals brought to light, a large amount of data on ancient irrigation systems. The inscriptions engraved on the sluices provided substantial information on the nature of technological adaptability and sustainability. The emergence of new hydraulic technology in the early part of the seventh century CE and its impact on society are immense and immeasurable. It is quite admirable and appreciable that earlier explorers took all the pains to document the inscriptional details of their findings. Their faithful documentation helped to formulate a hypothesis, and it was field-tested for better understanding. Lack of human and financial resources and zone-specific documentation hindered them from seeing the data in its totality. Further, the interpretations of data in the backdrop of the historical, geological, geomorphological and technological contexts of the ancient tanks provided new insight into the indigenous irrigation system. The field observations and interactions with the villagers provided ample scope to understand the technical terms used in the sluice inscriptions.

More than two hundred sluice inscriptions were documented, digitized, described and discussed in the present manuscript. The vast amount of literary, epigraphical and archaeological data was integrated, and it has been adequately visualised through the maps and figures. I must admit that the study is exclusively restricted to tank irrigation due to paucity of time. If one compares this ancient tank irrigation system with other irrigation systems, particularly with river-based irrigation systems, then one may draw a better picture of the difference between these two water management systems and their role in shaping and reshaping society over the years. The future study in this direction would further enhance our understanding of the wisdom of our ancestors in water management systems. My debates, discussions and deliberations with my colleagues are so frequent and intense. These academic debates and deliberations might have led to unconsciously appropriating their valuable knowledge and insightful thoughts into this work. Therefore, the present work may be considered as the collective wisdom of the entire team.

நன்றி

தமிழ்நாட்டில் உள்ள குமிழிக் கல்வெட்டுகளை அடையாளம் கண்டு ஆவணப்படுத்தும் இந்தத் திட்டத்தில் உற்சாகத்துடனும் உத்வேகத்துடனும் உழைத்த அனைவரையும் இந்த நேரத்தில் நினைவுகூர்ந்து நன்றி கூற கடமைபட்டுள்ளேன். இந்தப் பணி பிரிட்டிஷ் நூலகத்தின் அழிவுநிலையில் இருக்கின்ற ஆவணங்களைப் பாதுகாக்கும் திட்டத்தின் *(Endangered Archives Program)* நிதியுதவியுடனும் அர்கேடியா *(ARCADIA)* துணையுடனும் நடைபெற்றது. இரண்டு கட்டங்களாக இந்த நிதியுதவி வழங்கப்பட்டது. முதல் கட்டத்தில் (2021-2022) புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள குமிழிக் கல்வெட்டுகளும், இரண்டாம் கட்டத்தில் (2023-2025) தமிழ்நாடு முழுவதும் உள்ள குமிழிக் கல்வெட்டுகளும் ஆவணப்படுத்தப்பட்டன. பிரிட்டிஷ் நூலகத்தின் திட்ட மேலாளரான முனைவர் ரூத் ஹன்ஸ்போர்ட் அவர்களுக்கும், நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் பற்றிய கல்வெட்டுத் தகவல்களைத் தொடர்ச்சியாகப் பகிர்ந்து உதவிய முதன்மைக் காப்பாட்சியர் முனைவர் ஜோடி பட்டர்வொர்த் அவர்களுக்கும் நான் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தப் பணி தடையில்லாமல் தொடர, தொடர்ச்சியான நிர்வாக மற்றும் நிதி ஆதரவை நல்கியவர்கள் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், மாண்பமை அமைச்சர், நிதித்துறை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு, திரு. த. உதயசந்திரன் இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர், நிதித்துறை மற்றும் தொல்லியல் துறை ஆணையர், டாக்டர் க.. மணிவாசன் இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தொல்லியல்துறை ஆகியோர் தங்களது அயராத பணிக்கிடையில் இந்நூலுக்கு நுண்மாண் நுழைபுலம் மிக்க அணிந்துரை நல்கி நூலை அலங்கரித்த அமைச்சர் பெருமகனாருக்கும், முதன்மைச் செயலாளர், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களுக்கும் எனது அளவுகடந்த நன்றிகளை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

இரண்டாம்கட்ட ஆவணப்படுத்தும் திட்டத்திற்கான நல்கையை பிரிட்டிஷ் நூலகம், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் வழியாக வழங்கி உதவியது. இதற்கு பேருதவி புரிந்த அந்நூலகத்தின் இயக்குநர் முனைவர் சுந்தர் கணேசன் அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன். அந்நூலக அலுவலர் திரு. இரா.பிரகாஷ் இத்திட்டம் செவ்வனே செயல்பட தேவையான அனைத்து உதவிகளையும் நல்கி ஆவணப்படுத்தல் முழுமை பெற உதவி புரிந்தார். அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி.

நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் சார்ந்த கல்வெட்டுத் தரவுகளை வழங்கி உதவிய பேராசிரியர் எ. சுப்பராயலு, பேராசிரியர் சு. இராஜவேலு மற்றும் முனைவர் ம. பவானி ஆகியோருக்கு நன்றி. இந்தக் கள ஆய்வு திறம்பட நிறைவேற பல ஆய்வாளகளும் தனி மனிதர்களும் உதவி புரிந்தனர். அவர்களுள் ஓய்வு பெற்ற ஆசிரியரும் மேலப்பனையூரைச் சேர்ந்தவருமான திரு. கரு. இராஜேந்திரன் அவர்கள் புதுக்கோட்டைப் பகுதியில் குமிழிக் கல்வெட்டுகள் இருக்கும் இடங்களைக் கண்டறிய பெரிதும் உதவினார். குமிழிக் கல்வெட்டுகள் இருக்கின்ற எல்லா இடங்களுக்கும் எங்களோடு பயணித்து

மிகுந்த ஆர்வத்தோடு ஆவணப்படுத்தும் பணியில் ஈடுபட்டு தமது பங்களிப்பை தொடர்ந்து அளித்த அவருக்கு எனது நன்றி.

தமிழ்ப் பல்கலைக்கழக ஆய்வு மாணவர் திரு. இரா. கார்த்திகேயன் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழக மைப்படி உதவியாளர் திரு. எம். செல்வராஜ் ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் இருவரும் இந்தத் திட்டத்தின் முதுகெலும்பாகச் செயல்புரிந்தார்கள். தமிழ்நாடு முழுவதும் பயணித்து இருநூறுக்கும் மேற்பட்ட குமிழிக் கல்வெட்டுகளை ஈடுபாட்டுடனும் மிகுந்த கவனத்துடனும் ஆவணப்படுத்தினர். இவர்களின் ஒத்துழைப்பும் ஈடுபாடும் உறுதியும் இன்றி இந்த நூல் வெளிவந்திருக்காது.

கல்வெட்டுகளுடன் கூடிய எல்லாக் குமிழிகளும் கழுத்தளவு தண்ணீரிலோ அல்லது முட்டியளவு தண்ணீரிலோ இருந்தன. இந்தக் குழுவின் உதவியில்லாமல் இந்தக் கல்வெட்டுகளின் மைப்படியை எடுப்பதற்கோ கள ஆய்வை மேற்கொள்வதற்கோ வேலையை முழுமையாக முடிப்பதற்கோ இயலாமல் இருந்திருக்கும். குழுவைச் சேர்ந்தவர்கள்: திரு. கணேசன், தஞ்சாவூர்; முனைவர் இரா. ஆனந்தகுமார், வருகைதரு பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்; திரு. கு. கருணாகரன், புதுக்கோட்டை; திரு. தெ. ஜான் பீட்டர், ஜெயங்கொண்டம்; திரு. வீ. பரந்தாமன், புத்தாநத்தம்; திரு. பாலமுருகன், தாசில்தார், திருவண்ணாமலை; முனைவர் கோ. மதிவாணன், வருகைதரு பேராசிரியர், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி மற்றும் திரு. க. இராஜேஷ், மடூர், கள்ளக்குறிச்சி. குமிழிக் கல்வெட்டுகளைப் படியெடுக்க அனுமதியளித்த திண்டிவனம் மற்றும் விழுப்புரம் மாவட்ட பொறியியல் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஆணையர், அரசு அருங்காட்சியகம் ஆகியவர்களுக்கு எனது நன்றி.

என்னுடன் பணிபுரியும் முனைவர் இரா. சிவானந்தம், இணை இயக்குநர் மற்றும் முனைவர் வி.ப. யதீஸ்குமார், துணை இயக்குநர், தமிழ்நாடு தொல்லியல் துறை, இந்தியத் தொல்லியல் துறைத் துணைத் தொல்லியல் கண்காணிப்பாளர்களான முனைவர் வி.முத்துகுமார், திரு. மு. இராஜேஷ் மற்றும் திரு. மோ. பிரசன்னா ஆகியோருக்கு எனது நன்றி. இவர்கள் எப்பொழுதும் இந்தப் பணி சார்ந்து கலந்துரையாடி ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்தி இந்தப் பணி முடிவடைய உதவி புரிந்தனர். முனைவர் பா. பாலமுருகன், துணைக் கல்வெட்டாய்வாளர், இந்தியத் தொல்லியல் துறை, கல்வெட்டுகளைப் படிக்க உதவிபுரிந்தார். திரு. வீரராகவன் மற்றும் திருமதி. மங்கையர்க்கரசி வீரராகவன் ஆகியோர் விழுப்புரத்திலும் அதனைச் சுற்றிலும் இருந்த குமிழி தொடர்பான தகவல்களை வழங்கினர். திரு. இளந்தென்றல், திருமதி ரா. மனோரூபினி, திரு. கே.வி.கே. முல்லைவேந்தன் ஆகியோர் நூல் உருவாக்கத்திலும் தகவல்களை முறைப்படுத்துவதிலும் உதவினர். இவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள் பல.

முனைவர் முத்து வெ. பிரகாஷ், துணைப் பேராசிரியர், ஆசியவியல் துறை, டெக்சாஸ் பல்கலைக்கழகம், ஆஸ்டின், அமெரிக்கா, இந்த நூலைக் கவனமாகப் படித்துப் பிழை திருத்தம் செய்து ஒழுங்கமைத்து குறிப்பிடத்தகுந்த தகவல்களை வழங்கினார். இந்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பில் முக்கிய பங்காற்றினார். அவருக்கு எனது நன்றிகள். முனைவர் வி.ப. யதீஸ்குமார் அவர்களுடன் இணைந்து திறம்பட வரைபடங்களை உருவாக்கிய முனைவர் கௌ. முத்துசங்கர், பாண்டிச்சேரி பிரஞ்சு

ஆய்வு நிறுவனம், அவர்களுக்கு எனது நன்றி. இந்தத் தருணத்தில் எனக்குக் கல்விபுகட்டிய ஆசிரியர்கள், வழிகாட்டிய ஆய்வாளர்கள், மாணவர்கள், உடன்பணிபுரிபவர்கள் மற்றும் நண்பர்கள் எப்பொழுதும் கருத்துகள் கூறியும் விமர்சனம் செய்தும் ஆலோசனையும் வழங்கி உதவுகிறார்கள், இவர்ளுக்கு என்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். இறுதியாக, நான் பொறுமையுடனும் அமைதியோடும் பணிபுரிய உறுதுனையாக விளங்கும் என் துணைவி சசிராஜன் அவர்களுக்கு என் நன்றி.

Acknowledgements

With immense pleasure, I place on record to gracefully and gratefully acknowledge all the good hearts who had enthusiastically and energetically accompanied me in the field and shouldered the responsibility of exploring, identifying, documenting and deciphering the sluice inscriptions of Tamil Nadu with total dedication and determination. The present work is carried out with the financial support extended by the British Library under the Endangered Archives Programme supported by Arcadia Fund (ARCADIA). The grant was provided in two phases. In the first phase, the documentation of sluice inscriptions was restricted to Pudukkottai region (2021-2022) and in the second phase (2023-2025), the entire Tamil Nadu has been taken into account. I am extremely grateful to the British Library and Dr. Ruth Hansford, Programme Manager and Dr. Jody Butterworth, Lead Curator for their sustained academic support by providing inscriptional data on irrigational technology.

The present work is the result of the constant financial and administrative support received from Thiru. Thangam Thennarasu, Honourable Minister for Finance and Environment, Climate Change and Archaeology, Thiru. T. Udhayachandran IAS., Principal Secretary and Dr. K. Manivasan IAS., Principal Secretary to the Government of Tamil Nadu, Tourism, Culture, and Religious Endowments Department. The Minister and Principal Secretaries adorned the book with their insightful forewords. I profusely thank them all.

The second phase of the sluice documentation was carried out with the financial help of the British Library, routed through Roja Muthiah Research Library. I am indebted to Dr. Sundar Ganesan and Thiru. R. Prakash of the RMRL for providing the necessary timely help to accomplish the task.

I express my sincere thanks to Prof. Y. Subbarayalu, Prof. S. Rajavelu and Dr. M. Bavani for providing inscriptional data on irrigational technology. The successful completion of the fieldwork owes a lot to the excellent cooperative spirit displayed by several scholars and individuals. Among them, Thiru. Karu. Rajendran, Retired Teacher, Melappanaiyur who inspired a lot by sharing his knowledge to locate quite a number of sluice inscriptions in Pudukkottai region. He enthusiastically accompanied the team throughout the field studies of Pudukkottai region by taking personal interest in the subject. Thiru. R. Karthikeyan, Research Scholar, Tamil University and Thiru. M. Selvaraj, Estampage Assistant, Tamil University deserves a special mention. They were the backbone of the project. They explored throughout Tamil Nadu, judiciously and devotedly documented more than two hundred sluice inscriptions. Without their cooperative spirit, dedication and determination, the present monograph could not have seen the light of the day.

All the sluices with inscriptions are in neck-deep or knee-deep waters. It is impossible to take estampages without the help of other team members who have accompanied on the field trips now and then to accomplish the task. I gratefully record my indebtedness with a sense of appreciation and admiration to Thiru. Ganesan, Thanjavur; Dr. R. Anandakumar, Guest Lecturer, Tamil University, Thanjavur; Thiru. K. Karunakaran, Pudukkottai; Thiru. T. John Peter, Jeyangkondam; Thiru. V. Paranthaman, Puttanattam; Thiru. Balamurugan, Tashildar, Tiruvannamalai; Dr. K. Mathivanan, Guest Lecturer, Manonmaniam Sundaranar University, Tirunelveli and Thiru. K. Rajesh, Madur, Kallakurichi. Special thanks to the Superintending Engineers of Tindivanam and Villupuram and the Commissioner, Government Museums for permitting us to copy the sluice inscriptions in their office premises.

My colleagues Dr. R. Sivanantham, Joint Director and Dr. V.P. Yathees Kumar, Deputy Director, Tamil Nadu State of Archaeology, Dr. V. Muthukumar, Mr. M. Rajesh and Mr. M. Prasanna, Assistant Superintending Archaeologists, Archaeological Survey of India deserve special thanks as they always encourage and motivate me to accomplish the designated task. Dr. P. Balamurugan, Assistant Epigraphist, Archaeological Survey of India helped in deciphering the inscriptions. Thiru. Veeraraghavan and Smt. Mangairkarasi Veeraraghavan provided all the information reported in and around Villupuram. Mr. Elanthendral SR, Mrs. R. Manoorubini, Mr. K.V.K. Mullai Venthan helped immensely in the preparation of the manuscript and organising the entire data.

Dr. Muthu V. Prakash, Assistant Professor, Department of Asian Studies Texas University, Austin, USA extended his invaluable help by going through the manuscript meticulously and provided critical information and suggestions for the improvement of the monograph. He took care of the translation of the manuscript into Tamil. I gratefully record my gratitude with sense of appreciation and admiration.

I thank Dr. G. Muthusankar, French Institute of Pondicherry for the excellent maps prepared in association with Dr. V.P. Yathees Kumar. My debt of gratitude widens considerably to my teachers, senior scholars, colleagues and friends for the advice, suggestions and criticism. Lastly, to my wife Sasirajan for allowing me to work in peace.

ஒளிப்படங்கள்
Figures

படம் Fig.	1	:	தோலாவீரா: நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் Dholavira: Water harvesting structures
படம் Fig.	2	:	கொடுமணல்: நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் Kodumanal: Water harvesting structures
படம் Fig.	3	:	தமிழ்நாட்டில் அகழாய்வில் கிடைத்த நெல்மணிகள் (அ-ஈ: சிவகளை உ-ஊ: பொருந்தல்) Paddy grains collected from excavated trenches in Tamil Nadu (A-D: Sivagalai E-F: Porunthal)
படம் Fig.	4	:	குளநீர்பரப்பின் விளிம்பில் காணப்படும் இரும்புக்காலப் பெரும்படைச் சின்னங்கள் (அ-இ: தாயினிப்பட்டி ஈ-உ: வத்தனாக்குறிச்சி) Tank with Iron Age megalithic graves in a water spread area (A-C: Tāyiṉipaṭṭi D-E: Vattaṉākkuṟichi)
படம் Fig.	5	:	கல்வெட்டுகளின் இருப்பிடங்கள் (அ: மேலப்பனையூர் ஆ: குன்னத்தூர் இ: அன்னவாசல் ஈ: ராசாலிப்பட்டி உ: பின்னங்குடி ஊ: ஆடையூர்) Location of inscriptions (A:Mēlappanaiyūr B:Kuṉṉattūr C:Aṉṉavāsal D:Rāsālipaṭṭi E:Piṉṉaṅguḍi F:Āḍaiyūr)
படம் Fig.	6	:	குழு உறுப்பினர்கள் மைப்படி எடுத்தல்(அ: ராப்பூசல் ஆ: ஒடுக்கூர் இ: மதுராந்தகம் ஈ: ஒடுக்கூர்) Team members taking estampages (A: Rāpūsal B: Oḍukkūr C: Madurāntakam D: Oḍukkūr)
படம் Fig.	7	:	குழு உறுப்பினர்கள் மைப்படி எடுத்தல் (அ: நெடுவயல் ஆ: குளவாய்பட்டி இ: ஜமீன் இலந்தைகுளம் ஈ: ஆரியூர் உ: பாண்டுரார்பட்டி) Team Members taking estampages (A: Neḍuvayal B: Kuḷavāypaṭṭi C: Jamīṉ Ilantaikuḷam D: Āriyūr E: Pāṇḍurārpaṭṭi)
படம் Fig.	8	:	வட்டெழுத்து வரிவடிவத்தில் குமிழிக்கல்வெட்டுகள் (அ: மடவர்விளாகம் ஆ: ஜமீன் இலந்தைகுளம் இ: மேல்நீலிதநல்லூர் ஈ: வாஞ்சிபட்டி) Sluice inscriptions in Vaṭṭeḻuttu character (A: Maḍavarviḷākam B: Jamīṉ Ilantaikuḷam C: Mēlnīlitanallūr D: Vāñjipaṭṭi)

படம் Fig.	9	:	கிரந்த வரிவடிவத்தில் குமிழிக் கல்வெட்டுகள் *(அ: மடவர்விளாகம் ஆ: மேலஉரப்பனூர் இ: நிலையூர்)* Sluice inscriptions in Grantha character (A: Maḍavarviḷākam B: Mēlur̲appan̲ūr C: Nilaiyūr)
படம் Fig.	10	:	குமிழிகளின் பொதுத் தோற்றம் *(அ: ஆரியூர் ஆ: மேல்நீலிதநல்லூர் இ: ஆரியூர் ஈ: சின்னபாண்டராபட்டி உ: ஒடுக்கூர்)* General view of the sluices (A: Āriyūr B: Mēlnīlitanallūr C: Āriyūr D: Chin̲n̲apāṇḍarāpaṭṭi E: Oḍukkūr)
படம் Fig.	11	:	வழிபாட்டில் குமிழிகள் *(அ: செம்பகம்பேட்டை ஆ-இ: முடக்குமீனாண்டிபட்டி ஈ: சத்தியமங்கலம் உ: வாழமங்கலம் ஊ: கவிநாட்டு கண்மாய்)* Sluices under worship (A: Sempakampēṭṭai B-C: Muḍakkumīnāṇḍipaṭṭi D: Satyamaṅgalam E: Vāḻamaṅgalam F: Kavināṭṭu kaṇmāi)
படம் Fig.	12	:	ஸ்ரீ குணமிலி பட்டப்பெயருடன் காணும் ஆனத்தூர் குமிழிக் கல்வெட்டு *(இக்குமிழித்தூண் அங்கிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டு திண்டிவனம் பொதுபணித்துறை அலுவலக வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளது)* Ān̲attūr: Sluice inscription with title Sri Kuṇamili (The inscribed pillar removed from the tank and housed in the PWD office, Tindivanam)
படம் Fig.	13	:	அகமடை *(அ-ஆ: ராப்பூசல் இ: மதுராந்தகம் ஈ: கவிநாட்டு கண்மாய் உ: தேனேரிபட்டி)* *Akamaḍai* (inner structure) (A-B: Rāpūsal C: Madurāntakam D: Kavināṭṭu kaṇmāi E: Tēn̲ēripaṭṭi)
படம் Fig.	14	:	புறமடை *(அ: கவிநாட்டு கண்மாய் ஆ: நிலையூர்)* *Pur̲amaḍai* (outer structure) (A: Kavināṭṭu kaṇmāi B: Nilaiyūr)
படம் Fig.	15	:	தூம்பு *(அ: மேலப்பனையூர் ஆ: விரலூர் இ: ஆரியூர் ஈ: பழங்கரை)* *Tūmpu* (conduit) (A: Mēlappan̲aiyūr B: Viralūr C: Ariyūr D: Palaṅkarai)
படம் Fig.	16	:	திருப்பத்தூர்: கலிங்கு Tiruppattūr: *Kalingu* (weir)
படம் Fig.	17	:	குமிழியில் காணும் முற்காலக் கல்வெட்டுகள் *(அ-ஆ: ராசாலிப்பட்டி இ-ஈ: கவிநாட்டு கண்மாய்)* Sluices with early inscriptions (A-B: Rāsālipaṭṭi C-D: Kavināṭṭukaṇmāi)

படம் Fig.	18	:	குமிழியின் பொதுத் தோற்றம் *(அ: ஆரியூர் ஆ: ராப்பூசல் இ: வடசேரிபட்டி)* General view of the sluice (A: Ariyūr B: Rāpūsal C: Vaḍasēripaṭṭi)
படம் Fig.	19	:	குமிழிகளின் பொதுத் தோற்றம் *(அ-ஆ: ராசிபுரம் இ: மேலப்பனையூர் ஈ: விசலூர் உ-ஊ: செம்பாட்டூர் எ: ஜமீன் இலந்தைகுளம்)* General view of the *Kumuḻi* (sluices) (A-B:Rāsipuram C:Mēlappanaiyūr D:Visalūr E-F:Sempāṭṭūr G:Jamīṉ Ilantaikuḷam)
படம் Fig.	20	:	சாத்துக்கல், சேறோடி, மிண்டகம் *(அ-ஆ: கொன்னையூர் இ-ஈ: நெய்வாசல் உ: கோட்டையூர் ஊ: சத்தியமங்கலம்)* *Sāttukkal, Cērōḍi and Minḍakam* (Retaining slab, sledge remover and vertical rod) (A-B: Koṉṉaiyūr C-D: Neyvāsal E: Kōṭṭaiyūr F-G: Satyamaṅgalam)
படம் Fig.	21	:	காலுடன் கூடிய புறமடை *(அ: கவிநாட்டு கண்மாய் ஆ: நிலையூர்)* *Puṟamaḍai with kāl* (outer spill-over basin and channels) (A: Kavināṭṭu-kaṇmāi B: Nilaiyūr)
படம் Fig.	22	:	குமிழியின் பல்வேறு கூறுகள் Various components of the sluice

நிலப்படங்கள்
Maps

நிலப்படம் Map	1	:	தமிழ்நாட்டின் நிலப்பொதியியல் Geology of Tamil Nadu
நிலப்படம் Map	2	:	தமிழ்நாட்டின் நிலப்புறவியல் Geomorphology of Tamil Nadu
நிலப்படம் Map	3	:	தமிழ்நாட்டின் நிலவகைப்பாடு Land use pattern in Tamil Nadu
நிலப்படம் Map	4	:	தமிழ்நாட்டின் நிலவியல் Physiography of Tamil Nadu
நிலப்படம் Map	5	:	தமிழ்நாட்டின் வேளாண்-காலநிலை வட்டாரங்கள் Agro-climatic zones of Tamil Nadu

நிலப்படம் Map	6	:	தமிழ்நாட்டில் குமிழிகள் உள்ள இடங்கள் Sluices yielding sites in Tamil Nadu
நிலப்படம் Map	7	:	வடதமிழ்நாட்டில் குமிழிகள் உள்ள இடங்கள் Sluices yielding sites in Northern Tamil Nadu
நிலப்படம் Map	8	:	மத்திய தமிழ்நாட்டில் குமிழிகள் உள்ள இடங்கள் Sluices yielding sites in Central Tamil Nadu
நிலப்படம் Map	9	:	தென்தமிழ்நாட்டில் குமிழிகள் உள்ள இடங்கள் Sluices yielding sites in Southern Tamil Nadu
நிலப்படம் Map	10	:	அரசமரபு சார்ந்த குமிழிக் கல்வெட்டுகள் Dynastic wise sluice inscriptions
நிலப்படம் Map	11	:	காலவரிசையில் குமிழிக் கல்வெட்டுகள் Sluices inscriptions in chronological order
நிலப்படம் Map	12	:	Technical terms related to hydraulic device நீரியல் தொழிநுட்பம் சார்ந்த தொழிநுட்பச் சொற்கள்

அட்டவணை
Table

அட்டவணை Table	1	:	தமிழ்நாட்டில் மாவட்டவாரியாக உள்ள குளங்கள் District-wise list of tanks in Tamil Nadu

பின்னிணைப்பு
Appendix

பின்னிணைப்பு Appendix	I	:	தமிழ்நாட்டில் ஆவணப்படுத்தப்பட்ட குமிழிகல்வெட்டுகளின் பட்டியல் List of documented sluice inscriptions in Tamil Nadu
பின்னிணைப்பு Appendix	II	:	குமிழிக் கல்வெட்டுகள் உள்ள இடங்களுடன் அட்ச-தீர்க்க ரேகை பட்டியல் List of Sluice yielding Sites with Geo-coordinates

Abbreviations

1.	*ARE*	-	*Annual Report on Indian Epigraphy*
2.	*CE*	-	*Common Era*
3.	*EI*	-	*Ephigraphia Indica*
4.	*IPS*	-	*Inscriptions of Pudukkottai State*
5.	*SII*	-	*South Indian Inscriptions*

சொற்சுருக்க விளக்கம்

1.	*இ.க.தொ.*	-	*இந்திய கல்வெட்டுத் தொகுதி*
2.	*க.ஆ.*	-	*கல்வெட்டு ஆண்டறிக்கை*
3.	*தெ.க.தொ.*	-	*தென்னிந்தியா கல்வெட்டுத் தொகுதி*
4.	*பு.க.தொ*	-	*புதுக்கோட்டை மாவட்ட கல்வெட்டுத் தொகுதி*
5.	*பொ.ஆ*	-	*பொது ஆண்டு*

Note on Diacritical Marks

The scheme of transliteration used in this book is given below. All the place names are phonetically transcribed. While writing place names, the present familiar forms of pronunciation are generally adopted to overcome the regional variation. The following is the system of phonetic transcription.

Ā / ā	ஆ
Ī / ī	ஈ
Ū / ū	ஊ
Ē / ē	ஏ
Ō / ō	ஓ
k / g	க்
ṅ	ங்
c / ch	ச்
ñ	ஞ்
ṭ / ḍ	ட்
ṇ	ண்
t / th / d / dh	த்
p / b	ப்
i / y	ய்
ḷ	ள்
ḻ	ழ்
ṟ	ற்
ṉ	ன்

மரபுசார் நீர் மேலாண்மை

தமிழ்நாட்டில் குமிழித் தொழில்நுட்பம்

Traditional Water Management

Sluice Technology in Tamil Nadu

மரபுசார் நீர் மேலாண்மை

தமிழ்நாட்டில் குமிழித் தொழில்நுட்பம்

உலகில் தொழிற்புரட்சி ஏற்படும்வரை இந்தியாவின் முக்கிய வாழ்வாதாரமாக இருந்தது வேளாண்மை என்றால் மிகையாகாது. இன்றும் இந்திய நாட்டின் வேளாண்மை பெரும்பாலும் பருவமழையைச் சார்ந்தே இருக்கிறது. காலம் தவறிய பருவமழை வேளாண் உற்பத்தியைச் சிதைத்துப் பொருளாதாரத் தாக்கத்தைச் சமூகங்களுக்கிடையே ஏற்படுத்துகிறது. எனவே ஒரு சமூகம் செழுமை பெற பெரும்பாலும் நீர்ப்பாசனக் கட்டமைப்பை சார்ந்துள்ளது. நீரைத் திறம்படச் சேகரித்தல், சேமித்தல், பேணுதல், பாதுகாத்தல் மற்றும் பகிர்தல் ஆகியவை வளமான சமூகத்தின் அடிப்படைத் தேவைகளாகும். இவற்றின்பால் நமது முன்னோர்கள் கவனமுடன் செயலாற்றி வந்துள்ளனர். தொன்றுதொட்டு நமது முன்னோர்கள் நீர் மேலாண்மையில் அளித்துவந்த கவனம், இன்றைய நமது வரையறுக்கப்பட்ட நீர் வளத்தின் நேரடி விளைவாகும். மேலும் சமூக வளர்ச்சிக்கு இந்த நீர் வளத்தைப் பாதுகாப்பது நமது அடிப்படைத் தேவையாகும். நாட்டில் உள்ள ஒவ்வொரு நிலப்பகுதியும் தன் உள்ளூர் நிலவியல் தன்மைக்கு ஏற்றவாறு நீர்ச் சேகரிப்பு நுட்பங்களைத் தொன்றுதொட்டுக் கடைப்பிடித்து வந்துள்ளது. இத்தொழில்நுட்பங்களின் அடிப்படை நோக்கம் என்பது இயற்கையாகக் கிடைக்கும் மழைநீரைத் திறம்படச் சேகரித்து அதைச் சமூகத்தின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்த வேண்டும் என்பதே ஆகும்.

இந்தியாவில் பல்வேறு மரபுசார் தொழில்நுட்ப முறைமைகள் அந்தந்த நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்டு, ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, தொழில்நுட்பக் குறைபாடுகள் இருப்பின் அவை நீக்கப்பட்டு, முறைப்படுத்தப்பட்டுப் பயன்பாட்டில் தொடர்ந்து நிலைபெற்று வந்துள்ளன. அத்தகைய ஒரு இன்றியமையாத பொறியியல் தொழில்நுட்பமாக நீரியல் அல்லது நீர்மேலாண்மைத் தொழில்நுட்பம் திகழ்கிறது. எடுத்துக்காட்டாக, ராஜஸ்தானின் வறண்ட பாலைவனப் பகுதியில் டங்கா நீர் அறுவடை முறை உருவாக்கப்பட்டது. மழைநீரைச் சேகரிக்க ஒரு உருளை வடிவ நிலத்தடிக் குழி பயன்படுத்தப்பட்டது. மழைக்காலங்களில் நீர் சேகரிக்கப்பட்டு முழுமையாக நிரப்பப்பட்ட டங்கா எனும் நீர்ப்பிடிப்புக் குழியானது ஐந்து அல்லது ஆறு பேர் கொண்ட குடும்பத்திற்குக் கோடைக் காலத்தில் போதுமானதாக விளங்கும். இந்த முறையின் மூலம் அச்சமூகம் தங்கள் நீர்த் தேவைகளில் தன்னிறைவு பெற்றதாக விளங்கியது. அவர்களுக்கு நீர்ப் பாதுகாப்பை வழங்குவதற்கான ஒரு முக்கிய கருவியாக இது செயல்பட்டது எனலாம். இவ்வகையான நீர்ப் பாதுகாப்பு சார்ந்த நீர் மேலாண்மை சிந்துவெளி நாகரிகக் காலத்திலிருந்தே குறிப்பாக வறட்சிப் பகுதிகளான குஜராத் மாநிலத்தின் சௌராஷ்டிரா, கட்ச் வளைகுடா போன்ற பகுதிகளில் பயன்பாட்டில் இருந்துள்ளதை தோலாவீராவில் நடத்தப்பட்ட அகழாய்வுகள் எடுத்துரைக்கின்றன (படம் 1). இரு மழைநீர் வாரிகளுக்கு இடையில் ஒரு சரிவில் அமைக்கப்பட்ட தோலாவீரா குடியிருப்புகள் மழைநீரை நிலத்தடி நீர்க்கால்கள் மூலம் சேகரித்துப் பயன்படுத்தி உள்ளனர். இது பண்டைய நீர்மேலாண்மைப் பொறியியலுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு எனலாம். சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம் நீர்ச் சேகரிப்பு முறைகளைப் பயன்படுத்தி நீர்ப்பாசனம் செய்வதைக் குறிப்பிடுகிறது. மஹாசத்ரபா ருத்ரதாமனின் ஜூனாகட் கல்வெட்டு, கடுமையான புயலால்

பாதிக்கப்பட்ட பழங்கால சுதர்சன ஏரியில் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்ப்புப் பணிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது (இ.க.தொ. VIII: 45-49). பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகரின் தாத்தா சந்திரகுப்த மௌரியரின் காலத்தில் இவ்வேரி கட்டப்பட்டது என்பதை கிர்னார் மலைக் கல்வெட்டு நமக்கு எடுத்துரைக்கிறது. இவ்வேரி முந்நூறு ஆண்டுகளுக்குப் பின்பு மஹாசத்ரபா ருத்ரதாமனின் காலத்தில் பழுது பார்க்கப்பட்டமை நீர் மேலாண்மைக்கு அவர்கள் அளித்த முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது. இத்தகைய உன்னதமான பணிகளை ஆரம்பகால பௌத்த மற்றும் சமணத் தொல்லியல் மையங்களில் காணலாம். அலகாபாத்திற்கு அருகிலுள்ள சிருங்கவேர்புராவில், கங்கை நதியின் வெள்ளநீரைச் சேமிக்க நிலத்தின் இயற்கையான சரிவைப் பயன்படுத்தி ஒரு அதிநவீன நீர்ச் சேகரிப்பு அமைப்பு எழுப்பப்பட்டது. போபாலின் மன்னர் போஜா இந்தியாவின் மிகப்பெரிய செயற்கை ஏரியைக் கட்டினார். இது போன்ற பல நீர்மேலாண்மை முயற்சிகள் இந்தியாவில் நடைபெற்றுள்ளன. ராஜஸ்தானின் ஜாலராக்கள், காதின்கள், குண்ட்ஸ் மற்றும் பிவாரிஸ், புந்தேல்கண்டின் தலாப்கள், தெற்கு பீகாரின் அஹர் பைன்கள், கேரளாவின் வயநாட்டின் பனம்-கேணிகள், நாகாலாந்தின் ஜாபோ, மேகாலயாவின் மூங்கில் குழாய்கள், அருணாச்சலப் பிரதேசத்தின் அபதானி, இமாச்சலப் பிரதேசத்தின் குல், அசாமின் டோங்க் மற்றும் தமிழ்நாட்டின் குளங்கள், கண்மாய்கள், ஏந்தல்கள், ஏரிகள் பண்டைய நீர்மேலாண்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும் (Bhattacharya 2015:30-38). சோழ மன்னன் கரிகாலன் காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டியெழுப்பினான் என்பதும், அக்கல்லணை இன்றும் செயல்பாட்டில் உள்ளது என்பதும் வரலாறாகும். அண்மையில் கொடுமணலில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் நீர்ச்சேமிப்பு முறை இருந்துள்ளதை அங்கு வெளிப்பட்ட கல்லாலான கட்டுமானப்பகுதி நமக்கு உணர்த்துகிறது (படம் 2). இந்தப் பாரம்பரிய நீர்ப்பாசனத் தொழில்நுட்பங்களை ஹரப்பன் காலத்திலிருந்து நிலவும் பல்வேறு வகையான சிறந்த நீர்மேலாண்மை அமைப்புகள் எனக் குறிப்பிடலாம்.

தமிழ்நாடு அதிகப்படியான மழைப்பொழிவு, காலம் தவறிய மழைப்பொழிவு, பருவமழை பொய்த்துப்போதல் போன்றவற்றினால் பல்வேறு காலநிலை மற்றும் நிலவியல் சிக்கல்களைக் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இவை எதிர்பாராத வெள்ளம் அல்லது வறட்சிக்கு வழிவகுத்தன. இத்தகைய இயற்கைச்சூழலில் வாழ்ந்த கடந்த காலச் சமூகங்களைச் சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு நீர் மேலாண்மை நுட்பங்களை வகுக்கக் கட்டாயப்படுத்தியது. வறண்ட பகுதிகளில் காணப்படும் பாரம்பரிய நீர் மேலாண்மை என்பது மழைநீரை அறுவடை செய்வதன் மூலம் நீர்ப்பாதுகாப்பைப் பேணுவதாகும். பல்லாண்டு கால அனுபவத்தைப் பயன்படுத்தி, வறண்ட பகுதிகளில் மழைநீரை அறுவடை செய்யவும், சேகரிக்கவும், சேமிக்கவும், பகிர்மானத்திற்கும் குளங்கள் கட்டியெழுப்பப்பட்டன. பாரம்பரிய தொழில்நுட்பத்துடன் கட்டியெழுப்பப்பட்ட குளங்கள் பல அண்மைக்கால நகரமயமாக்கலின் காரணத்தினால் செயல் இழந்த அல்லது புறக்கணிக்கப்பட்ட நிலையில் உள்ளன. ஆனாலும், சில குளங்கள் பண்டைய தொழில்நுட்பத்துடன் இன்றும் பயன்பாட்டில் உள்ளன. குறிப்பாகச் செங்கல்பட்டு, புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் பகுதிகளில் உள்ள குளங்களில் இன்றும் பயன்பாட்டில் உள்ள குமிழி தொழில்நுட்பம் சார்ந்த நீர்ப்பாசனம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். தமிழ்நாட்டின் குளங்களில், ஏரிகளில் காணப்படும் நீர்ப்பாசன முறை இந்தியாவின் பழமையான மற்றும் திறமையான நீர் மேலாண்மை

அமைப்புகளில் ஒன்றாகும். பொ.ஆ. 6ஆம் நூற்றாண்டிலிருந்து கல்வெட்டுகள் மூலம் அறியப்படும் இந்நீர்ப்பாசன முறை தொடர்ந்து 1500 ஆண்டுகளுக்கும் மேலாகத் திறம்படச் செயல்பட்டு வந்துள்ளதைக் கல்வெட்டுப் பதிவுகள் தெரிவிக்கின்றன. வேளாண்மை சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் கால்நடை வளர்ப்புக்கும் அப்பால் குளங்கள் வெள்ளக் கட்டுப்பாட்டு அமைப்பாகவும் செயல்படுகிறது, அதிக மழை பெய்யும் காலங்களில் மண் அரிப்பு மற்றும் மழை நீர் வீணாவதைத் தடுக்கிறது, மேலும் நிலத்தடி நீரை உயர்த்தவும் உதவிபுரிகிறது. குளங்கள் அல்லது ஏரிகள் இருவகைப்படும். முதல் வகை குளங்கள் ஆற்று நீரைக் கொண்டு நிரப்பப்படுவன. இரண்டாம் வகை குளங்கள் மழை நீரை நம்பி இருப்பவை. மேலும் ஒரு குளத்தில் பெறப்படும் அதிகப்படியான நீர் அடுத்த குளத்திற்குச் சென்றடையும் வகையில் குளங்கள் ஒன்றோடொன்று இணக்கப்பட்டுக் காணப்படும். இவ்வகை குளங்கள் கேஸ்கேட் (cascade tanks) அல்லது தொடர்பெருக்கிக் குளங்கள் எனப்படும். இதன்மூலம் பல கிராமங்கள் நீரின் பயன்பாட்டைப் பெறும். இந்த அமைப்பு மத்திய கர்நாடகாவில் கெரே எனவும், ஆந்திராவில் செருவு எனவும் அழைக்கப்படும். சுற்றுச்சூழல் ரீதியாகப் பாதுகாப்பானதும், பொருளாதார ரீதியாகச் சாத்தியமானதும் தொழில்நுட்ப ரீதியாக ஏற்புடையதுமான இவ்வகை குளங்கள் தொன்றுதொட்டு பொ.ஆ. 5ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் நின்று நிலவியதைக் குமிழி என்று அழைக்கப்படும் மடைகளில் நேரடியாக பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. தமிழ்நாட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த மிகச்சிறந்த குளம் சார் நீர் மேலாண்மை அமைப்பாக இதனைக் கருதலாம்.

நீர் அடிப்படைத் தேவையில் ஒன்றாக, விலை மதிப்பற்றதாக, எப்போதும் பேரம் பேசி விலை கொடுத்து வாங்கமுடியாத செல்வமாகக் கருதப்படுகிறது. நீர் சமூகத்தின் உயிர்வாழ்விற்கான ஒரு உயிர்நாடியாகச் செயல்படுகிறது. குறிப்பாக வறண்ட பகுதிகளில் காணப்படும் வேளாண்மை சார்ந்த பொருளாதாரத்தில் நீர் முதன்மைச் செல்வமாகக் கருதப்படுகிறது. நீதிமன்றம், அரசியல் மற்றும் சமூகத்தின் நேரடித் தலையீடுக்கும் அப்பால் காவேரி நதி நீரைப் பகிர்ந்துகொள்வதில் காணப்படும் சர்ச்சைக்குரிய தொடர் பிரச்சினையை இதற்குச் சிறந்த உதாரணமாகக் குறிப்பிடலாம். வேளாண்மை நடைமுறைகள், கால்நடைகளுக்குத் தேவைப்படும் தீவனம் மற்றும் ஒரு சில நேரங்களில் சமூகத்தின் சடங்குகள் என அனைத்து நடவடிக்கைகளும் நீரைச் சார்ந்தே இருப்பதால் தண்ணீரின் பங்கு மகத்தானதாகக் கருதப்படுகிறது. கால்நடை வளர்ப்பில் இருந்து வேளாண்மைக்குச் சமூகம் மாறியபோது அவர்களின் வாழ்வாதார முறையிலும் மாற்றம் ஏற்பட்டது. சமூகம் தம்மைச் சுற்றியுள்ள வளத்தின்பால் கவனத்தைத் திருப்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. புதிய குடியேற்றங்கள் மற்றும் நீர்வளம் நிறைந்த பகுதிகளில் ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவின் தோற்றம் ஆகியவை நீர் மீதான அவர்களின் கட்டுப்பாட்டை அதிகப்படுத்தியது. எனவே, நீர் உரிமையும், நீர்மேலாண்மையும் அவர்களின் வாழ்வில் தவிர்க்கமுடியாத அங்கமாகிவிட்டன. தமிழ்நாட்டில் செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் குளங்கள் அதிக அளவில் உருவாக்கப்பட்டன. நிலத்தின் தன்மை, காற்றில் காணப்படும் ஈரப்பதம், மழைப்பொழிவின் தன்மை மற்றும் குறைந்தபட்ச ஈரப்பதத்தைத் தக்கவைக்கும் மண்ணின் திறன் போன்ற நிலவியல், சூழலியல், இயற்பியல் காரணிகள் குளங்களின் தோற்றத்திற்கும், பரவலுக்கும் அது சார்ந்த நீர்ப்பாசனத்திற்கும் உகந்ததாகக் கருதப்படுகின்றன



நிலப்படம் 1: தமிழ்நாட்டின் நிலப்பொதியியல்



நிலப்படம் 2: தமிழ்நாட்டின் நிலப்புறவியல்



நிலப்படம் 3: தமிழ்நாட்டின் நிலவகைப்பாடு



நிலப்படம் 4: தமிழ்நாட்டின் நிலவியல்



நிலப்படம் 5: தமிழ்நாட்டின் வேளாண்-காலநிலை வட்டாரங்கள்

(நிலப்படம் 1-5). மேலும், சமூகத்தின் கூட்டு முயற்சி, அரசின் ஆதரவு மற்றும் உள்ளூர் நிர்வாகம் ஆகியவை குளம்சார்ந்த நீர்ப்பாசனத்தை நீண்டகாலம் உயிர்ப்புடன் வைத்திருந்தன. ஆட்சியாளர்களால் வெட்டப்பட்ட அல்லது கட்டியெழுப்பப்பட்ட குளங்கள் அறிஞர்களின் கவனத்தைப் பெற்ற அளவிற்குச் சமூகத்தின் கூட்டு முயற்சியால் கட்டியெழுப்பப்பட்ட குளங்கள் வரலாற்றாசிரியர்களின் கவனத்தைப் பெறவில்லை. ஏனெனில் அவற்றில் பெரும்பாலானவை கல்வெட்டுச் சான்றுகளை வழங்கவில்லை. இருப்பினும், தொடக்க வரலாற்றுக் காலத்திற்கு முன்பே, அனேகமாக இரும்புக் காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் குளம் சார்ந்த பாசனமுறை இருந்திருக்க வேண்டும் என்பதை இலக்கியச் சான்றுகள் நமக்கு உணர்த்துகின்றன.

நீர் மேலாண்மை என்பது சமூகத்தின் தவிர்க்கமுடியாத அங்கமாகும். குறிப்பாக, வறண்ட மண்டலங்களில் நீரின் பயன்பாடு முக்கியத்துவம் பெறுகிறது. எனவே, நீரைச் சேகரித்தல், சேமித்தல், பாதுகாத்தல், பேணல், ஆவியாதலைத் தடுத்தல், கசிவினை மட்டுப்படுத்துதல், நீர்ப் பகிர்வினை ஒழுங்குபடுத்துதல், பராமரித்தல் ஆகியவற்றில் சமூகம் தனிக்கவனம் செலுத்தியது. வறட்சிக் காலங்களில் ஏற்படும் நீர்ப்பற்றாக்குறையின் காரணமாகச் சமூகம் தண்ணீரின் மீதான தனது உரிமையை வலியுறுத்துகிறது அல்லது நிலைநிறுத்த முற்படுகிறது. கடுமையான நீர்ப் பற்றாக்குறை ஏற்படும்பொழுது அவை நீர்ப் பூசல்களுக்கு வழிவகுக்கின்றன. இதன் விளைவாகச் சமூகத்தில் பிணக்குகள் ஏற்படுகின்றன. எனவே அரசும், சமூகமும் நீர்ச்சேகரிப்பு, சேமிப்பு, பாதுகாப்பு மற்றும் பகிர்மானம் ஆகியவற்றில் மேம்பட்ட தொழிநுட்பத்தைக் கடைப்பிடித்து அதன் மூலம் சர்ச்சைகளைத் தணிக்கவும், ஏற்புடைய தீர்வுகளை காணவும் முயல்கிறது. இத்தகைய மேம்பட்ட நீர்மேலாண்மை வழிமுறைகள் மூலம் சிக்கலைத் தீர்த்து ஆக்கப்பூர்வமான பங்களிப்பையளித்து இன்றும் இந்தச் சமூகங்கள் செயலாற்றி வருகின்றன.

சங்க இலக்கியங்களில் காணப்படும் அருவி, ஏரி, கயம், குளம், ஆறு, பொய்கை, கிணறு, வாவி போன்ற சொற்கள் தமிழ்நாட்டில் நிலவிய ஆரம்பகால நீர்ப்பாசனம் தொடர்பான செய்திகள் எனலாம். பின்னர், குமிழி அல்லது மடை கல்வெட்டுகளுடன் கூடிய நீர்ப்பாசனக் குளங்கள் பொ.ஆ. 6 ஆம் நூற்றாண்டு முதல் அடையாளம் காணப்பட்டுள்ளன. பாசனப் பகுதியின் விரிவாக்கம் ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. பின்னர் இச்சமூகங்கள் தமது சமூகக் கட்டமைப்பின் மூலம் நீர் மற்றும் நிலத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டன. எனவே நிலத்தின் மீதான உரிமை என்பது சமூகத்தின் கட்டமைப்பில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தியது. எனவே, ஒரு குறிப்பிட்ட பகுதியின் சமூக இயக்கவியலைப் புரிந்துகொள்ள வேண்டுமாயின் அப்பகுதியில் காணப்படும் குளங்கள், நீர் உரிமை, நீர்ப் பகிர்மானம், நிலவளம், வேளாண் உற்பத்தி, குமிழி அல்லது நீரியல் தொழில்நுட்பம் மற்றும் அவற்றின் மீதான கட்டுப்பாடு ஆகியவற்றின் பின்னணியில் பார்க்கப்பட வேண்டும்.

இந்த வரலாற்றுக் காரணிகளின் பின்னணியில் தமிழ்நாட்டில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, இரும்புக் காலம் முதல் விஜயநகரக் காலம் வரையிலான பல தொன்மையான நீர்ப்பாசனக் குளங்கள் ஆவணப்படுத்தப்பட்டன. நீர்ப் பகிர்மானத்தைச் சீராக்க குளங்களில் குமிழி எனும் தொழில்நுட்பம் புகுத்தப்பட்டு அவை சமூகத்தில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தின என்பதை குமிழிக்

கல்வெட்டுகள், நீர்ப் பாசனம் தொடர்பான கோயில் கல்வெட்டுகள், தொல்லியல் சான்றுகள் மற்றும் இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் நீர் மேலாண்மை அமைப்பில் காணப்படும் பல்வேறு நுணுக்கங்களையும், செயல்பாடுகளையும், பொறியியல் நுட்பங்களையும் முன்னிலைப்படுத்த இந்நூல் முயற்சிக்கிறது.

தரவுகளின் தன்மை

தமிழகத்தில் இதுவரை முன்னூறுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் குளம், மடை, குமிழி, தூம்பு, கலிங்கு போன்றவை வெட்டப்பட்டதும், கட்டப்பட்டதும், புனரமைக்கப்பட்டதும் ஆகிய செய்திகளைத் தருகின்றன. எனினும், இங்கு நீரியல் கருவியான குமிழியின்/மடையின் மீது பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் மட்டும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. பல குமிழிக் கல்வெட்டுகள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அவற்றில் பல அழிந்து போயுள்ளன, சில மண்ணில் புதைந்துள்ளன மற்றும் பல பெயர்த்தெடுக்கப்பட்டுவிட்டன. எனவே இதில் மொத்தம், 221 குமிழிக் கல்வெட்டுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன (நிலப்படங்கள் 6-9; பின்னிணைப்பு 1). அவற்றில் பெரும்பாலானவை தமிழ் எழுத்துகளில் (208) பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் சில வட்டெழுத்து (9) மற்றும் கிரந்த (4) எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன. வட்டெழுத்து மற்றும் கிரந்தக் கல்வெட்டுகள் பெரும்பாலும் பொ.ஆ. 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை அல்லது அதற்கும் முற்பட்டவை. தமிழ் மற்றும் வட்டெழுத்து எழுத்துகள் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளன. கிரந்த எழுத்துகளில் உள்ள கல்வெட்டுகள் சமஸ்கிருத மொழியைக் கொண்டுள்ளன. அனைத்து வட்டெழுத்து மற்றும் கிரந்தக் கல்வெட்டுகள் பாண்டியர்களின் ஆட்சிப்பரப்பான தமிழ்நாட்டின் தென் பகுதியில் காணக்கிடைகின்றன. குமிழிக் கல்வெட்டுகளை அரச வரிசையில் காணும்பொழுது சோழர்களின் பங்களிப்பு என்பது 46 கல்வெட்டுகளுடன் முதலிடத்தில் உள்ளது. அதன்பிறகு பாண்டியர்கள் 18, பல்லவர்கள் 10, மற்றவர்கள் 11 எனக் காணப்படுகின்றன (நிலப்படம் 10). மகேந்திரவர்மன் காலத்தில் குமிழிகள்/மடைகள் நிறுவப்பட்டு நந்திவர்மன் காலத்தில் அவை நன்கு விரிவடைந்துள்ளன. ஆரம்பகாலக் குமிழிக் கல்வெட்டுகள் பொ.ஆ. 6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்றாலும், குளங்கள் சார்ந்த நீர்ப்பாசனப் பெரும் முயற்சிகள் பொ.ஆ. 8ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன (நிலப்படம் 11). குறிப்பாக வடக்கே பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மன் காலத்திலும், தெற்கில் பாண்டிய மன்னன் மாறஞ்சடையன் காலத்திலும் இத்தொழில்நுட்பம் அதிக அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் ஆட்சியாளர்களின் முயற்சிகளுக்கும் அப்பால் உள்ளூர் உயரடுக்குப் பெருமக்களின் ஈடுபாடும் சமூகங்களின் முயற்சிகளும் ஆதிக்கம் செலுத்தியுள்ளது தெரிகிறது. எடுத்துக்காட்டாக, 221 குமிழிகளில், ஏறக்குறைய 136 குமிழிகள் உள்ளூர் உயரடுக்குப் பெருமக்களால் நிறுவப்பட்டவை. இது கிட்டத்தட்ட 61% ஆகும். இவை இவர்களின் சமூகப் பங்களிப்பை மறைமுகமாக வெளிப்படுத்துகிறது. ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் பொருந்தல் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட அகழாய்வில் இருந்து அண்மையில் பெருமளவிலான பயிரிடப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட நெல் கண்டெடுக்கப்பட்டது (படம் 3). இந்நெல் மணிகளின் மூன்று மாதிரிகள் கரிமக்கதிரியக்கக் காலக்கணக்கீடுகளுக்கு உட்படுத்தப்பட்டு அவற்றின் காலம் பொ.ஆ.மு. 1257, பொ.ஆ.மு. 1155 மற்றும் பொ.ஆ.மு. 490 எனக் காலவரையறை செய்யப்பட்டன. மூன்று மாதிரிகளும் ஆற்றுப்பள்ளத்தாக்கு அல்லது ஆற்றங்கரைப் பகுதியிலிருந்து வந்தவை.



நிலப்படம் 6: தமிழ்நாட்டில் குமிழிகள் உள்ள இடங்கள்

நிலப்படம் 7: வடதமிழ்நாட்டில் குமிழிகள் உள்ள இடங்கள்



நிலப்படம் 8: மத்திய தமிழ்நாட்டில் குமிழிகள் உள்ள இடங்கள்



நிலப்படம் 9: தென்தமிழ்நாட்டில் குமிழிகள் உள்ள இடங்கள்



நிலப்படம் 10: அரசமரபு சார்ந்த குமிழிக் கல்வெட்டுகள்



நிலப்படம் 11: காலவரிசையில் குமிழிக் கல்வெட்டுகள்

எனவே, இவை குளத்துப்பாசனத்திற்கு உரியவை என எடுத்துக்கொள்ள முடியாது. குளத்தின் நீர்ப் பரப்பின் விளிம்புப் பகுதியில் பெருங்கற்கால நினைவுச்சின்னங்கள் இருப்பதும் (படம் 4), பாசனப் பகுதியில் வாழ்விடங்கள் இருப்பதும், குமிழித் தொழில்நுட்பம் வருவதற்கு முன்பே வேளாண்மை செய்வதற்கான குளத்துநீர்ப்பாசனம் தொடங்கப்பட்டுவிட்டது என்பதைக் காட்டுகிறது. சங்க இலக்கியங்களில் நீரின் முக்கியத்துவத்தைப் பற்றியும், பயன்பாட்டின் தன்மை பற்றியும் காணப்படும் குறிப்புகள் இதை உறுதிசெய்கின்றன.

நீர்ப்பாசனம் தொடர்பான இலக்கியச் சான்றுகள்

தமிழ்நாட்டின் நீர்ப்பாசனம் பற்றிய தொடக்ககாலச் சான்றுகளைச் சங்க இலக்கியங்களில் காணலாம். சங்க இலக்கியங்கள் நீரியல் கட்டுமானங்களை அருவி, ஏரி, கயம், குளம், ஆறு, பொய்கை, கிணறு, கேணி மற்றும் வாவி எனக் குறிப்பிடுகிறது (நற்றிணை 7:2; பட்டினப்பாலை 29; நற்றிணை 148:4; பட்டினப்பாலை 284; அகநானூறு 239:7; குறுந்தொகை 354:4; நற்றிணை 92:5; பட்டினப்பாலை 244). இவற்றில் அருவி, கயம், ஆறு ஆகியவை இயற்கையான நீர்நிலைகளைக் குறிப்பனவாகும். ஆனால், ஏரி, குளம், கிணறு மனிதனால் உருவாக்கப்பட்டவையாகும். பட்டறைப்பெரும்புதூர், கீழடி, கொற்கை, அழகன்குளம் ஆகிய இடங்களில் சமீபத்தில் நடத்தப்பட்ட அகழாய்வில் உறைகிணறுகள் கிடைத்தன. இந்த உறை கிணறுகள் பொதுவாக நீர்மட்டம் அதிகமாக இருக்கும் கடற்கரை மற்றும் ஆற்றங்கரைகளில் காணப்படுகின்றன. கிணறு என்ற சொல் பொதுவாக வறண்ட பகுதிகளில் தோண்டப்பட்டதைக் குறிக்கிறது. இதைத்தவிர, நீர் மேலாண்மையுடன் தொடர்புடைய சில சொற்களாகக் கற்சிறை, குமிழி, கால், தலைவாய், தூம்பு, மடை, முதலானவையும் காணப்படுகின்றன.

கற்சிறை என்பது (தொல். பொரு. 65:7-8; மதுரைக்காஞ்சி 725-726) நீரோட்டத்தின் குறுக்கே கற்பாறைகளால் கட்டப்பட்ட கட்டுமான அமைப்பு ஆகும். பொ.ஆ. 3ஆம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை வழக்கத்தில் இருக்கும் சொல் மடை. வையை உடைந்த மடை அடைத்த கண்ணும் என்ற தொடர் வைகை (வையை) ஆற்றின் கரை வழியாகத் திறக்கப்பட்ட வாய்க்கால் பழுது பார்க்கப்பட்டு நிலத்திற்குப் பாசனம் செய்வதற்காக நீர்வழிப்பாதையைத் தடுத்துத் திசை திருப்பியதாகக் கூறுகிறது (பரிபாடல் 2:28; 6:82). பெருங்குள மடை நீர்விட்டென என்ற தொடர் சங்க கால மக்கள் குளத்து நீரை ஒழுங்குபடுத்தும் கலையை அறிந்திருந்தனர் என்பதை எடுத்துரைக்கிறது (நற்றிணை 340:3). மதகு என்ற மற்றொரு சொல் அடைப்பு என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது (பரிபாடல் 24:66; 6:82; சிலப்பதிகாரம் 7:4:1). குமிழி என்ற சொல் குமிழ் என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது (மலைபடுகடாம் 213-214; 474-476). இந்த வகையான சொற்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தாலும், அவை குளத்து நீர்ப்பாசன முறை பற்றிய விரிவான தகவல்களை வழங்குவதில்லை. புலவர்கள் தங்கள் மன்னரின் பெருமை மற்றும் தங்கள் நாட்டின் வளத்தை விவரிக்கும்போது இவ்வகையிலான சொற்கள் பயன்படுத்தப்படுவதைக் காணமுடிகிறது (புறநானூறு 105: 4-6; குறுந்தொகை 371: 2-3). இருப்பினும், குளங்களை உருவாக்குவது ஒரு உன்னதமான புனிதமான பணியாகக் கருதப்பட்டது. மேலும் ஏராளமான குளங்களை அமைத்த மன்னனைப் புலவர்கள் பாராட்டியுள்ளனர். சோழ மன்னன் கரிகாலன் குளம் தொட்டு வளம் பெருக்கியதாகப்

புகழப்படுகிறான். குளங்களின் பயன்பாடு குறித்து அவர்கள் அறிந்திருந்ததை இது காட்டுகிறது. எட்டாவது நாள் பிறை நிலவைப் போன்று குளங்கள் கட்டப்பட வேண்டும் என்ற குறிப்பு, அவர்கள் குளங்கள் கட்டும் பணியில் ஈடுபட்டிருப்பதைக் குறிக்கிறது (புறநானூறு 118). இலக்கியச் சான்றுகளைத் தவிர்த்து பொ.ஆ. 6-7 ஆம் நூற்றாண்டு வரை குளங்களில் குமிழிகள் அல்லது மடைகள் அமைத்து அவற்றை நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தியது பற்றிய எந்தவொரு சான்றையும் காணமுடியவில்லை. பிற்காலக் கல்வெட்டுகளில் குமிழி அல்லது மடைத் தொழில்நுட்பத்தைக் குளங்களில் பயன்படுத்தியதற்கான சான்றுகளும், அதற்கான தொழில்நுட்பச் சொற்களும் பரந்த அளவில் காணப்படுகின்றன. “குமிழி” என்ற சொல் புதுக்கோட்டை வட்டாரத்தில் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் அனைத்து இடைக்காலத்தைச் சார்ந்த குளங்களிலிலும் “மடை” என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மடை என்ற சொல் வெவ்வேறு சூழல்களில் பயன்படுத்தப்படுகிறது. ஓடும் நீரைத் தடுத்து அல்லது மடுத்து நீரின் போக்கைத் திசை திருப்பி ஒழுங்குபடுத்திய தன்மையை விவரிக்கும் வகையில் மடை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (பரிபாடல் 2:28; 6:82). இருப்பினும், நற்றிணையில் (340:3) காணப்படும் பெருங்குள மடை நீர்விட்டென்ன என்ற சொற்றொடர், சங்க கால மக்கள் குளத்து நீரைக் கட்டுப்படுத்தும் கலையை அறிந்திருந்தனர் என்பதைக் குறிக்கிறது. மதகு என்பது புதவு என்ற பெயரில் தடுப்பு என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது (புறம். 24:19; அகம். 237:14; பரிபாடல் 24:66; 6:82; சிலப்பதிகாரம் 7:4:1). குமிழி, மடை, தூம்பு ஆகிய மூன்று சொற்களும் பொதுவாகக் குளத்தில் நீரைக் கட்டுப்படுத்த நிறுவப்பட்ட நீரியல் (hydraulic) கருவியைக் குறிக்கின்றன. தூம்பு என்ற சொல்லாட்சி வடதமிழ்நாட்டில் வழக்கத்தில் இருந்துள்ளது (நான்மணிக்கடிகை 73:3; களவழிநாற்பது 2:4). மேலும் இந்நீரியல் சாதனம் கால், மிண்டகம், மடை, குமிழி மற்றும் தூம்பு போன்ற பல கூறுகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

ஆய்வு நெறிமுறை

பொ.ஆ. 6ஆம் நூற்றாண்டு முதல் பொ.ஆ.16ஆம் நூற்றாண்டு வரை பழங்கால நீர்ப்பாசனக் குளங்களில் நிறுவப்பட்ட கல்வெட்டுகளுடன் கூடிய குமிழிகள்/மடைகள் தமிழ்நாட்டின் பண்பாட்டு நிலப்பரப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. குமிழிக் கல்வெட்டுகளின் ஆய்வானது தொழில்நுட்பம் சார்ந்த நீர் மேலாண்மை அமைப்பு மற்றும் புதிய நீரியல் தொழில்நுட்பத்தின் அறிமுகத்தால் நிகழ்ந்த சமூக மாற்றத்தை அறிந்துகொள்ள மற்றும் புரிந்துகொள்ள வகை செய்கிறது. இக்குமிழிக் கல்வெட்டுகள் வரலாறு, நீர்ப்பாசன நுட்பங்கள், நீர் மேலாண்மை, சமூக அமைப்பு, சடங்குகள் மற்றும் குளங்களுடன் தொடர்புடைய பிற பண்பாட்டுக் கூறுகளைப் புரிந்துகொள்வதற்குப் போதுமான வாய்ப்பை வழங்குகிறது. குமிழிக் கல்வெட்டுகளை ஆவணப்படுத்தல், புரிந்துகொள்ளுதல் மற்றும் மின்மயமாக்கல் ஆகியவற்றின் மூலம் சமகால வரலாற்றுச் சூழலையும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வரலாற்றையும் புரிந்துகொள்ள வழிவகுக்கிறது.

குளங்களில் அமைக்கப்பட்டுள்ள குமிழிகள் நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்டதால், வரலாற்று மதிப்புமிக்க பல குமிழிக் கல்வெட்டுகளை இழந்துள்ளோம். பல இடங்களில்,

நவீன குமிழிகள் கட்டப்படுவதால், வரலாற்றுக்காலக் குமிழிகள் கவனிக்கப்படாமல் உள்ளன. குளங்களில் மேற்கொள்ளப்படும் கட்டுமானம் மற்றும் நவீனமயமாக்கல் காரணமாக வரலாற்றுச் சிறப்பு மிக்க பல குமிழிகள்/மடைகள் கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. வீட்டு உபயோகத்திற்காகக் குமிழிக்கால்கள் அகற்றப்படுகின்றன. மேலும் சில, மண்ணை அகற்றும் போது இடித்துத் தகர்க்கப்படுகின்றன. ஆதலால் பாரம்பரிய தொழில்நுட்பத்தின் வரலாறு கணிசமான அளவிற்கு அழிக்கப்பட்டுவிட்டது. இருப்பினும், பண்டைய குமிழிகள் பல இன்னும் கல்வெட்டுகளுடன் உள்ளன. குமிழிகளின் வரலாற்றுத் தரவுகளைச் சீர்குலைக்கும் வகையில் நடைபெற்று வரும் இவ்வரலாற்றுச் சிதைவிலிருந்து காப்பாற்ற ஒரே வழி குமிழிகளையும், குமிழிக் கல்வெட்டுகளையும் மின்மயமாக்கம் செய்வது, கல்வெட்டுகளை மைப்படி எடுத்து ஆவணப்படுத்துவது மற்றும் பதிவேற்றம் செய்து குமிழிகளைப் பாதுகாப்பதாகும். குமிழிக் கல்வெட்டுகளை ஆவணப்படுத்தும் பணி பல கள இடர்ப்பாடுகளுக்கு இடையே மேற்கொள்ளப்பட்டது. கல்வெட்டுகள் குமிழித் தூண்களிலும், மண்டகப்படையிலும், சாத்துக்கல்லிலும், குமிழிக்கு அருகில் நடப்பட்ட குத்துக்கல்லிலும், படுக்கைக் கற்களிலும், கலிங்கிலும், குளத்துக்கு அருகில் உள்ள பாறைகளிலும் காணப்படுகின்றன (படம் 5-7). ஒரு குமிழிக் கல்தூணில் கல்வெட்டு எழுத போதிய இடமில்லாமல் இருந்தால் அதன் தொடர்ச்சியை அடுத்த தூணிலும், மண்டகப்படையிலும் பார்க்கலாம். பொதுவாகக் கல்வெட்டுகள் நீர்மட்டத்திற்கு மேலே எழுதப்பட்டன.

பொ.ஆ. 6ஆம் நூற்றாண்டில் குமிழித் தொழில்நுட்பத்தின் கண்டுபிடிப்பும், அவை குளங்களில் நிறுவப்பட்டதன் மூலம் பாசனப்பகுதியின் உற்பத்தித் திறன் வெகுவாக மாறுதலுக்கு உட்பட்டதும் தெரியவருகிறது. சாகுபடி செய்யப்படாத வறண்ட பகுதிகள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டன. இது உபரி உணவு உற்பத்திக்கு வழிவகுத்துள்ளது. தன்னிறைவு பெற்ற நிலையான உணவு உற்பத்தி சமூகக் கட்டமைப்பு மாற்றத்திற்கும், புதிய சமூகக் குழுக்களின் தோற்றத்திற்கும் வழி வகுத்தது. புதிய குடியேற்றங்களுடன் சமண, இந்துக் கோவில்களை எழுப்பப்பட்டதன் மூலம் ஒரு புதிய சமூக ஒழுங்கை உருவாக்கியது. எனவே, குமிழிக் கல்வெட்டுகளின் ஆய்வு என்பது தொழில்நுட்பம் சார்ந்த நீர் மேலாண்மை அமைப்பு குறித்தும், புதிய நீரியல் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட சமூக மாற்றங்களையும் நமக்கு வழங்குகிறது. குமிழித் தொழில்நுட்பம் வரலாற்றுக் காலத்தில் நிகழ்வுற்ற மிகச்சிறந்த நீரியல் தொழில்நுட்பமாகும். இந்தத் தொழில்நுட்பம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகச் சமூகத்தால் தொடர்ந்து ஆதரிக்கப்பட்டும், கடைப்பிடிக்கப்பட்டும் வந்துள்ளமையே இதற்குச் சான்றாகும். ஆதலால் தமிழ்நாட்டின் பரந்த நிலப்பரப்பில் குறிப்பாகத் தற்போதைய செங்கல்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் குளங்களில் காணப்படும் நீரியல் தொழில்நுட்பம் சார்ந்த குமிழிகளிலும், மடைகளிலும் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளை ஆவணப்படுத்துவதும், மின்மயமாக்கலும், வரலாற்று ஆவணங்களான கல்வெட்டுகளைக் கொண்டு பண்டைய நீரியல் தொழில்நுட்பத்தைப் புரிந்துகொள்வதும், அத்தொழில்நுட்பத்தால் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் புரிந்துகொள்வதும் தற்போதைய ஆய்வின் நோக்கமாகும்.

பொ.ஆ. 6ஆம் நூற்றாண்டுக்கும் 16ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நிறுவப்பட்ட குமிழிகளில் தமிழ்மொழியில் வட்டெழுத்து மற்றும் தமிழ் எழுத்துகளில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன (படம் 8). ஒரு சில கல்வெட்டுகள் சமஸ்கிருத மொழியில் கிரந்த எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளன (படம் 9). இக்கல்வெட்டுகளை ஆவணப்படுத்துதல் மற்றும் நகலெடுப்பதன் மூலம், பண்டைய நீர் மேலாண்மை அமைப்பின் தொழில்நுட்பக் கூறுகளை ஒருவர் புரிந்துகொள்ள முடியும். நீர்ப்பிடிப்புப் பகுதி, நீர்வாரிகள், நீர்ப்பரப்பு, குளத்தின் நீர்ப்பிடிப்புத் திறன், நீர்க்கசிவு, மண்ணின் தன்மை, தூம்பு அமைப்பதற்குத் தேவைப்படும் நிலத்தின் அமைப்பு மற்றும் பாசனப்பகுதி ஆகியவை குமிழி என்னும் நீரியல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளன.

வரலாற்றின் பல்வேறு கூறுகளையும் அதன் சூழலையும் புரிந்துகொள்ள கல்வெட்டுகள் பெரிதும் துணைபுரிகின்றன. வரலாற்றாசிரியர்கள், தொல்லியலாளர்கள், கல்வெட்டியலார், மொழியியலாளர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், மானுடவியலாளர்கள் மற்றும் சமூகவியலாளர்கள் ஆகியோருக்கு இடைக்காலத் தமிழ்நாட்டில் ஏற்பட்ட சமூக மாற்றத்தைப் புரிந்துகொள்ள கல்வெட்டுகள் பெரிதும் துணைபுரிகின்றன. எடுத்துக்காட்டாக, அரசமரபுகள், காலவரிசைக் கட்டமைப்புகள், தொல்லெழுத்துகளின் வரிவடிவ வளர்ச்சி, தொல்லெழுத்தியல், மொழியியல், பண்டைய சுற்றுச்சூழல், இனக்குழுச் சமூகத்தின் தோற்றம், சமூக மாற்றம் மற்றும் அரசுருவாக்கம் ஆகியவற்றைக் கல்வெட்டுகளை ஆய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் அறிந்துகொள்ளலாம். பல்வேறு குடைவரைக் கோயில்கள், கட்டுமானக் கோயில்கள், சமண சமயம் சார்ந்த நினைவுச்சின்னங்கள், இசைக் கல்வெட்டுகள், பாறை ஓவியங்கள், வணிகப் பெருவழிகள், துறைமுக நகரங்கள் மற்றும் புதிய நாட்டுப் பிரிவுகளின் தோற்றம் போன்றவை குளங்களை உருவாக்குதல் மற்றும் குமிழிகள் நிறுவுதல் ஆகிய நற்பணிகளால் ஏற்பட்ட உபரி உணவு உற்பத்திப்பெருக்கத்தின் மூலம் பெற்ற தன்னிறைவினால் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் எனலாம்.

தமிழ்நாட்டின் மலைப்பாங்கான மேற்குப் பகுதிகளில் போதுமான அளவு நீர் இருப்பதால் அப்பகுதிகளில் குளங்களின் பயன்பாடு அதிக அளவில் இல்லை. தமிழகத்தின் கடலோரப்பகுதிகள் சமவெளியாக இருப்பதாலும், குளத்தில் இருந்து குமிழி வழியாக நீரை வெளியேற்றத் தேவைப்படும் குறைந்தபட்ச ஈர்ப்பு விசை இல்லாததாலும் கடலோரப்பகுதிகளில் இந்நீரியல் தொழில்நுட்பம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவ்விரண்டு நிலப்பகுதிகளுக்கும் இடைப்பட்டதும், வறட்சிப் பகுதிகளாக விளங்கும் செங்கல்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் காணப்படும் குளங்களில் நீரியல் தொழில்நுட்பம் சார்ந்த குமிழிகளும், மடைகளும் பெரும்பாலும் பயன்பாட்டில் இருப்பதைக் காணமுடிகிறது.

களப்பணியின் தன்மையைக் கருத்தில் கொண்டு, விரும்பிய இலக்கை அடையும் வகையில் செயல்திட்டம் உருவாக்கப்பட்டது. முதல்கட்டமாக, இதுவரை ஆவணப்படுத்தப்பட்டு, வெளியிடப்பட்ட குமிழிக் கல்வெட்டுகள் தொடர்பான அனைத்துத் தரவுகளும் முதன்மைச் சான்றாக எடுத்துக்கொள்ளப்பட்டு அவற்றின் பட்டியல் உருவாக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக,

குளங்களின் நீர்மட்டம் கோடைக்காலத்தில் மிகவும் குறைவாக இருக்கும் என்பதால் குளங்களையும், அதில் காணப்படும் குமிழிகளையும், குமிழிக் கல்வெட்டுகளையும் ஆவணப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. குமிழிகள் குளங்களின் ஆழமான பகுதியில் திறந்தவெளியில் குளக்கரைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளன. குளத்தில் காணப்படும் நீரை முழுவதுமாகப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் வகையில் மடைகளும், குமிழிகளும், தூம்புகளும் அமைக்கப்பட்டுள்ளன. இரு குமிழித்தூண்கள் ஏறத்தாழ 3 முதல் 4 மீ. உயரம் கொண்டவையாகவும், 1.5 மீ. இடைவெளியில் செங்குத்தாக நிலைநிறுத்தப்பட்டிருக்கும். இவ்விரு தூண்களும் மூன்று அல்லது நான்கு கிடைமட்ட பலகைக் கற்களால் சம இடைவெளியில் அடுக்குகளாக இணைக்கப்பட்டிருக்கும் (படம் 10). கல்வெட்டுகள் பொதுவாகச் செங்குத்தாக நிற்கும் கல்தூண்களிலும், சில நேரங்களில் கிடைமட்ட பலகைக் கற்களிலும் பொறிக்கப்பட்டிருக்கும். இக் கல்வெட்டுகள் பொதுவாகக் கண் மட்டத்தில் பொறிக்கப்பட்டிருப்பதால் கல்வெட்டுகளைச் சரியாகப் படிக்கும் வகையில் அமைந்துள்ளன. கண் மட்டத்திற்கு மேல் பொறிக்கப்பட்டவை அரிதாகவே காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் தூய்மைப்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டன. முதலில் கல்வெட்டுகளின் மீது எவ்வித பசையோ, சாந்தோ பூசப்படாமல் நிழற்படம் எடுக்கப்பட்டது. பின்னர், வெள்ளைச் சாந்து கல்வெட்டின்மேல் தடவப்பட்டு அந்நிலையில் நிழற்படம் எடுக்கப்பட்டது. இறுதியாக, கல்வெட்டுகளின் மைப்படி உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மைப்படி கல்வெட்டின் மீது இருக்கும்பொழுது ஒரு நிழற்படமும், பின்னர் மைப்படியைக் கல்வெட்டிலிருந்து பிரித்தெடுத்து மைப்படியைத் தரையில் வைத்து ஒரு நிழற்படமும் எடுக்கப்பட்டது. கல்வெட்டின் மைப்படிகள் அலுவலகத்திற்குக் கொண்டுவரப்பட்டு மீண்டும் கட்டுப்படுத்தப்பட்ட ஒளியில் நிழற்படம் எடுக்கப்பட்டன. மூன்று நிலைகளில் எடுக்கப்பட்ட இத்தகைய நிழற்படங்கள் கல்வெட்டைப் படித்தறிய ஏதுவாக இருந்தன. நிழற்படங்கள் NEF, TIF மற்றும் JPEG வடிவங்களில் ஆவணப்படுத்தப்பட்டன. களத்திலேயே கல்வெட்டு படிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு வரைவு தயாரிக்கப்பட்டது. பின்னர் கல்வெட்டு மைப்படிகள், அனைத்துவகை நிழற்படங்கள், கல்வெட்டு வரைவுகள் சரிபார்க்கப்பட்டு இறுதி வரைவு உருவாக்கப்பட்டது. பின்னர் இவையனைத்தும் கல்வெட்டறிஞர்களின் பார்வைக்குக் கொண்டுசெல்லப்பட்டுக் கல்வெட்டுப் பாடம் சரிபார்க்கப்பட்டு இறுதிக் கல்வெட்டு வாசகம் தயாரிக்கப்பட்டது. களப்பணியின் போதே ஊர்ப் பெயர், வட்டம், மாவட்டம், குமிழி அமைந்துள்ள இடம், குளத்தின் பெயர், அரசர், அரசமரபு, அரசர் ஆட்சியாண்டு, கல்வெட்டின் காலம், கொடையாளர், மொழி, வரிவடிவம், கல்வெட்டுச் செய்தி என அனைத்துத் தரவுகளும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுப் பதிவேற்றம் செய்யப்பட்டன. பின்னர் குளம், குமிழிக்கால், கல்வெட்டு, கல்வெட்டு மைப்படி, கல்வெட்டின் பாடம் கொண்ட பல நிலையிலான நிழற்படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டன. இத்தரவுகள், தளத்தை மறு ஆய்வுக்குட்படுத்தவும், கல்வெட்டின் உள்ளடக்கத்தை மறு ஆய்வுக்குட்படுத்தவும், கல்வெட்டு வாசிப்பை மேம்படுத்தவும் அறிஞர்களுக்கு உதவக்கூடும். ஒவ்வொரு குளமும் அத்துடன் கூடிய மடை, குமிழி, தூம்புக் கால், மிண்டகம் முதலானவை நீரியல் கருவிகளின் ஒரு தொகுப்பாகக் கருதப்படுகிறது. ஒவ்வொரு குமிழிக் கல்வெட்டிற்கும் ஒரு தனிப்பட்ட அட்டவணை எண் கொடுக்கப்பட்டுள்ளது. படித்தறியப்படாத கல்வெட்டுகளின் சிறந்த நிழற்படங்களை வழங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் கல்வெட்டறிஞர்கள் தளத்திற்குச் சென்றோ அல்லது செல்லாமலோ கல்வெட்டினைப் புரிந்துகொள்ளலாம்.

முந்தைய களப்பணிகள், கல்வெட்டு வாசகங்கள், வெளியீடுகள் தொடர்பான தரவுகளும் வழங்கப்பட்டுள்ளன. குமிழிகள் ஆவணப்படுத்தப்பட்ட பின்பு, அருகில் அடையாளம் காணப்பட்ட அனைத்துக் குளங்கள், கல்வெட்டுகள் இல்லாத குமிழிகள் மற்றும் அருகிலுள்ள வரலாற்று நினைவுச்சின்னங்கள் ஆகியன ஆவணப்படுத்தப்பட்டன. இவை குளத்தின் பண்பாட்டு மற்றும் வரலாற்றுச் சூழல்களைப் புரிந்துகொள்ள உதவும். அத்துடன் குளத்தின் பரம்பரை உரிமைகள், குளத்தின் அளவு, பாசனப் பகுதியின் பரப்பளவு, இனவரைவியல் தரவுகள் மற்றும் குமிழிகள் மற்றும் வரலாற்று நினைவுச்சின்னங்களுடன் தொடர்புடைய சடங்குகள் (படம் 11) போன்றவை பின்னணித் தகவல்களாகச் சேகரிக்கப்பட்டன. இந்நூல் மேற்கண்ட ஆய்வுமுறைமைகளின் அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டு, ஒழுங்குபடுத்தப்பட்டு நூலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

முந்தைய ஆய்வுகள்

கல்வெட்டுகளின் அடிப்படையில் பல அறிஞர்கள் அரசுகளையும், சமூகத்தையும் வடிவமைப்பதில் நீர்ப்பாசனத்தின் பங்கைப் புரிந்துகொள்ள தீவிர முயற்சி மேற்கொண்டனர். இருப்பினும், ஆரம்பகால முயற்சிகள் அனைத்தும் கோவில் கல்வெட்டுகளையே பெரும்பாலும் அடிப்படைத் தரவுகளாகக் கொண்டிருந்தன. குமிழிகளில் அல்லது மடைகளில் நேரடியாகப் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளை ஆவணப்படுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. தொடக்ககால ஆய்வுகள் தமிழ்நாட்டின் பல்வேறு சுற்றுச்சூழலைக் கொண்ட வேளாண்மை மண்டலங்களில் நிலவிய நீர்ப்பாசனத்தின் தன்மையை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்பட்டன. மேலும் அவை வேளாண்மை அடிப்படையிலான பொருளாதாரத்தின் பின்னணியில் சமூகத்தை வடிவமைப்பதிலும் அதில் வேளாண்மையின் பங்களிப்பை மதிப்பீடு செய்வதிலும் கவனம் செலுத்தின. வேளாண்மை சமூகத்தின் முக்கிய கூறாகக் கருதப்படுகிறது. ஆர். கோபாலன் (1928) மற்றும் சி. மீனாட்சி (1938) ஆகியோர் தொண்டை மண்டலத்தில் தமது ஆய்வை மேற்கொண்டதன் விளைவாகத் தமிழகத்தில் விரிவான நீர்ப்பாசன வலையமைப்புகளை உருவாக்குவதில், குறிப்பாகக் குளத்துப் பாசனத்தை உருவாக்குவதில் பல்லவர்கள்தான் அதிக ஆர்வம் காட்டினர் என்று எண்ணினர். குமிழித் தொழில்நுட்பத்தைத் தெரிவிக்கும் தொண்டூருக்கு அருகில் ஆனத்தூர் ஏரியின் நுழைவுவாயிலில் உள்ள கல்லில் பொறிக்கப்பட்ட 7ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முதலாம் மகேந்திரவர்மனின் ஸ்ரீ குணமிலி என்ற பட்டப்பெயரைத் தாங்கி நிற்கும் கல்வெட்டே தமிழகத்தின் முதல் குமிழிக் கல்வெட்டு எனலாம் (படம் 12). தொடக்ககாலங்களில் வெட்டப்பட்ட குளங்கள், கால்வாய்கள் மற்றும் பிரம்மதேயங்கள் பெரும்பாலும் அரசரின் பெயரைக் கொண்டு விளங்குகின்றன. இது ஆட்சியாளரின் அல்லது அரசின் நேரடி பங்களிப்பைப் பறைசாற்றுகின்றது.

தொண்டை மண்டலத்தில் கிடைத்த தரவுகள் போன்று பாண்டிய நாட்டிலும் காணலாம். இவ்வாறு, தமிழ்நாடு முழுவதும் ஒழுங்குபடுத்தப்பட்ட நீர்ப்பாசனத்தின் மூலம் உணவு உற்பத்திப் பெருக்கத்தில் கவனம் செலுத்தப்பட்டது (Nilakanta Sastri 1929; 1955; Sathiyanathaier 1944; Rajan 2008; வேதாச்சலம் 2019). இத்தகைய நடவடிக்கைகளுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தவை இதற்கு முந்தைய சங்ககாலம் அல்லது தொடக்க வரலாற்றுக் காலம் எனலாம். தொடக்க வரலாற்றுக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசன முயற்சிகளின் தொடர்ச்சியாக இடைக்காலத்

தமிழ்நாட்டின் பெரும்பான்மையான நிலப்பகுதி நீர்ப்பாசனத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. இதன் காரணமாக நீர், நிலம் மற்றும் வேளாண்மை உற்பத்தியின் மீதான உரிமையை நிலைநாட்ட அரசு முயற்சித்தது. பொ.ஆ. 12-13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், நிலத்தின் மீதான தனிமனித உரிமைகள் தோன்றத் தொடங்கின. சமூக மற்றும் வட்டார அளவில் வெவ்வேறு வேளாண்மை ஒழுங்கமைவுகள் உருவாக இவை அடிகோலிட்டன (Burton Stein 1985; Subbarayalu 2012). பிரெயின் ஜெ.மார்டன் (Murton 1976) என்பவரால் கொங்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும், டேவிட் லட்டனால் (Ludden 1978) திருநெல்வேலி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் சுற்றுச்சூழல் அடிப்படையிலான நீர்ப்பாசன முறையின் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம். அண்மையில் கோமதிநாயகம் (கோமதிநாயகம் 1992:19-25; 2004:81-84; 2004a:12-19; 2010; 2011; Gomathinayakam and Sophia 2004), முகுந்தன் (Mukuntan 1988:1-37), ராஜகோபால் (ராஜகோபால் 2004:64-68), கரு. இராசேந்திரன் (இராசேந்திரன் 2004; 2017), சங்கரன் (Sankaran 2001; 2003; 2013) சிவசுப்ரமணியன் (Sivasubramanian 2004: 105-106), ராஜன் (Rajan 2008), ராஜன், யதீஸ் குமார், முத்துக்குமார் மற்றும் ஜி. பால்துரை (Rajan et al., 2023) ஆகியோர் குறிப்பிட்ட வட்டாரப்பகுதியில் அல்லது நிலப்பகுதியில் தமது ஆய்வினை மேற்கொண்டனர்.

குளத்து நீர்ப்பாசனம் என்பது வேளாண்மை விரிவாக்கம், ஆட்சியாளர்கள், உள்ளூர்த் தலைவர்கள், உள்ளூர் அளவிலான நிர்வாக அமைப்புகள் மற்றும் பல்வேறு சமூகக் குழுக்களின் ஈடுபாடு போன்ற பல காரணிகளுடன் தொடர்புடையதாகும். ஆறு மற்றும் குளத்துப் பாசனம் மூலம் நீர் ஆதாரங்களைக் கட்டுப்படுத்த அரசு முயற்சிக்கிறது. பாலாறு, பெண்ணையாறு, காவேரி, தாமிரபரணி ஆற்றுப்படுகைகளில் பல பிரம்மதேயங்கள் நிறுவப்பட்டிருப்பது, அரசின் நிலம் மற்றும் வளங்களின் மீதான மறைமுகக் கட்டுப்பாட்டை மதிப்பிடுவதற்கான ஒரு குறியீடாக எடுத்துக்கொள்ளலாம். இடைக்காலச் சோழர்கள் மற்றும் பாண்டியர்கள் தங்கள் ஆட்சியின் மையப் பகுதிகளில் உள்ள வளங்களை நேரடியாகக் கட்டுப்படுத்தினர். பிற பகுதிகளில் இத்தகைய நிலையைக் காண இயலவில்லை. பிரம்மதேயங்களின் தோற்றத்தையும், பரவலையும் இதன் பின்னணியில் பார்க்க வேண்டியுள்ளது. வறட்சிப் பகுதிகளான புதுக்கோட்டை, திருவண்ணாமலையில் இருபதுக்கும் குறைவான பிரம்மதேயங்களே உள்ளன. இதை அரசு விரிவாக்கத்திற்கும் வேளாண்மைப் பெருக்கத்திற்கும் இடையிலான உறவின் பின்னணியில் காணலாம். வளமான பகுதிகளில் உருவாக்கப்பட்ட பிரம்மதேயத்தை அரசின் ஒரு அமைப்பாகக் கருதலாம். தொடக்க காலங்களில் பிரம்மதேயத்தை வளமிக்க பகுதிகளில் உருவாக்கி அதன் மூலம் அரசின் கட்டுப்பாட்டை மறைமுகமாகச் செயல்படுத்தியது எனலாம். வறட்சியான பகுதிகளில் குறைந்த எண்ணிக்கையிலான பிரம்மதேயங்கள் காணப்படுவதை இச்செயல்பாடுகளுக்கு காரணமாக எடுத்துக்கொள்ளலாம். வறட்சியான பகுதிகளில் குறைவான மகசூல் கிடைப்பதும், அதன் மூலம் பெறப்படும் வருவாயும் குறைவாக இருப்பதே வறண்ட பகுதிகளில் குறைவான பிரம்மதேயங்கள் இருப்பதற்குக் காரணம் எனலாம். குளத்து நீர்ப்பாசனம் என்பது குளத்தின் வரையறுக்கப்பட்ட நீர்ப்பாசனப் பகுதிக்கு உட்பட்டதாகக் காணப்படுகிறது அல்லது அந்நிலப்பரப்புக்குள்ளாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. குளத்திற்குரிய நீர்ப்பாசனப்பகுதி என்பது சிறிய நிலப்பகுதியாகக் காணப்படுவதால் ஒரு மாறுபட்ட நீர்க் கொள்கையை மேற்கொள்ளவேண்டியுள்ளது. ஆதலால் குள நிர்வாகத்தை உள்ளூர் நிர்வாக

அமைப்புகளான ஊர்ச்சபை மற்றும் நாடு ஆகியவற்றின் மூலம் அரசு கட்டுப்படுத்தியதாக தெரியவருகிறது.

தமிழ்நாட்டின் நீர்ப்பாசனக் குளங்கள்

இன்று, தமிழ்நாடு 13 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்புடன் நாட்டிலேயே பதினோராவது இடத்தில் உள்ளது. மொத்த சாகுபடி நிலப்பரப்பில் (6 மில்லியன் ஹெக்டேர்), ஐம்பது விழுக்காட்டு நிலங்களுக்கான நீர்ப்பாசனம் (3 மில்லியன் ஹெக்டேர்) கால்வாய்கள் (0.95 மில்லியன் ஹெக்டேர்), குளங்கள் (0.90 மில்லியன் ஹெக்டேர்) மற்றும் குழாய்க் கிணறுகள் உள்ளிட்டவை (1.15 மில்லியன் ஹெக்டேர்) மூலம் பெறப்படுகிறது. சில கால்வாய்களும் குளங்களும் பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள் மற்றும் குறுநில மன்னர்களால் உருவாக்கப்பட்டவையாகக் காணப்படுகின்றன. மேலும் அவற்றில் சில பொ.ஆ. 7ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய காலத்தைச் சார்ந்தனவாகக் காணப்படுகின்றன. இன்று தமிழகத்தில் 39,202 குளங்கள் உள்ளன. இதில் 3697 குளங்கள் அமைப்புசார் குளங்களாகவும், 5242 அமைப்பு சாராக் குளங்களாகவும், 9850 நிலச்சுவாந்தார்களின் குளங்களாகவும் 20,413 பஞ்சாயத்து யூனியன் குளங்களாகவும் இருக்கின்றன (அட்டவணை 1). அமைப்பு மற்றும் அமைப்பு சாராத குளங்கள் இரண்டையும் அரசு பொதுப்பணித் துறையின் மூலம் கட்டுப்படுத்துகிறது. 4 ஹெக்டேர் ஆயக்கட்டுக்குக் குறைவாக உள்ள குளங்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமானவை. செங்கல்பட்டு, திருவண்ணாமலை, விழுப்புரம், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் பெரும்பாலான குளங்கள் காணப்படுகின்றன. பல இடங்களில் குளங்கள் இருந்தாலும், புதுக்கோட்டை, சிவகங்கை, திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் காணப்படும் குமிழிகளில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் குமிழிக் கல்வெட்டுடன் கூடிய குளங்களில் 78.5 விழுக்காடு இந்த ஐந்து மாவட்டங்களில் உள்ளன. அவற்றில் சில குமிழிகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்டவை என்பதும், அவை இன்றும் பயன்பாட்டில் இருப்பதும் ஒரு சிறப்பம்சமாகும். கள ஆய்வில் ஆவணப்படுத்தப்பட்ட பல குமிழிக்கல்வெட்டுகள் நீண்ட வரலாற்றைக்கொண்டு திகழ்கின்றன. அவற்றில் சில பொ.ஆ. 7ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டவையாகும்.

அட்டவணை 1: தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக உள்ள குளங்கள்

வ. எண்	வட்டாரம்	மாவட்டம்	ஊராட்சி மன்றம்	பொதுப் பணித்துறை	நிலச்-சுவான்தார்	மொத்தம்
1.	செங்கல்பட்டு	செங்கல்பட்டு	1783	1207	756	3746
2.	வட ஆர்க்காடு	திருவண்ணாமலை, வேலூர்	2084	1169	482	3735
3.	தென் ஆர்க்காடு	கடலூர், விழுப்புரம்	1766	757	79	2602
4.	சேலம்	சேலம்	549	188	0	737
5.	தர்மபுரி	தர்மபுரி, கிருஷ்ணகிரி	1579	101	154	1834
6.	கோயமுத்தூர்	கோயமுத்தூர், திருப்பூர், ஈரோடு	64	59	0	123
7.	தஞ்சாவூர்	தஞ்சாவூர்	491	685	0	1176

வ. எண்	வட்டாரம்	மாவட்டம்	ஊராட்சி மன்றம்	பொதுப் பணித்துறை	நிலச்-சுவான்தார்	மொத்தம்
8.	புதுக்கோட்டை	புதுக்கோட்டை, சிவகங்கை	5334	530	58	5922
9.	திருச்சிராப்பள்ளி	அரியலூர், திருச்சிராப்பள்ளி	0	258	214	472
10.	மதுரை	மதுரை	3391	771	331	4493
11.	இராமநாதபுரம்	இராமநாதபுரம்	1333	1508	7367	10208
12.	திருநெல்வேலி	திருநெல்வேலி	965	686	445	2096
13.	கன்னியாகுமரி	கன்னியாகுமரி	1074	984	0	2058
14.	சென்னை	சென்னை, திருவள்ளூர்	0	0	0	0
15.	நீலகிரி	நீலகிரி	0	0	0	0
மொத்தம்			20413	8903	9886	39202
(ஆதாரம் : ப.கோமதிநாயகம் 1992:19-25; Source: Gomathinayagam 1992:19-25)						

தமிழகத்தில் வரலாற்று மதிப்புமிக்க பல குமிழிகள் குளங்களில் நிறுவப்பட்டுள்ளன. பண்டைய குமிழிகள் பலவற்றில் கல்வெட்டுகள் காணப்படாததால் இவற்றின் காலத்தை உறுதி செய்வதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இருப்பினும், கள ஆய்வில் 221 குமிழிகள் கல்வெட்டுகளுடன் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இந்த 221 குமிழிக் கல்வெட்டுகளும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து குறிப்பாக வறண்ட பகுதிகளில் காணப்படும் குளங்களிலிருந்து ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அரியலூர் (2), செங்கல்பட்டு (5), கள்ளக்குறிச்சி (12), காஞ்சிபுரம் (3), கரூர் (1), மதுரை (7), பெரம்பலூர் (2), புதுக்கோட்டை (86), சேலம் (4), சிவகங்கை (14), தஞ்சாவூர் (2), தென்காசி (1), திருச்சிராப்பள்ளி (22), திருநெல்வேலி (9), திருவண்ணாமலை (16), தூத்துக்குடி (4), விழுப்புரம் (26), விருதுநகர் (7) மாவட்டங்களில் குமிழிக் கல்வெட்டுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் அவற்றில் பெரும்பாலானவை இரு வட்டாரங்களில் குவிந்துள்ளதைப் பார்க்கலாம். புதுக்கோட்டை (86), அதை ஒட்டியுள்ள திருச்சிராப்பள்ளி (22) மற்றும் சிவகங்கை (14) மாவட்டங்களில் மட்டும் கிட்டத்தட்ட 55 விழுக்காட்டுக் குமிழிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அடுத்த செறிவான எண்ணிக்கை திருவண்ணாமலை (16) மற்றும் விழுப்புரம் (26) மாவட்டங்களில் காணப்படுகிறது. இது கிட்டத்தட்ட 19 விழுக்காடு ஆகும். மீதமுள்ள மாவட்டங்களில் மிகக் குறைவான எண்ணிக்கையில் குமிழிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. மேலும், ஒரு குறிப்பிட்ட பகுதியில் நிலவும் நிலவமைப்பும் குளத்தின் எண்ணிக்கையும், அக்குளத்தில் நிறுவப்படும் குமிழிகளின் எண்ணிக்கையைத் தீர்மானித்தன. குமிழி சார்ந்த நீர்ப்பாசனத்திற்கு ஏதுவான நிலப்பரப்பைப் புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மற்றும் சிவங்கை மண்டலங்கள் பெற்றுத் திகழ்வதால் அதிக எண்ணிக்கையில் குளங்களும், குமிழிக் கல்வெட்டுகளும் இங்கு கிடைக்கின்றன. புதுக்கோட்டை மண்டலத்தில் 5,922 நீர்ப்பாசனக் குளங்கள் உள்ளன. ஏறக்குறைய 75 விழுக்காட்டுக் குளங்கள் அதன் மேற்குப் பகுதியில் மலைப்பாங்கான நிலப்பரப்பில் உள்ளன. மீதமுள்ள 25 விழுக்காட்டுக் குளங்கள் புதுக்கோட்டை மண்டலத்தின் கடலோரப் பகுதியான கிழக்குப் பகுதியில் உள்ளன. குளங்களில் 2 விழுக்காடு ஆறுகளாலும், மீதமுள்ள 98 விழுக்காடு மழைநீராலும் நிரப்பப்படுகின்றன. எனவே, கிட்டத்தட்ட

98 விழுக்காட்டுக் குளங்கள் நம்பகத்தன்மையற்ற பருவமழையை மட்டுமே சார்ந்துள்ளன. இது போன்றே திருவண்ணாமலையிலும் காணப்படுகிறது. இந்தக் குளங்களில் பெரும்பாலானவை இயற்கையான பள்ளங்களை மையமாக வைத்து உருவாக்கப்பட்டுள்ளன. அவை நிலப்பரப்பின் கீழ்ப் பகுதியில் கரைகள் எழுப்பப்பட்டு நீரின் கொள்ளளவினை உயர்த்தி ஆற்றின் பள்ளத்தாக்கு வரை சாய்த்து, தண்ணீரைச் சேகரிக்கவும் சேமிக்கவும் விநியோகிக்கவும் செய்தனர். வயல்களுக்குப் பாசனம் செய்வதற்காகச் சேமிக்கப்பட்ட நீர் முறைப்படுத்தப்பட்ட அளவுகளில் குமிழிகளின் துணைகொண்டு தூம்புகளின் வழியே பாசனத்திற்காக வெளியேற்றப்பட்டது.

இக்குளங்கள் அரசு உருவாக்கத்திலும் சமூக உருவாக்கத்திலும் பெரும் பங்கு வகித்தன. பெரும்பாலான குளங்கள் கணிசமான மண்படிவுகளால் தற்பொழுது மூடப்பட்டிருப்பதால், ஒரு குளத்தின் பண்டைய நீர்க் கொள்ளளவினை மதிப்பிடுவது மிகவும் கடினம். இருப்பினும் விரையாச்சிலையில் உள்ள கல்வெட்டுகளில் ஒன்று "இக்குளத்துக்குப் பெருநான்கெல்லையாவது மேற்பாற்கெல்லையும் கீழ்பாற்கெல்லையும் உட்பட கீழ்மேல் எண்ணூரு அடியும் தென்வடல் எண்ணூரடியும் ஆக இசைந்த பெரு நான்கெல்லைக்கு உட்பட்ட இடம் குளமும், கரையும் ஆகவும்" என்ற சொற்றொடர் குளத்தின் அளவைக் குறிப்பிடுகிறது (பு.க.தொ. 534). அக்கல்வெட்டின்படி அக்குளம் கிழக்கு-மேற்காக 800 அடியும், வடக்கு-தெற்காக 800 அடியும் கொண்டு விளங்குகிறது. குளங்கள் பொதுவாகப் பரவளைய (பாராபோலாய்டு) உருவ வடிவத்தில் இருக்கும். எனவே, ஏறத்தாழ அரை மில்லியன் கன அடிக்கு மேல் நீர்க்கொள்ளளவைத் தாங்கும் திறன் கொண்டது. நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரை, இது பெரிய பாசனப்பகுதியின் (ஆயக்கட்டு) தேவைகளை நிறைவு செய்யக்கூடிய கணிசமான குளமாகும்.

இந்த வரலாற்று நிலவியல் மற்றும் காலநிலைக் காரணிகளை மனதில் நிறுத்தித் தமிழ்நாட்டில் தீவிர களஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இக்கள ஆய்வுகள் இரும்புக் காலம் முதல் விஜயநகர ஆட்சிக்காலம் வரையிலான பல பழமையான குளங்களை வெளிப்படுத்தின. இதுவரை கிடைத்த கல்வெட்டுகளை இரு பரந்த பிரிவுகளின்கீழ் வகைப்படுத்தலாம். குமிழியில் நேரடியாகப் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் முதல் வகையிலும், கோயில் சுவர்களில் பொறிக்கப்பட்டவை இரண்டாவது வகையிலும் அடங்கும். கல்வெட்டின் முதல் வகை பெரும்பாலும் குளத்தில் நிறுவப்பட்ட நீரியல் கருவியான குமிழி/ மடை போன்றவை. இவை யாரால் நிறுவப்பட்டது அல்லது பழுதுபார்க்கப்பட்டது என்ற செய்திகளை அளிக்கின்றன. பெரும்பாலான கல்வெட்டுகள் குமிழித் தூணில் உள்ள குறைந்த இடைவெளியில் பொறிக்கப்பட்டுள்ளதால் இது மிகவும் குறுகிய நேரடிச் செய்தியைத் தருவனவாக உள்ளன. கல்வெட்டு மிகவும் சிறியதாக இருப்பதால், அது அளிக்கும் தகவலும் குறைவாகவே உள்ளது. ஆனால் இது நேரடித் தகவலை வழங்குகிறது. இரண்டாவது வகைக் கல்வெட்டு கோயிலுக்கு வழங்கப்பட்ட கொடையின் பின்னணியைக் கூறுவதால் அவை நீர் மேலாண்மை பற்றிய மறைமுகத் தகவல்களை மட்டுமே தருகிறது. எனவே, இரண்டு வகைக் கல்வெட்டுகளும் முழு நீர்ப்பாசன முறை மற்றும் அதன் சூழலைப் பற்றிய சிறந்த புரிதலை வழங்குகின்றன. தற்போதைய ஆய்வில், குமிழிக் கல்வெட்டுகளில் காணும் தகவல்கள் மட்டுமே பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை ஆவணப்படுத்தப்பட்ட

அனைத்துக் கல்வெட்டுகளும் நீர்ப்பாசன அமைப்பின் பல்வேறு கூறுகளைப் பற்றிப் பேசுகின்றன. அதாவது குமிழிகள் நிறுவுதல், குளத்தின் கட்டுமானம், குளப்பராமரிப்பு மற்றும் நீர் மேலாண்மை போன்ற தகவல்களைத் தாங்கி நிற்கின்றன.

நீரியல் தொழில்நுட்பம்

இனவரைவியல் தரவுகள் மற்றும் சொற்பிறப்பியல் ஆய்வுகள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பச் சொற்களின் உட்பொருளை அறிந்துகொள்வதன் மூலம் கல்வெட்டுகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பச் சொற்களின் உண்மையான பொருளை அறிந்துகொள்ள இயலும். இவை நீரியல் தொழில்நுட்பத்தின் பின்னால் இருக்கும் தொழில்நுட்ப அறிவைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இருப்பினும், ஒரே வகையான நீரியல் கருவிகளைக் குறிப்பதில் வட்டார வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனவே, ஒரு சொல்லின் உண்மையான பொருளை அவ்வட்டாரச் சூழலில் புரிந்துகொள்ள முயற்சி மேற்கொள்ளப்பட்டது (நிலப்படம் 12).

குளம் மற்றும் ஏரி

பொதுவாக, குளம் என்பது இயற்கையான பள்ளத்தில் அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட நிலப்பரப்பில் நீரோட்டத்தின் குறுக்கே பிறை வடிவில் ஒரு தடுப்புச்சுவர் போன்ற கரையை உருவாக்குவதன் மூலம் செயற்கையாக உருவாக்கப்படும் நீர்நிலையாகும். இந்தச் சிறிய அளவிலான நீர்ப்பிடிப்பு நிலைகளின் (குளங்களின்) கரையை உயர்த்தி அல்லது குளத்தினை ஆழப்படுத்துவதன் மூலம் குளத்தின் நீர் தேக்கும் திறன் அல்லது நீரின் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டு ஏரியாக உருவெடுத்தது. கல்வெட்டுகளில் வரும் “ஏரியான குளம்” என்பதன் பொருள் முந்தைய குளம் ஏரி ஆக மாற்றப்பட்டதற்குச் சான்றாகக் கொள்ளலாம். ஊனைகுளம் ஆன வீரபாண்டிய பேரேரி, சூளைகுளமான காந்தளேரி, மாறனூர்ப்பெருங்குளத்திழித்தெறி வித்த கிழவனேரி போன்ற சொற்றொடர்கள் தற்போதுள்ள குளங்கள் பெரிய நீர்நிலைகளாக அதாவது ஏரிகளாக விரிவுபடுத்தப்பட்டன என்பதை உணர்த்துகின்றன (தெ.க.தொ. 3:213; தெ.க.தொ. 14:44). ஒரு சில நேரங்களில் குளம் பெரிதாக்கப்பட்ட பின்பு பழைய பெயர் ஏரியின் புதிய பெயருடன் இணைந்து தொடர்ந்து பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது என்பதை ஏரிகுளம், தத்தன் ஏரிகுளம், நக்கன் ஏரிகுளம், திக்கன் ஏரிகுளம், புர்வேரிக்குளம் போன்ற கல்வெட்டுச் சொற்றொடர்களின் மூலம் அறியமுடிகிறது (கோவிந்தராஜ் மற்றும் கரு.இராசேந்திரன் 2008:82-87; தியாகராஜன் 2005:41-43; தெ.க.தொ. 23:164; தெ.க.தொ. 23:165; வேதாச்சலம் மற்றும் சேதுராமன் 2000:45-52). புதுக்கோட்டையின் மிகப்பெரிய குளங்களில் ஒன்றான நீர்ப்பிடிப்புப் பகுதி கோமாறன்சடையன் ஆட்சியின் போது (பொ.ஆ. 775) கவிற்குளம் என்று அழைக்கப்பட்டது. பின்னர் இக்குளம் முதலாம் பராந்தகன் மற்றும் முதலாம் ராஜராஜன் ஆட்சியின்போதும் அதே பெயரில் தொடர்ந்து அழைக்கப்பட்டது. பின்னர் பொ.ஆ. 1487இல் இந்தக் குளம் பெருநற்கிள்ளி சோழப்பேரேரி என அழைக்கப்பட்டது. பொ.ஆ. 998 மற்றும் பொ.ஆ. 1487க்கு இடைப்பட்ட காலத்தில் இக்குளத்தின் பெயர் மாற்றப்பட்டிருக்க வேண்டும் என்பதை அறியமுடிகிறது. அண்மையில் உள்ள அரசகண்டராமப்பெரும்பள்ளி என்ற சமணத்தளம் பொ.ஆ. 12ஆம் நூற்றாண்டில் பெருநற்கிள்ளி சோழப்பெரும்பள்ளி என



நிலப்படம் 12: நீரியல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்நுட்பச் சொற்கள்

மறுபெயரிடப்பட்டதன் வாயிலாக இக்குளமும் அதே காலகட்டத்திலோ அல்லது அதற்குச் சற்று முன்போ பின்போ பெருநற்கிள்ளி சோழப்பேரேரி எனப் பெயர் மாற்றம் பெற்றிருக்கலாம்.

அனைத்து ஆரம்பகாலக் கல்வெட்டுகளும் இயற்கையான பள்ளம் அல்லது நீர்பிடிப்புப் பகுதியைக் குளம் என்றே குறிப்பிடுகிறது. அரிதாகவே கண்மாய் என்று குறிப்பிடப்படுகிறது. இன்று, பெரும்பாலான நீர்ப்பாசனக் குளங்கள் குளம் என்றழைக்கப்படுவதைவிட கம்மாய் (கண்மாய் என்பதன் திரிபு) என்று அழைக்கப்படுகின்றன. இயற்கையான நீர்ப்பிடிப்புப் பகுதிகள் நீர்ப்பாசனக் குளங்களாக மாற்றப்பட்டு, நீரியல் கருவிகளான குமிழி, தூம்பு, மடை போன்றவற்றை நிறுவி நிலத்தடிக்குக் கீழே கால்வாயை உருவாக்கி (தூம்பு) ஒரு நிலத்தடி வழித்தடத்தை ஏற்படுத்தி அந்நீர் கரைக்கு வெளியே ஒரு துளை (கண்) வழியாக வெளியேறி நீர் மாய்த்துப் போவதால் அவை கண்மாய் (கம்மாய்) என்று அழைக்கப்படுகிறது. கண்மாய்/கம்மாய் என்ற சொல் பொ.ஆ. 16 ஆம் நூற்றாண்டில் பயன்பாட்டுக்கு வந்திருக்கக்கூடும் என்பதைத் திருப்பத்தூரில் உள்ள குளம் ஒன்று பெரியகண்மாய் என்று கல்வெட்டில் குறிப்பிடுவதன் மூலம் அறியலாம் (க.ஆ. 214/ 2003) .

குளம், கண்மாய், ஏரி மற்றும் பேரேரி ஆகிய சொற்கள் நீர் தேக்கும் திறனின் அளவைக் கொண்டு பெயரிடப்பட்டுள்ளன. சிறிய நீர்நிலைகள் குளம் அல்லது கண்மாய் எனவும், கணிசமான அளவு கொண்டவை ஏரி (நீர்த்தேக்கம்) எனவும், பெரிய அளவு கொண்டவை பேரேரி (பெரிய நீர்த்தேக்கம்) எனவும் அழைக்கப்படுகின்றன. பெரும்பாலும், குளத்தின் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டு ஏரிகளாக மாற்றப்பட்டன. இத்தகைய மாற்றங்கள், பெரும்பாலான நேரங்களில் அரசால் செயல்படுத்தப்பட்டன. சிறிய குளங்கள் பொதுவாக கிராமம் அல்லது நன்கொடையாளரின் பெயருடன் இணைந்து காணப்படுவதை இடைக்காட்டூர் பெருங்குளம், சாத்தனூர் பெருங்குளம் போன்ற சொற்றொடர் மூலம் அறியமுடிகிறது (வேதாச்சலம் 1997:68; தெ.க.தொ. 14:44). பெரிய குளங்கள் பெரும்பாலும் கடவுளின் பெயர் அல்லது ஒரு அரசரின் பெயருடன் இணைந்து காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ராஜேந்திர சோழப்பேரேரி, இளங்கேசுவரபேரேரி, செம்பியன் மாதேவி பேரேரி, திரிபுவனமாதேவி பேரேரி முதலியவற்றை மேற்கோள்களாகக் காட்டலாம் (தெ.க.தொ. 3:56; செந்தில்குமார் 2008:52-55; தெ.க.தொ. 5:644; தெ.க.தொ. 7:1038).

சில நீர்ப்பிடிப்புப் பகுதிகள் குளம் என்றழைக்கப்படாமல் ஊரணி (ஊருணி) என்றழைக்கப்பட்டன. ஊரணி பொதுவாகப் பாசனத்திற்காக அல்லாமல் குடிநீர், குளிப்பது போன்ற பொதுப் பயன்பாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. இந்த ஊரணிகள் எப்போதும் கிராமத்திற்குள் அல்லது அதற்கு வெகு அருகில் இருக்கும். விராச்சிலையில் (விரையாச்சிலை) கிடைத்த துண்டுக் கல்வெட்டு ஒன்று ஐநூற்றுவர் என்ற வணிகக்குழு ஆகுண்டான் ஊரணிக்கு வடக்கில் ஊரணி ஒன்றை நிறுவியதை எடுத்துரைக்கிறது. அதே இடத்தில் உள்ள மற்றொரு கல்வெட்டும் ஊரணி உருவாக்கப்பட்டதைக் குறிக்கிறது (இராசேந்திரன் 2017:180, 181). வாழைக்குறிச்சி, வடசேரிபட்டி மற்றும் மேல்வாய்க் கல்வெட்டுகளும் ஊரணியைக் குறிக்கின்றன (இராசேந்திரன் 2017:246, 251; சண்முகம் 2001:29-43). இந்த ஊரணிகள் ஒருபோதும் பாசனத்திற்காக எந்த ஒரு வாய்க்காலையும் பெற்றிருக்கவில்லை. இவ்வகையான நீர்ப்பாசனத்திற்கு உட்படுத்தப்படாத ஊரணிகள் பகுப்பாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

நீரியல் சார்ந்த தொழில்நுட்பச் சொற்கள் பொதுவாகப் பொறியியல் சார்ந்த கருவிகள் என்பதால் அவற்றின் பொருளை அறிந்துகொள்வது அவசியம். குளம் என்ற சொல் பொதுவாக ஆயக்கட்டு எனப்படும் சிறிய பாசனப் பகுதிக்குச் சேவை செய்யும் சிறிய நீர்நிலையைக் குறிக்கிறது. ஏரி என்ற சொல் நீர்த்தேக்கத்திற்குச் சமமான ஒரு பெரிய நீர்நிலையைக் குறிக்கிறது. சில சமயங்களில், குளம் மற்றும் ஏரி ஆகிய இரண்டு சொற்களும் ஒரே நேரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதை ராமனேரிகுளம், தக்கனேரிகுளம் போன்றவை மூலம் அறியலாம். முந்தைய குளம் விரிவாக்கம் மூலம் ஏரியாக மாற்றப்பட்டதை ஏரியான குளம் என்ற சொற்றொடர் மூலம் அறியமுடிகிறது (பு.க.தொ. 349, 402). குளம் அல்லது ஏரியின் (நீர்த்தேக்கம்) பல்வேறு கூறுகள் அல்லது கருவிகளாகக் கரை, முன்குளம் (குளத்தின் உள் சாய்வு மற்றும் அதன் அருகில் உள்ள குளத்தின் ஆழமான பகுதி), மடை (நீர்வழிப்பாதையைத் திசை திருப்புவதற்கான அமைப்பு), குமிழி, தூம்பு, வாய், தலைவாய், தலைப்பேழை, கலிங்கு, உள்வாயில் (நீர்பரப்புப் பகுதி), மதகு, அகமடை (குளத்தின் உள்ளே நீர்ச் சேகரிப்பிற்குப் பயன்படுத்தப்படும் ஒரு பெட்டி போன்ற அமைப்பு), புறமடை (குளத்தின் வெளியே நீர் சேகரிப்பிற்குப் பயன்படுத்தப்படும் ஒரு பெட்டி போன்ற அமைப்பு) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இந்தக் கூறுகள் அல்லது கருவிகள் அனைத்தும் குளத்திலிருந்து பல்வேறு பாசன வாய்க்கால்களுக்குத் தண்ணீரைத் தடுத்து, சேகரித்து, கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்தி திசை திருப்பி நீரை வயல்களுக்குக் கொண்டு செல்ல பயன்படுகின்றன. பொ.ஆ. 7-9ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட கல்வெட்டுத் தரவுகளின்படி, இந்தக் கூறுகள் குறிப்பிட்ட பொருளைக் கொண்டுள்ளன. இச்சொற்கள் பிற்காலத்தில் ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. குளத்தின் உள்ளே கட்டப்பட்ட நீரியல் கருவியின் பல்வேறு பகுதிகளைக் குறிக்க சில குறிப்பிட்ட சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவை பொதுவாகக் குமிழி, மடை, தூண், கால், மணவாளக்கால் (ஆண் தூண்), குமரிக்கால் (பெண் தூண்), பேணித் தூண் (ஒழுங்குபடுத்தப்பட்ட தூண்), சேரோடி என அழைக்கப்படுகின்றன. இக்குளத்தில் குமிழியும், கற்காலும், மிண்டகமும், கடையங்கிணறும் செய்வித்தான் என்ற கல்வெட்டுச் சொற்றொடர், குளம், குமிழி, தூண் மற்றும் கிடைமட்ட பலகைக்கல் ஆகியவை குளத்தில் உள்ள மடையின்/குமிழியின்/நீரியல் கருவியின் பல்வேறு பாகங்களைக் குறிக்கிறது எனலாம் (இராசேந்திரன் 2017:248). அண்மையில் மேற்கொண்ட தீவிர கள ஆய்வுகள் ஒவ்வொரு சொல்லின் உள்ளார்ந்த பொருளை உணர்ந்துகொள்ள உதவியது.

மடை

மடை என்பது குளத்துநீர்ப் பாசனத்தில் பரவலாகப் பயன்படுத்தப்படும் சொல். ஒரு சிறிய பெட்டி அல்லது பேழை போன்ற அமைப்பின் மூலம் தண்ணீரைத் தடுக்கும் அல்லது சேகரிக்கும் ஒரு கட்டமைப்பைக் குறிக்க இந்தச் சொல் பயன்படுத்தப்படுகிறது என்று இலக்கிய மற்றும் அகராதித் தரவுகள் தெரிவிக்கின்றன. மடை என்ற சொல் மடுத்தல் (தடுத்தல்/திருப்புதல்) என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டது. மடையில் இருந்துதான் நீரின் வெளியேற்றம் ஒழுங்குபடுத்தப்படுகிறது அல்லது திருப்பிவிடப்படுகிறது. இது குளத்தின் உள்ளே அல்லது குளத்துக்கு வெளியே அல்லது வயலில் இருக்கும் சதுரவடிவப் பெட்டிகள் அல்லது பேழைகள் மடை என்றே அழைக்கப்படுகின்றன. குமிழியின் ஒவ்வொரு கூறுக்கும்

வெவ்வேறு பெயர்கள் இருந்தாலும் குளத்தின் உள்ளே அமைக்கப்பட்டுள்ள முழு நீரியல் கருவி மடை என்று தற்பொழுது அழைக்கப்படுகிறது. மடை என்பது குளத்தின் ஆழமான இடத்தில் அமைக்கப்பட்ட ஒரு சதுரப் பெட்டி அல்லது பேழை போன்ற அமைப்பாகும் (இது அகமடை/ உள்மடை என்றும் அழைக்கப்படுகிறது) (படம் 13-14). இது தூம்பு எனப்படும் நிலத்தடிக் கால்வாயால் இணைக்கப்பட்டிருக்கும். இந்த நிலத்தடி வாய்க்கால், குளத்தின் கரை வழியாகச் சென்று, குளத்திற்கு வெளியே கட்டப்பட்ட புறமடை எனப்படும் சதுரவடிவப் பெட்டி அல்லது பேழை போன்ற அமைப்பில் முடிவடைகிறது. நிலத்தடிக் கால்வாயின் (தூம்பு) உள் வாய், பேழை வடிவில் சிறிய பெட்டி போன்ற அமைப்பில் இருக்கும். இப்பேழை, வட்டவடிவ துளையுடன் கூடிய சதுரப் பலகைக்கல் கொண்டு மூடப்பட்டிருக்கும். இதன் நடுவில் நீர் செல்ல வசதியாக ஏற்படுத்தப்பட்ட துளையில் நீர் செங்குத்தாக இறங்கி நிலத்தடித் தூம்புக்குள் சென்று அதன் வழியாக நீர் வெளியேறும். இந்த நீரியல் கருவியின் முழு விவரம் கீழே குமிழி என்ற தலைப்பின்கீழ் விளக்கப்பட்டுள்ளது. இக்குளத்தில் மடைகளும் கல்மடைகளும் எடுப்பித்தார் என்ற சொற்றொடர் இந்நீரியல் கருவி குளத்தில் நிறுவப்பட்டதைக் குறிக்கிறது. பொன்பேத்தியில் கிடைத்த கல்வெட்டில் காணப்படும் மடைகளும், கல்மடைகளும் என்ற சொற்கள் அவை செங்கல் மற்றும் கல் இரண்டாலும் கட்டப்பட்டவை என்பதைக் குறிக்கிறது (Rajan 2008:274). பெருமடை, கல்மடை எனக் கட்டுமானப் பொருட்களின் அளவு மற்றும் பயன்பாட்டின் அடிப்படையில் பல்வேறு வகையாக மடைகள் அழைக்கப்படுகின்றன. செண்பகம்பேட்டையில் காணப்படும் மடை நோக்கி கால் நாட்டினமையால் என்ற சொற்றொடரின் மூலம் மடை மற்றும் கால் ஆகியவை ஒரே கருவியின் இரண்டு வெவ்வேறு கூறுகள் என்பதை அறியலாம் (இராசேந்திரன் 1997:23).

திருவண்ணாமலை மாவட்டத்தின் செங்கம் வட்டம் ஆனத்தூரில் கிடைத்த பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் (பொ.ஆ.610-630) பொ.ஆ. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செங்கல் அமைப்பிலான மடை இதுவரை தமிழகத்தில் கிடைத்த மடைகளில் காலத்தால் முந்தியதாகும். இந்த நீரியல் சாதனம் குளத்தின் உள் பகுதியில் (முன்குளம்) செங்கற்களால் கட்டப்பட்ட சிறிய பெட்டி/பேழை போன்ற அமைப்புடன் காணப்படுகிறது. இந்தக் கட்டமைப்பின் இருபுறமும் 60-70 செ.மீ. உயரம் கொண்ட செவ்வக வடிவிலான செங்குத்தான இரண்டு கல்தூண்கள் அரை வட்ட மேல்புறத்துடன் நிறுவப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் பட்டங்களில் ஒன்றான ஸ்ரீ குணமிலி என்ற பெயர் அதில் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு மடை என்ற சொல்லைக் கொண்டிருக்கவில்லை என்றாலும், தமிழ்நாட்டின் பிற பகுதிகளில், பல இடங்களில் காணப்படும் இத்தகைய கட்டமைப்புகளின் ஒத்த தன்மையைக்கொண்டு, இவை பிற்கால மடையின் முன்மாதிரி என்று கருதலாம்.

பாண்டிய மன்னன் ஸ்ரீமாறன் ஸ்ரீ வல்லபனின் (பொ.ஆ.816-862) 16 மற்றும் 18ஆவது ஆட்சியாண்டுகளில் வெளியிடப்பட்ட புகழ்பெற்ற கல்வெட்டுகள் குளத்தின் உள்ளே கட்டப்பட்ட கட்டமைப்பைக் குறிக்க மடை என்ற சொல்லையே பயன்படுத்துகின்றன. பாண்டிய நாட்டின் ஆணத்தி என்றழைக்கபடும் உயர் அதிகாரி இருப்பைக்குடி கிழவன் எட்டிசாத்தன் தென்வெளியன்குடி, மாறனூர், இருப்பைகுடி (இருக்கன்குடி), கொழுவூர்,

நென்மலி, சிறுபுத்தூர், சாத்தனூர், மாலங்குடி ஆகிய இடங்களில் பல குளங்களை ஏரிகளாக (நீர்த்தேக்கங்களாக) மாற்றி இந்த விரிவாக்கப்பட்ட நீர்நிலைகள் அனைத்தும் அவரது பட்டப்பெயர் கொண்டு கிழவனேரி என்றழைக்கப்பட்டன. பழைய குளக்கரைகளை (பழங்கரை இழித்து) மறுசீரமைப்பு செய்ததன் மூலம் அல்லது கரைகளை உயர்த்தியதன் மூலம் (ஏறுவித்து) பல குளங்களை விரிவுபடுத்தினார். ஏற்கனவே உள்ள குளங்களைச் சீரமைக்கும் போது, பல இடங்களில் கல் குமிழிகளை (கல் நாட்டி/மடை கற்படுத்தும்) நிறுவினார். எடுத்துக்காட்டாக, அவர் சாத்தானூர் பெருங்குளத்தில் (தெ.க.தொ. 14:43-44) வேப்பமடை, பொன்னான் மடை, பூங்குறி மடை ஆகிய மூன்று குமிழிகளை நிறுவினார் (தெ.க.தொ. 14:43-44). மடை கல்படுத்தும் என்ற சொல் முன்பு செங்கற்களால் கட்டப்பட்ட மடைக் கல்லால் மறுகட்டமைப்பு செய்யப்பட்டதைக் கூறுகிறது. பொ.ஆ. 8ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நெடுமாறன் என்ற மன்னரால் முன்பு நிறுவப்பட்ட மடையை எட்டிச்சாத்தன் புதுப்பித்ததாகக் கல்வெட்டு மேலும் கூறுகிறது. குளங்கள் மற்றும் ஏரிகள் ஆகியவற்றிலிருந்து தண்ணீரை ஒழுங்குபடுத்த நீரியல் கருவிகள் (மடைகள்/குமிழிகள்/தூண்கள்/தூம்புகள்) அமைப்பதில் மன்னர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் நேரடியாக ஈடுபட்டனர் என்பதை இக்கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. இருப்பைக்குடி (இருக்கன்குடி) குளத்தின் கரைக்குக் கீழே கல்லால் (கற்பிழந்து) தூம்பு கட்டப்பட்டது எனக் கல்வெட்டு தெரிவிக்கிறது (தெ.க.தொ. 14:44). பொ.ஆ. 7ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழ்நாட்டின் பல இடங்களில் நீரைக் கட்டுப்படுத்தும், ஒழுங்குபடுத்தும் நீரியல் சாதனங்கள் நிறுவப்பட்டன. பெரிய நீர்நிலைகளை உருவாக்குவது, புதிதாக உருவாக்கப்பட்ட குளத்தில் நீரியல் தொழில்நுட்பத்தை நிறுவுவதன் மூலம் வேளாண் உற்பத்தியில் ஈடுபடுத்தமுடியாமல் இருந்த வறண்ட நிலங்களை விளைநிலங்களாக மாற்ற அரசு ஆர்வம் காட்டின. பெரிய அளவிலான குளங்களில், ஒன்றுக்கும் மேற்பட்ட மடைகளை நிறுவினர் என்பதை நடுமடை/பெரியமடை, தென்மடை, வடமடை, மேல்மடை, கீழ்மடை போன்ற சொற்களால் அறியலாம். சில நேரங்களில் அவை பெருங்குமிழி என்றும் பெருந்தூம்பு என்றும் அழைக்கப்பட்டன. இத்தகையன தாயினிப்பட்டி மற்றும் புதூர்க் குளங்களில் காணப்படுகின்றன. பொதுவாக, கல்வெட்டுகள் மையத்தில் உள்ள குமிழிகளிலோ அல்லது பெரிய குமிழிகளிலோ பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால் சில நேரங்களில் குளத்தின் கோடியில் உள்ள குமிழிகளில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இத்தகைய குமிழிகளைப் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கண்ணனூர், வேகுபட்டி குமிழிகளில் பார்க்கலாம். நடுமடையில் காணும் குமிழிகள் காலப்போக்கில் சிதைந்துபோனதால் தற்பொழுது இருக்கும் நடுகுமிழிகளில் கல்வெட்டு காணாமல் போயிருக்கலாம். பெரிய குளங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட குமிழிகளை நிறுவுவது தண்ணீரைத் திறமையாகவும், விரைவாகவும், சீராகவும் வெளியேற்ற உதவிபுரிகின்றன.

தூம்பு

தூம்பு என்பது குளத்தின் ஆழமான பகுதியில் (முன்குளம்) அமைந்துள்ள குமிழியில் (அகமடை/உள்மடை/மடை) இருந்து நீரைத் தரைக்குக் கீழே உருவாக்கப்பட்ட நிலத்தடி வாய்க்கால் மூலம் குளத்திலிருந்து குளக்கரை வழியாகக் குளத்தின் வெளிப்புறத்திற்கு எடுத்துச்செல்ல கல் அல்லது செங்கலால் கட்டப்பட்ட ஒரு நிலத்தடி நீர்வழி அல்லது வாய்க்கால் ஆகும் (படம் 15).

சொற்பிறப்பியல் ரீதியாக, தூம்பு என்ற சொல் துய் > துய்ம் > தூம் > தூம்பு என்ற வார்த்தையிலிருந்து பெறப்பட்டது எனக் கருதலாம். இது ஒரு குழாய் வடிவத்தையும் குறிக்கிறது. உதாரணமாக, தூம்பு (வழிப்பாதை) யானையின் தும்பிக்கையுடன் ஒப்பிடப்படுகிறது (தும்பிக்கை என்பது தூம்புக்கையின் சிதைந்த வடிவம்). மூங்கில் மற்றும் பூவின் தண்டு இவை அனைத்தும் குழாய் வடிவத்தைக் குறிக்கின்றன. கோயிலின் கருவறையிலிருந்து கால்வாய் வழியாகப் பாயும் அபிசேகம் அல்லது புனித நீர் வெளியேறும் பகுதி தூம்பு என்றும் அழைக்கப்படுகிறது. மடையும் அடைத்து தூம்பும் செய்வித்தான், தூம்பிநின்றும் போந்த வாய்க்கால், நடுவித்தூம்பிலும் தலை நீர், கடைநீர் பாயப்பெறுவதாகவும் போன்ற கல்வெட்டுச் சொற்றொடர்கள் தெளிவாக ஒரு நீர்வழித்தடத்தைச் சுட்டிக்காட்டுகின்றன (தெ.க.தொ.8:739; 22:287). மடையும் அடைத்து தூம்பும் செய்வித்தான், கன்னிகாலும் தூம்பும் போன்ற சொற்றொடர்களும் மடை, கால் மற்றும் தூம்பு போன்றவை நீரியல் சாதனத்தின் பல்வேறு கூறுகள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. நீர்ப்பாசனக் குளத்தில் தூம்பு எனப்படுவது குளத்திலிருந்து குளக்கரை வழியாக நிலத்தடியில் கட்டப்பட்ட ஒரு குழாய் போன்ற அமைப்பாகும். முதன்முதலாகத் தூம்பு என்ற சொல்லாட்சி திருக்கோயிலூருக்கு அருகிலுள்ள சித்தலிங்கபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பொ.ஆ. 7ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முதலாம் மகேந்திரவர்மனின் கல்வெட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது புலிமல்லையனீர்-தூம்பு என்று குறிப்பிடப்படுகிறது. அதே காலகட்டத்தைச் சார்ந்த அரக்கோணத்திற்கு அருகில் உள்ள கீழ்வேதி என்ற இடத்தில் கிடைத்த மற்றொரு கல்வெட்டுக் குறிப்பு ஸ்ரீநரசிங்கசர்மப்புரோயித வேட்பைச்சோமாசியர் செய்வித்த தூம்பு ஸ்ரீ என்று குறிப்பிடுகிறது. மேலும் கல்லிலே தூம்பு இடுவித்தான் மற்றும் கற்தூம்பு போன்ற சொற்கள் அவை கல்லால் கட்டப்பட்டன என்பதை உணர்த்துகின்றன (பாலமுருகன் 2020:26). இந்தக் குழாய்கள் (வாய்க்கால்கள்) இரண்டு விதமாக அமைக்கப்பட்டன. முதல் வகையில், ஆங்கில எழுத்தான யு-வடிவில் செம்புரான் கற்களில் வெட்டப்பட்டு அவற்றின் தட்டையான பகுதி கீழ் இருக்குமாறு பதிக்கப்பட்டன. பின் இதன் மீது அதே யு-வடிவ கற்களைத் தலைகீழாக வைப்பதன் மூலம் ஒரு குழாய் போன்ற அமைப்பு உருவாக்கினர். இரண்டாவது வகையில், கால்வாய்/வாய்க்காலில் கிடையாகப் பலகைக்கல் இடப்பட்டுப் பின் அதன் இருபுறமும் 30-40 செ.மீ. உயரமுள்ள பலகைக்கற்கள் செங்குத்தாகப் பக்கவாட்டுச் சுவர்களாக 15-20 செ.மீ. இடைவெளியுடன் இருபுறமும் சுவர் போன்ற அமைப்புடன் அமைக்கப்பட்டன. இந்தப் பக்கச் சுவர்களுக்கு மேல் ஒரு பலகைக்கல்லைக் கிடைமட்டமாக மூடுகல்லாக வைத்து நீண்ட குழாய்/வாய்க்கால் போன்ற அமைப்பை உருவாக்கினர். முதல் வகை அமைப்பு பொதுவாகச் செம்புரான் கல் கிடைக்கும் மண்டலங்களில் காணப்படுகிறது. செம்புரான் கல்லில் இருந்து யு-வடிவ அமைப்புகளை உருவாக்கலாம். அதேசமயம் கிரானைட் கற்களில் இது சாத்தியமில்லை. எனவே அங்கு இரண்டாவது வகை அமைப்பு செயல்படுத்தப்படுகிறது. வட தமிழ்நாட்டின் கல்வெட்டுகளில் தூம்பு என்ற சொல்லே பயன்பாட்டில் காணப்படுகிறது. திருநெல்வேலி மண்டலத்தில் உள்ள மேல்நீலிதநல்லூரைத் தவிர (க.ஆ. 406 மற்றும் 407/2018-19) தென் தமிழகத்தில் அரிதாகவே இச்சொல் பயன்பாட்டில் காணப்படுகிறது. எனவே, குமிழி என்ற சொல் புதுக்கோட்டை-திருச்சிராப்பள்ளி பகுதியிலும் அதற்குத் தெற்கிலும் ஒரு நீரியல் சாதனத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. அதே சமயம் திருவண்ணாமலைப் பகுதியிலும் அதற்கு வடக்கிலும் தூம்பு என்ற சொல்லே பயன்படுத்தப்படுகிறது.

கலிங்கு

உபரி நீர் வெளியேறும் வகையில் குளக்கரையின் ஓரங்களில் கட்டப்பட்டுள்ள அமைப்பு கலிங்கு என அழைக்கப்படுகிறது (படம் 16). வட தமிழகத்தில் இது கோடி என்றும் அழைக்கப்படுகிறது. குளத்தில் நீர் ஒரு குறிப்பிட்ட அளவைத் தாண்டி நிரம்பி வழியும்போது குளத்தின் பாதுகாப்பு கருதி குளத்தின் கோடியில் கலிங்குகள் கட்டப்பட்டன. இக்கலிங்குகள் துல்லியமாக வடிவமைக்கப்பட வேண்டும். அதிகபட்ச நீரை வெளியேற்றாமல் தேக்கினால் கரையில் அரிப்பு அல்லது உடைப்பு ஏற்படும். எனவே, பாதுகாப்புக் கண்ணோட்டத்தில் கலிங்கு அமைத்தல் மிகவும் முக்கியமானது. முதலாம் இராஜராஜனின் (பொ.ஆ. 1006) 21ஆவது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட திருமலைக் கல்வெட்டு நிலைநிற்குங்கலிங்கிட்டு எனக் குறிப்பிடுகிறது (இராசேந்திரன் 2017:74). பொ.ஆ. 1706இல் வெளியிடப்பட்ட மற்றொரு கல்வெட்டு பாளையகாரர் சின்னகாமாட்சி நாயக்கர் காலத்தில் திருவானைக்காவல் மத்திராயப்பிள்ளை வேளூர்க் குளத்தில் கலிங்கு அமைத்ததைக் குறிக்கிறது (இராசேந்திரன் 2017:74). கலிங்கு அமைப்பதன் நோக்கம் அதிகப்படியான நீரை வெளியேற்றுவதுதான் என்பதை நீரெக்க கலிங்கிட்டுக்கொடுத்தான் என்ற மற்றொரு கல்வெட்டுச் சொற்றொடர் மூலம் அறியலாம் (தெ.க.தொ. 1:77).

வாய்

வாய் என்ற சொல் திறப்பைக் குறிக்கிறது. பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மனின் (பொ.ஆ.869-901) ஆட்சியின்போது வெளியிடப்பட்ட சீயமங்கலம் கல்வெட்டு, திருப்பாலை கிராமத்தின் ஊர்க் கிழவனான ஆடவி என்பவரால் குமர-வாய் என்ற நீர் வெளியேற்றம் பெறும் வாய்ப் பகுதி கட்டப்பட்டதைக் குறிக்கிறது. (க.ஆ. 1956-57:131). ஆறு அல்லது குளத்திலிருந்து வெளியேறும் முதல் வாய் அல்லது திறப்பு தலைவாய் அல்லது வாய்த்தலை எனப்படும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள உடையார்பாளையம் வட்டத்தில் உள்ள பெருவளநல்லூரில் காவிரி ஆற்றின் இடது கரையில் காணப்படும் வாய்த்தலை தமிழகத்தின் முதல் வாய்த்தலை எனலாம். பல்லவ மன்னன் முதலாம் பரமேஸ்வரவர்மனின் (பொ.ஆ. 669-691) கூரம் செப்பேடு இதனை பெருவளவன்-வாய்த்தலை என்று குறிப்பிடப்படுகிறது. காவேரி ஆற்றின் வலது கரையில் இத்தகைய நீர்த்திறப்புகள் இருந்ததால் அவை சார்ந்த ஊர்கள் பேட்டைவாய்த்தலை மற்றும் குளித்தலை எனப் பெயரிடப்பட்டுள்ளன.

குளம் அல்லது ஆற்றிலிருந்து வாய் வழியாக வெளியேறும் நீர் கால் (கால்வாய்) என்று அழைக்கப்படுகிறது. இது வாயிலிருந்து தோன்றிக் கால் ஆகச் செல்வதால் இது வாய்க்கால் என்று அழைக்கப்படுகிறது. நீர்க்காலின் இறுதிப்பகுதி கடைக்கால் என அழைக்கப்படுகிறது. ஆற்றில் இருந்து உருவாகும் வாய்க்கால்கள் ஆற்று வாய்க்கால் என்றும், குளத்தில் இருந்து தோன்றுபவை குள வாய்க்கால் எனவும் அழைக்கப்படுகிறது (பு.க.தொ. 232, 637). குமிழியிலிருந்து நேரடியாக வரும் நீர் குமிழி-வாய்க்கால் (பு.க.தொ. 109) என்றும் அழைக்கப்படுகிறது. குளத்தில் இருந்து உருவாகும் பெரிய கால்வாய்கள் (பெரு-வாய்க்கால்கள்) பொதுவாக ஆட்சியாளரின் பெயரால் உத்தமசோழன்-வாய்க்கால், விக்ரமசோழன்-வாய்க்கால், விக்ரமகேசரி-வாய்க்கால் என்றழைக்கப்படுகிறது (பு.க.தொ. 90, 92). சில நேரங்களில், பெரிய பாசனப் பகுதியின் தேவைகளை நிறைவேற்ற ஒரு துணைக்கால்கள் உருவாக்கப்படுகின்றன. இவை உட்சிறு வாய்க்கால், இடை

வாய்க்கால் எனப்படும். சில நேரங்களில் இத்தகைய திசைதிருப்பல்களுக்குப் பிரிந்த அல்லது நின்று என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்படுகிறது.

நாழிவாய்

குளத்தின் உள்வாய்கள் நாழிவாய் என்றழைக்கப்படுகின்றன. நாழிகை என்றால் நேரம் என்றும், வாய் என்றால் திறப்பு என்றும் பொருள்படும். வெளியேற்றப்படும் நீரின் அளவு, உள்வாயில் வழியாக நேரம் கணக்கிடப்பட்டு வெளியேற்றப்படுகிறது அல்லது கட்டுப்படுத்தப்படுகிறது. எனவே இது நாழிவாய் என அழைக்கப்படுகிறது. நீர்ப் பகிர்மானத்தில் நேரங்கள் நாழிகை எனக் குறிப்பிடப்படுகிறது. ஒரு நாழிகை என்றால் 24 நிமிடங்கள். பாசனக் கட்டளைப் பகுதியில் உள்ள நிலத்திற்கு நாழிகையின் அடிப்படையில் நீர் வெளியேற்றப்பட்டது. இந்நிலத்துக்குப்பெரிய குமிழியிலே போகுமுறையில் 3 நாழிகை நீர்விடுவோமாகவும் என்ற சொற்றொடர் 72 நிமிடங்கள் குமிழியில் இருந்து நீர் வெளியேறுவதைக் குறிக்கிறது (பு.க.தொ. 301). தமிழ்நாட்டின் கோவில் கல்வெட்டுகளில் இது போன்ற குறிப்புகள் பல உள்ளன.

நீர்க்கோவை

நீர்க்கோவை என்ற சொல் பொதுவாக நீர்நிலையின் அளவைக் குறிக்கிறது. குளத்து நீர்க்கோவை, குளத்துக்கு நீர்க்கோவை, குளக்கோவை, குளத்தில் நீர்க்கோவை போன்ற சொற்கள் குளத்தில் காணப்படும் நீர்ப்பரப்பையும், குளத்திற்குரிய நீர்ப்பரப்பையும் குறிப்பனவாக உள்ளன (பு.க.தொ. 135, 190, 228, 136). இத்தகைய குறிப்புகள் பொதுவாகக் குளம், குளத்து நீர், நீர்ப்பிடிப்புப் பகுதி மற்றும் நீர் கொண்டுவரும் வாரிகள் ஆகியவை விற்பனை செய்யப்படும்பொழுது அவ்விற்பனை ஆவணத்துடன் கல்வெட்டுகளில் இச்சொற்கள் பயின்றுவருவதைக் காணலாம். முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் (பொ.ஆ.1237) 21ஆவது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட இடையாத்தூர் கல்வெட்டில் குறிப்பிடப்படும் இக்குளத்து நீர்கோக்கும் நீர்க்கோவை என்ற சொற்றொடர், அது ஒரு குறிப்பிட்ட குளத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதியைக் குறிக்கிறது.

வாரி

குளங்களுக்கு நீர்ப்பிடிப்புப் பகுதியில் இருந்து நீர் வருகிறது அல்லது ஆற்றில் இருந்து நீர் திருப்பிவிடப்படுகிறது. பெரும்பாலான குளங்களுக்கு மழைக்காலங்களில் நீர்வாரி/கால் வழியாக நீர் சென்றடைகின்றது. இந்நீர்வாரிகள் அதன் அளவைப்பொறுத்து சிறுவாரி, பெருவாரி என்றழைக்கப்படுகின்றன. குளமும், குளப்பரப்பும், குளவாரியும், இக்குளத்துக்குப் பாய்கிற வாரி, பெருங்குளத்து வாரி போன்ற சொற்கள் குளம் பெற்ற நீர்வரத்துகளைக் குறிக்கின்றன (பு.க.தொ. 90, 559, 882). ஒரு குளத்தில் இருந்து வெளியேறும் நீர் அதன் பாசனப்பகுதி அல்லது கட்டளைப் பகுதிக்கு நீர்ப்பாசனம் செய்த பிறகு, அதிகப்படியான நீர் அடுத்துள்ள குளத்திற்குச் சென்றடையும். இதற்குக் கால் என்று பெயர். எனவே இயற்கையாக மழை நீரைக் கொண்டு வருபவை வாரி என்றும், குளத்தில் இருந்து மற்றொரு குளத்திற்கு நீரைக் கொண்டு செல்பவை கால் என்றும் அழைக்கப்படுகின்றன.

கரை

குளத்தின் கரையின் உயரத்தை வலுப்படுத்துவது அல்லது உயர்த்துவது பற்றிக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்குளத்தில் தமக்குள் கரை உயர்த்திக்கொண்டு, கயிறு பிடித்து கரை சுமந்து கொள்வாராகவும் (பு.க.தொ. 421, 363) போன்ற சொற்றொடர்கள் குளத்தின் நீர்க்கொள்ளளவை அதிகரிக்க மேற்கொண்ட செயல்பாடுகளாகும். பொதுவாக ஒரு குளத்தின் அதிகப்படியான நீர் வெளியேற்றப்பட்டு அதற்கு அடுத்தடுத்துள்ள கீழ்நிலைக் குளங்களைச் சென்றடைகிறது. மேல் பகுதியில் உள்ள குளத்தின் கரையை உயர்த்தும்பொழுது நீரின் கொள்ளளவு உயர்ந்து அக்குளத்திலிருந்து வெளியேறும் நீரின் அளவு குறையும். இது கீழ்க் குளத்தின் நீரின் அளவைப் பாதிக்கும் என்பதால் கரையை உயர்த்தும் பணி ஆட்சியாளரின் அனுமதியுடன் கூட்டு முடிவாக எடுக்கப்படும்.

குமிழி

குமிழி எனப்படும் நீரியல் சாதனம் மனிதகுலத்தின் மிகப் பெரிய கண்டுபிடிப்புகளில் ஒன்றாகக் கருதலாம். இந்தச் சாதனத்தின் மூலம் வறண்ட மண்டலங்களின் கிராமப்புறப் பொருளாதாரம் பெரும் மாற்றத்திற்குள்ளாகியது. கல்வெட்டுப் பதிவுகளின்படி 1300 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தச் சாதனம் நின்று நிலைத்திருப்பது அதன் தொழில்நுட்ப நம்பகத்தன்மைக்குச் சான்றாக உள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்தின் செங்கம் வட்டத்தில் உள்ள ஆனத்தூரில் கிடைத்த பொ.ஆ. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் (பொ.ஆ. 610-630) கல்வெட்டைத் தாங்கி நிற்கும் செங்கல்லால் ஆன மடையுடன் கூடிய குமிழிக் கல்வெட்டே இதுவரை தமிழ்நாட்டில் கிடைத்த பழமையான மடை ஆகும். இம்மடை குளத்தின் உள் பகுதியில் (முன்குளத்தில்) செங்கற்களால் கட்டப்பட்ட சிறிய பெட்டி அல்லது பேழை போன்ற அமைப்பாகும். இந்தக் கட்டமைப்பின் இருபுறமும், 60-70 செ.மீ. உயரம் கொண்ட செவ்வக வடிவிலான செங்குத்தான இரண்டு கல் தூண்கள் அரை வட்ட மேல்புறத்துடன் நிறுவப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் பட்டங்களில் ஒன்றான ஸ்ரீ குணமிலி பலகைக்கல் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டு மடை என்ற சொல்லைக் கொண்டிருக்கவில்லை என்றாலும், தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் பல இடங்களில் காணப்படும் இத்தகைய கட்டமைப்புகளின் ஒத்த தன்மையை இவை கொண்டிருப்பதால் இது பிற்கால மடையின் முன்மாதிரி என்று கூறலாம். இருப்பினும், குமிழி என்ற சொல்லாட்சி முதன் முதலாகப் புதுக்கோட்டை மாவட்டம் ராசாலிப்பட்டியில் பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மனின் 25ஆவது ஆட்சி ஆண்டில் (பொ.ஆ.756 CE) நிறுவப்பட்ட குமிழியில் கற்குமிழி என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (பு.க.தொ. 16). இந்நீரியல் சாதனமானது கரையில் இருந்து சிறிது தொலைவில் குளத்தின் ஆழமான பகுதியில் நிறுவப்பட்டுள்ளது. இரண்டு கல் தூண்கள் குமிழி வாயின் இருபுறமும் செங்குத்தாக நிலைநிறுத்தப்பட்டுள்ளன. இத்தூண்களுக்கு இடையில் சாத்துக்கல்லாக வைக்கப்பட்டுள்ள பலகைக்கல்லில் கல்வெட்டு காணப்படுகிறது (படம் 17). ஸ்ரீ ஆரிதம்புல்லன் மகன் புல்லய கடம்பனால் நிறுவப்பட்டதை இக்கல்வெட்டு எடுத்துரைக்கிறது. பொ.ஆ. 769இல் கண்ணூரில் (இராசேந்திரன் 2017:109) நிறுவப்பட்ட குமிழியும் பொ.ஆ. 772ஆம் ஆண்டில் பாண்டிய மன்னன் முதலாம் வரகுணன் என அடையாளம் காணப்பட்ட கோமாறனின் ஏழாம் ஆட்சியாண்டில் அவரது அதிகாரிகளில் ஒருவரான (பெருந்திணை) மூதாண்டி பெருந்திணை வெண்கன் என்பவரால்

கவினாட்டுக் கண்மாயில் நிறுவப்பட்ட குமிழியும் புதுக்கோட்டைப் பகுதியில் கிடைத்த காலத்தால் முந்திய குமிழிகளாகக் கருதப்படுகின்றன (இராசேந்திரன் 1993:12). வட தமிழகத்தில் பல்லவர்களாலும், தென் தமிழகத்தில் பாண்டியர்களாலும் குளத்துப் பாசனம் தொடர்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை கல்வெட்டின் துணைகொண்டு உய்த்துணரலாம். எனவே, தமிழ்நாட்டின் வறண்ட மண்டலங்களில் உருவாகிய நீர் ஒழுங்குமுறை அமைப்புகளில் ஒன்றாகக் குமிழித் தொழில்நுட்பம் காணப்படுகிறது. தமிழ்நாட்டின் வறண்ட வேளாண் மண்டலங்களான புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, ராமநாதபுரம் மற்றும் செங்கல்பட்டுப் பகுதிகளில் இந்தக் குமிழித் தொழில்நுட்பம் இன்னும் பயன்பாட்டில் உள்ளது. வறண்ட மண்டலங்களில் குளத்து நீர்ப்பாசனம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் வேளாண்மை பெருகி கிராமங்கள், வட்டார நிலப் பிரிவுகளான கூற்றம், நாடு, கோட்டம், பாடி போன்றவை உருவாகவும், குல அடிப்படையிலான சமூகமும் உள்ளூர்த் தலைவர்களும் தோன்ற அடிகோலின.

குமிழியின் அமைப்பு

தூம்பின் உள்முனையில் அல்லது உள்வாயிலில் அதன் மேல்பரப்பில் நீர் தூம்புக்குள் உட்செல்லும் வகையில் சிறிய துளை ஒன்று இருக்கும். பேழை அல்லது சிறிய பெட்டி போன்ற கட்டமைப்பின் மூடு பலகைக்கல்லில் நீர் செங்குத்தாகச் செல்லும் வண்ணம் வட்டவடிவில் இத்துளை காணப்படும். இத்துளைவழியாக நீர் தூம்பினுள் செல்லும்பொழுது காற்று குமிழிகளாக இதன் வழியே வெளியேறுவதால் இது குமிழி எனப்பெயர் பெற்றது. பேழையின் இருபுறமும் சிறிது இடைவெளியில் இரு கல்தூண்கள் (கால்) செங்குத்தாக நிறுத்தப்பட்டிருக்கும் (படம் 18-21). இவ்விரு கல் தூண்கள் ஒன்றோடொன்று உயரத்திற்கு ஏற்றவாறு மூன்று அல்லது நான்கு கிடைமட்ட பலகைக்கல் கொண்டு குறுக்காகச் சம இடைவெளியில் இணைக்கப்பட்டிருக்கும். இவ்விணைப்புப் பலகைக்கற்கள் மிண்டகப்படை என்று அழைக்கப்படுகின்றன. தூணின் உயரம் என்பது குளத்தின் ஆழம் அல்லது குளத்தின் அதிகபட்ச நீர் மட்டத்தைப் பொறுத்தது. பொதுவாக, தூணின் உயரம் 3 மீ. முதல் 6 மீ. வரை இருக்கும். இரண்டு தூண்களுக்கு இடையே உள்ள தூரம் 1 முதல் 1.5 மீ. வரை மாறுபடும். ஒவ்வொரு இணைப்புக் கல்லின் மையத்திலும் ஒரு வட்டவடிவத் துளை இருக்கும். அனைத்துத் துளைகளும் நேர்க்கோட்டில் ஒரு செங்குத்து அச்சில் இருக்கும். இத்துளைகள் வழியாக மேலிருந்து கீழ்நோக்கி ஒரு குச்சி செலுத்தப்படும். இதற்கு மிண்டகம் என்று பெயர். அக்குச்சியின் கீழ்முனை தூம்பின் உள்முனையில் இருக்கும் குமிழித்துளையுடன் சரியாகப் பொருந்தும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் குமிழியின் வாய்ப்பகுதியை மூடவும் திறக்கவும் இயலும். பொதுவாக, துளையின் விட்டம் 15-25 செ.மீ. இருக்கும். துளையை அடைக்கும் குச்சியினை மேலே உயர்த்தினால் நீர் நுழைவாயில் வழியாகச் செங்குத்தாகத் தூம்புக்குள் நுழையும். நீர் துளைக்குள் நுழையும்போது உள்ளே இருக்கும் காற்று குமிழியாக வெளிப்படும். தூம்பின் உள்முனையில் மேல் இருக்கும் வட்டவடிவத் துளையைத் தவிர தூம்பின் உள்வாயிலுக்குக் கீழாக இரண்டு அல்லது மூன்று துளைகள் ஒரு கிடைமட்ட அச்சில் கற்பேழைக்குக் கீழே இருக்கும். இத்துளைகள் சேரோடி என்றழைக்கப்படும். மிகவும் அரிதான நேரங்களில் இரண்டு அல்லது மூன்று துளைகள் கொண்டிருப்பதை மேலப்பனையூர் மற்றும் விசலூரில் உள்ள நீரியல் கருவிகளில் காணலாம் (இராசேந்திரன் 2008:808-94; 692).

சேரோடியின் அளவு குமிழிவாயிலின் அளவை விட சற்றுப் பெரியதாகக் காணப்படும். சேரோடி என்றழைக்கப்படும் இத்துளைகள் பொதுவாக ஒரு மரத்துண்டு அல்லது ஒரு கல் கொண்டு அடைக்கப்பட்டிருக்கும். தூம்பில் அடைப்பு ஏற்படும்பொழுது இவை நீக்கப்படும். அவ்வாறு நீக்கப்படும்பொழுது குளத்தில் உள்ள நீர் படுவேகமாகத் தூம்புக்குள் பாயும். நீரின் வேகத்தின் காரணமாகத் தூம்புக்குள் இருக்கும் அடைப்புகள் நீக்கப்பட்டு நீரோட்டம் ஒழுங்குபடுத்தப்படும். ஆகவே, நீரியல் சாதனத்தின் முக்கியமான தொழில்நுட்பக் கூறுகளில் ஒன்றாகச் சேரோடி கருதப்படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ளபடி குமிழியின் வழியாகத் தூம்புக்குள் செல்லும் நீர் குளத்திற்கு வெளியே கட்டப்பட்டுள்ள புறமடை எனும் கற்பேழைக்குள் விழுந்து பல்வேறு திசைகளிலும் பாசனத்திற்காகச் செல்லும் (படம் 22). நீர்ப்பாசன நிலத்தின் தேவைகள் அல்லது ஆயக்கட்டின் தேவைகள், குளத்தில் உள்ள நீர் இருப்பு ஆகியவற்றைப் பொறுத்து வெளியேறும் நீரின் அளவு கட்டுப்படுத்தப்படும். சில நேரங்களில் தூம்பிலிருந்து நேரடியாக நீர் வாய்க்கால்களுக்குச் செல்வதும் உண்டு. தூம்பு நீர்வதி விழுந்த கால் என்ற கல்வெட்டுச் சொற்றொடர் தூம்பில் இருந்து நீர் நேரடியாக வெளியேறுவதைக் குறிக்கிறது (தெ.க.தொ. 7:93).

குமிழிக்கு முன்பாகச் செவ்வக வடிவத்தில் உள்வாயில் திறப்புடன் தொட்டி போன்ற அமைப்பு காணப்படும். இத்தொட்டி போன்ற அமைப்பு தேவையற்ற சேர் குமிழியிலோ அல்லது தூம்பிலோ அடைபடாத வகையில் காக்கின்றன. இவை செங்கல் அல்லது கற்களால் கட்டமைக்கப்பட்டிருக்கும். மேலும் ஒரு சிறிய பலகைக்கல் குமிழித் தூண்களின் மீது உட்புறமாகச் சாய்த்துவைக்கப்பட்டிருக்கும். இதற்குச் சாத்துக்கல் என்று பெயர். இச்சாத்துக்கல் தூண்கள் சாய்ந்துவிடாமல் பாதுகாப்பதுடன், தூணைச் சுற்றி மண் அரிப்பு ஏற்படாமல் பாதுகாக்கின்றது. காலத்தால் முந்திய கல்வெட்டுகள் சில இச்சாத்துக்கல்லில் எழுதப்பட்டுள்ளன. ராசாலிப்பட்டி, கீழ்வேதி, அன்னவாசல், தியாகை ஆகிய இடங்களில் இத்தகைய கல்வெட்டுகள் காணப்படுகின்றன. தூம்பு குமிழி நிறுவப்பட்ட இடத்திலிருந்து சாய்வாக நிலத்தடியில் கரையின் குறுக்கே சென்று இறுதியாக வெளிப்புற வாய் (கண்) வழியாக நீர் வெளியேறும். இந்த நீரியல் அமைப்பு கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ மடை, தூம்பு மற்றும் குமிழி என்று கல்வெட்டுகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. தென் தமிழகத்தில் மடை/குமிழி என்றும், வட தமிழகத்தில் இந்நீரியல் சாதனம் தூம்பு என்றும் குறிப்பிடப்படுகிறது.

நீரியல் சாதனத்தை உற்று நோக்கும்பொழுது அதன் அமைப்பில் காணப்படும் சில தொழில்நுட்பக் கூறுகளை அறிந்துகொள்ள முடிகிறது. தூம்பு இருவகையான கட்டுமானத்தைக் கொண்டிருக்கிறது. தொடக்ககாலத்தில் தூம்பின் முன் உள்ள நுழைவு வாயில் வழியாகக் கிடைமட்ட அச்சில் நீர் நேரடியாகப் பாய்ந்துசென்றிருக்கவேண்டும். பின்னர், நீர் கிடைமட்டமாகப் பாய்வதற்குப் பதிலாக முன்னர் குறிப்பிட்டது போல் செங்குத்தாகத் தூம்பினுள் பாய்ந்தது. ஆதலால் முதல் வகை மடை என்றும், இரண்டாவது வகை குமிழி என்றும் அழைக்கப்பட்டிருக்கலாம். எனவே தான் இரண்டாம் வகை தொழில்நுட்பம் அறிமுகமான

பின்னரும் இந்நீரியல் சாதனம் மடை என்ற பழைய பெயரிலேயே அழைக்கப்பட்டிருக்க வேண்டும். முதல் வகையில் நீர் நேரடியாக வழித்தடத்தில் நுழைந்ததால் தூம்பினுள் வண்டல் மண் தேங்கிக் காலப்போக்கில் தண்ணீரின் சீரான வெளியேற்றம்/ஓட்டம் தடைபடுவதற்கு வழிவகுத்தது. பின்னர், ஒன்று அல்லது இரட்டைத் துளைகள் கொண்ட பலகைக்கல் தூம்பின் நுழைவு வாயிலில் வைக்கப்பட்டது. பின்னர், வாயிலின் அளவு தூம்பு வாயிலின் அளவைவிட சிறியதாக வடிவமைக்கப்பட்டது. இந்த ஏற்பாடு நீரின் வேகத்தின் காரணமாக அனைத்து வண்டல் மண்ணையும் எடுத்துச் செல்லும் வகையில் அமைந்ததால் தூம்பில் அடைப்பு ஏற்படாமல் தாமாகவே சுத்தப்படுத்திக்கொண்டன. பின்னர், துளைகளின் எண்ணிக்கையும், அளவும் வடிவமும் தேவைக்கேற்ப மீண்டும் மாற்றப்பட்டன. எடுத்துக்காட்டாக, மூன்று துளைகள் ஒரு முக்கோண வடிவத்தில் மேல் ஒன்றும், கீழ் இரண்டுமாக வைக்கப்பட்டன. எப்போதாவது, மேலே இரண்டு வட்டவடிவத் துளைகளும், கீழே ஒரு செவ்வக வடிவத்திலும் காணப்படுகின்றன. கீழ்த் துளையின் அளவு பெரும்பாலும் மேல் துளைகளைவிட அளவில் பெரியதாக இருக்கும்.

இரண்டாவது கட்டத்தில், தூம்பினுள் செங்குத்து அச்சில் நீர் மேலே இருந்து நுழைய அனுமதித்த பிறகும் வடிகால் வாயின் முன்புறத்தில் வைக்கப்பட்டுள்ள துளைகள் செவ்வக வடிவில் தொடர்ந்தன. இவை மண் அடைப்பை நீக்கும் சேரோடிகளாக விளங்கின. இந்த ஏற்பாட்டின் மூலம் தூம்பினுள் செல்லும் நீரின் நுழைவுமுறை ஒழுங்குபடுத்தப்பட்டது. மேல் துளை (குமிழி) வழியாக நீர் செங்குத்து அச்சில் நுழையும்போது, தூம்பின் கிடைமட்ட அச்சில் காணப்படும் துளைகள் கல் அல்லது மரம் கொண்டு அடைக்கப்பட்டிருக்கும். தூம்பில் அடைப்பு ஏற்பட்டால் இவ்வடைப்புகள் நீக்கப்பட்டு நீர் தூம்பினுள் வேகமாக அதிக சக்தியுடன் செல்ல அனுமதிக்கப்பட்டு அடைப்புகள் நீக்கப்பட்டு நீரோட்டம் சீர் செய்யப்படும். இந்தச் செயல்முறை சேரோடி என்று அழைக்கப்படுகிறது.

பெருங்குமிழி, சிறுகுமிழி போன்ற சொற்களின் பயன்பாடு குளத்தின் அளவிற்கு ஏற்றவாறு மாறுபடுகிறது என்பதைக் குறிக்கிறது. அதேபோல நடுமடை, கடைமடை போன்ற சொற்கள் குளத்தின் வெவ்வேறு இடங்களில் குமிழிகள் நிறுவப்பட்டிருப்பதைக் கூறுகின்றன. பெரிய குமிழி பொதுவாகக் குளத்தின் மையப் பகுதியில் நடுமடையாக நிறுவப்படும். குளத்தின் நீரை முழுவதுமாக வெளியேற்ற இது உதவுகிறது. எனவே, குளத்தின் முழு நீர்க் கொள்ளளவையும் பயன்படுத்த, உரிய இடங்களில் குமிழிகள் அமைப்பது மிகவும் முக்கியம். காலும் குளமும் செய்வித்தபடி, குமிழியும் குளமும், இக்குமிழியில் கற்காலும் குமிழியும் மிண்டகமும் கடையங்கிணறும் போன்ற சொற்றொடர்கள் குளத்தில் நிறுவப்பட்ட பல்வேறு நீரியல் சாதனங்களின் பல்வேறு கூறுகளைக் குறிக்கின்றன (முத்துக்குமார் 2019:160-161; பாலமுருகன் மற்றும் சுதாகர் 4-2040; 2017:248). குளத்தின் அனைத்துக் கூறுகளையும் பராமரிப்பதில் அவர்கள் கவனம் செலுத்தினர். இவற்றில் தூண்கள் (கால்) மற்றும் தூம்புகள் ஆகியவை அடிக்கடி பழுதுபார்க்கப்பட்டன என்பதைப் புதுக்கின குமிழி, குமிழி உடைஞ்சு போனகையில் இக்குமிழி படுத்து, குமிழியழிந்து அழிந்த குமிழி புதுக்கினேன் போன்ற கல்வெட்டுச் சொற்றொடர்கள் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்புப் பணியைக் குறிக்கின்றன (இராசேந்திரன் 2017:46; ராஜன்

2008:276, 260). குமிழித் தூண் (கால்) சில இடங்களில் மணவாளக்கால் *(*இராசேந்திரன் *1991:40; 1993:12; 2019:68, 76, 79, 85)* என்றும் பெட்டைக்கால் (இராசேந்திரன் *2017:89) 1991:39; 2019:91)* என்றும் அழைக்கப்படுகிறது. மணவாளக்கால் என்பது ஆண்களின் தூண் எனவும், குமரிக்கால் அல்லது பெட்டைக்கால் என்பது பெண்களின் தூண் என்றும் பொருள் கொள்ளலாம். கிடைத்த குறைந்த அளவிலான சான்றுகளின் அடிப்படையில் எந்த இறுதி முடிவுக்கும் வருவது கடினம். இருப்பினும், இதை இரண்டு வழிகளில் உய்த்துணரலாம். முதலில் நிறுவப்பட்ட தூண் மணவாளக்கால் என்றும், இரண்டாவதாக நிறுவப்படும் தூண் குறுக்குக் கிடைமட்டப் பலகைக்கல் மூலம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு அதன் மூலம் வளமை பெருக்கப்படுவதால் குமரிக்கால் என்றும் அழைக்கப்பட்டிருக்கலாம். இல்லையெனில், ஆண்களால் நிறுவப்பட்டதை மணவாளக்கால் என்றும் பெண்களால் நிறுவப்பட்டதை குமரிக்கால் என்றும் அழைக்கப்பட்டிருக்கலாம். கல்வெட்டுகள் இரண்டு கருத்தையும் ஏற்றுக்கொள்ளும் வகையில் சான்றுகள் அளிக்கின்றன. செட்டிமுத்திப்பட்டியில் உள்ள குளத்தில் நிறுவப்பட்ட குமரிக்கால் என்றழைக்கப்படும் தூண் ஒரு பெண்ணால் நிறுவப்பட்டது. சத்தியமங்கலம், வயலோகம், ராசிபுரம் மற்றும் உப்பிலிக்குடி ஆகிய இடங்களில் உள்ள குளத்தில் ஆண்களால் நிறுவப்பட்டவை மணவாளக்கால் என்றும் அழைக்கப்படுகிறது. இத்தகைய சான்றுகள் பெரும்பாலும் புதுக்கோட்டை வட்டாரங்களிலேயே கிடைக்கின்றன (இராசேந்திரன் *1991:40; 1993:14; 1997:24; 2003:20-22;* பாஸ்கரன் மற்றும் பலர்.*,2005:30).* மிண்டகம் என்ற சொல் நெய்வேலி, வைகப்பட்டி, தேரவூர் (இராசேந்திரன் *1989;* இராசேந்திரன் *2017:28, 220)* ஆகிய ஊர்களின் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. இதை கற்கால் நாட்டி மிண்டகமும் செய்வித்தான், இக்குளத்தில் கற்காலும் மிண்டகமும் கடையங்கிணறும் செய்வித்தான் என்ற சொற்றொடர்கள் மூலம் அறியலாம். குமிழி, கால், மிண்டகம் என்ற சொற்கள் நீரியல் சாதனத்தின் பல்வேறு கூறுகள் என்பதை உணரலாம் (இராசேந்திரன் *2017:220, 248).* தமிழ்ப் பேரகராதி மிண்டு என்ற சொல் நெம்புகோலுக்குப் பயின்று வருவதைக் குறிக்கிறது. எனவே, இந்தச் சொல்லைப் புரிந்துகொள்வதற்கு நேரடியான சான்று இல்லாததால், இரு கல்தூண்களை இணைக்கும் பலகைக்கல்லில் காணப்படும் துளையின் வழியாகச் செங்குத்தாகக் குச்சியைச் செலுத்தி அந்நாழிவாயை அடைக்கும் குச்சி அல்லது கம்பு மிண்டகம் என்று கருதப்படுகிறது. இரண்டு செங்குத்துத் தூண்களையும் ஒன்றோடொன்று இணைக்கும் கிடைமட்ட பலகைக்கற்கள் மிண்டகப்படை என்று அழைக்கப்படுகின்றன (முத்துக்குமார் *2017).*

இத்தொழில்நுட்பம் புதுக்கோட்டைப் பகுதியிலும், பின்னர் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் குறிப்பாகப் பாண்டி நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. தொழில்நுட்ப வளர்ச்சியின் முதல் கட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்ட மடை என்ற சொல், பிந்தைய நிலையில் குமிழியைக் குறிக்க தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது. இந்தத் தொழில்நுட்பம் சார்ந்த நீரியல் முறையானது சமகால நீர் மேலாண்மை அமைப்பின் மிகச்சிறந்த செலவு குறைந்த நுட்பங்களில் ஒன்றாகக் கருதலாம். பொ.ஆ. *6-7*ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த நீரியல் சாதனம், வறட்சியான மண்டலங்களின் பண்பாட்டையும் பொருளாதாரத்தையும் மிகப்பெரிய அளவில் மாற்றி அமைத்தது என்றால் மிகையாகாது. நம்பகத்தன்மை வாய்ந்த, நிலையான, குறைந்த செலவு மற்றும் பராமரிப்பு கொண்ட இந்நீரியல் சாதனம் மனிதகுலத்தின் தொழில்நுட்பக்

கண்டுபிடிப்புகளில் ஒன்றாகக் கருதலாம். இத்தொழில்நுட்பம் பிற இடங்களுக்கு வேகமாகப் பரவியமையும், நீண்ட காலம் நின்று நிலைத்தமையும் அத்தொழில்நுட்பத்தின் தேவையையும், நம்பகத்தன்மையையும் மேலும் பறைசாற்றுவனவாய் உள்ளன.

குளங்களின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு

ஒரு குளத்தின் கட்டுமானத்திற்கு உள்ளூர் நிலவியல், நிலத்தின் தன்மை, மழைப்பொழிவின் அளவு, பருவமழையின் தாக்கம் மற்றும் நீரியல் சுழற்சியின் பிற நுணுக்கமான கூறுகளைப் பற்றிய பரந்த அறிவும், பட்டறிவும் தேவைப்படுகிறது. நீர்ப்பிடிப்புப் பகுதி, நீர்த்தேக்கத்தின் இடம் மற்றும் நீர்ப்பாசனம் செய்யப்பட வேண்டிய நிலம் ஆகியவற்றைப் புரிந்துகொண்ட பின்னரே குளம் அமைக்க இயலும். நீர்பிடிப்புப் பகுதி, நீர்த் தேக்கத்தின் பரப்பளவு, நீர்க்கொள்ளளவு, கட்டளைப் பகுதி, நீரோட்டத்திற்குத் தேவைப்படும் நிலத்தின் சாய்வு அல்லது பாங்கு, அப்பகுதியின் மழைப்பொழிவு மற்றும் நீரியல் பண்புகள் குறித்த நுணுக்கமான தரவுகள் சேகரிக்கப்பட்டு அதற்கேற்ப கரை, கலிங்கு, குமிழி மற்றும் கால்வாய் ஆகியவற்றைக் கொண்டு குளம் வடிவமைக்கப்படும்.

சில பழங்கால ஏரி எனப்படும் பெரிய நீர்த்தேக்கங்கள் அதன் மையப் புள்ளியில் இருந்து 2 கி.மீ. தொலைவில் உபரி நீர் வெளியேற்றும் கலிங்குகள் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாகப் புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள கவிநாட்டுக் கண்மாயில் அமைக்கப்பட்டுள்ள கலிங்கினைக் குறிப்பிடலாம். கலிங்கு குளத்தின் பாதுகாப்பிற்கு மிகமுக்கியமானது என்பதால் நிலத்தின் உயர்வு, தாழ்வு, குளத்தின் மேடு, பள்ளங்களை நன்கு புரிந்துகொண்டிருக்க வேண்டும் என்பதே இதன் பொருள். இதைத் தவிர குளத்தின் கட்டுமானம் மற்றும் குமிழிகளின் வடிவமைப்பு என்பது மண் இயக்கவியல் மற்றும் நீரியல் பண்புகளை உள்ளடக்கியதாகும். சில சமயங்களில், மண் சுமந்து கரை எழுப்புவதற்கு பதிலாகக் குளத்தைக் கட்டுவதற்கு அப்பகுதியில் காணும் இயற்கையான பாறை அமைப்புகளைப் பயன்படுத்தி உள்ளனர். நார்த்தாமலையில் கட்டப்பட்ட அணிமத ஏரி மற்றும் பெருமானாடு ஆகிய இடங்களில் கட்டப்பட்ட குளங்களை இத்தகைய கட்டுமானங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம்.

எண்ணற்ற இலக்கிய, கல்வெட்டுப் பதிவுகள், குளம் அமைப்பதும், குமிழி அமைப்பதும் மனிதகுலத்திற்கு உகந்த உன்னதப் பணியாகக் கருதப்பட்டதைச் சுட்டிக் காட்டுகின்றன. சங்க காலச் சோழ மன்னன் கரிகாலன் காவிரி ஆற்றின் கரைகளை உயர்த்தி, வெள்ளநீரைக் கால்வாய்கள் மூலம் பாசனத்திற்குத் திருப்பி விடும் நுட்பத்தை அறிமுகப்படுத்தியதையும், குளங்களை வெட்டி நாட்டை வளப்படுத்தியதை சங்க இலக்கியமான பட்டினப்பாலை (283, 284) எடுத்துரைக்கிறது (Nilakanta Sastri 1955:583). சங்கத்திற்குப் பிந்தைய படைப்புகளான சிறுபஞ்சமூலம் மற்றும் திரிகடுகம் ஆகியவை மனிதர்களின் புண்ணிய செயல்களில் ஒன்றாகக் குளங்கள் வெட்டுவதைப் போற்றுகின்றன.

பொ.ஆ. 7-8ஆம் நூற்றாண்டின் கல்வெட்டுப் பதிவுகள், ஆட்சியாளர்கள் அந்தந்தப் பகுதிகளில் ஏராளமான நீர்த்தேக்கங்களை (குளங்கள், ஏரிகள்) எழுப்பியதாகக் கூறுகின்றன.

பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் (பொ.ஆ.610-630) மாமண்டூருக்கு அருகில் மகேந்திர-தடாகம் மற்றும் சித்திரமேகத்-தடாகம் எனப்படும் பெரிய நீர்த்தேக்கங்களைக் கட்டினார் (க.ஆ. 83/1943-44; இ.க.தொ.IV, எண்19, ப.152; *Manual of North Arcot District II, p.43; Manual of North Arcot District, Pt.1, p.305*). முதலாம் பரமேஸ்வரவர்மன் (பொ.ஆ. 670-700) (தெ.க.தொ. I:151) பரமேஸ்வர-தடாகம் என்று அழைக்கப்படும் குளத்தை எழுப்பியதாகக் கூரம் செப்புத் தகடு சான்றளிக்கிறது. பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மன் (பொ.ஆ.731-796) ஆட்சியின்போது, ராசாலிப்பட்டி என்ற இடத்தில் வாலி வடுகன் என்றழைக்கப்படும் கலிமூர்க்க இளவரையன் என்பவன் வாலி ஏரி என்று தனது பெயரில் குளத்தை எழுப்பி அக்குளத்தில் குமிழியும் அமை த்துக்கொடுத்தான் என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது (பு.க.தொ. 17). அதேபோல் திரையனேரி மற்றும் காவேரிப்பாக்கம் ஏரிகள் மூன்றாம் நந்திவர்மனால் கட்டப்பட்டன (மினாட்சி 1938:119; 124). மேற்குறிப்பிட்ட சான்றுகள் தொடக்க காலத்தில் பெரும்பாலான குளங்கள் அரசரால் அல்லது அரசால் நிதியளிக்கப்பட்டுத் தொடங்கப்பட்டவை என்பதை அறியமுடிகிறது. இருப்பினும், குளம் கட்டப்பட்டு அதன் பின்னர் குளத்தின் பராமரிப்பு ஊர்ச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. பொ.ஆ. 6 மற்றும் 9ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இதுபோன்ற கட்டுமான நடவடிக்கைகள் அதிகமாக இருந்ததாகக் கல்வெட்டுச் சான்றுகள் தெரிவிக்கின்றன. எடுத்துக்காட்டாக, புத்தேரி நீர்த்தேக்கம் ஆதித்ய சோழனால் கட்டப்பட்டது (க.ஆ. 62/1935-36). காவிரிக்குளம் மற்றும் பரமேஸ்வரப் பேரேரி ஆகியவை முதலாம் இராஜராஜனால் கட்டப்பட்டன (தெ.க.தொ. 17:336). அதேபோல், குறுநிலமன்னர்கள், உள்ளூர்த் தலைவர்கள், அதிகாரிகள் மற்றும் தனி நபர்களும் எண்ணற்ற குளங்களை வெட்டியுள்ளனர். இதில் ஊர்ச்சபை அல்லது சமூகம் நேரடியாக ஈடுபட்டதை முதலாம் ராஜராஜனின் 11ஆவது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட தருமபுரிமாவட்டம் ஓமலூர் வட்டத்தில் உள்ள தாகசமுத்திரக் கல்வெட்டின் மூலம் அறியமுடிகிறது. இக்கல்வெட்டு இரண்டு நன்கொடையாளர்களும் முதலில் தங்கள் கையில் மண்ணை ஏந்தி வேலையைத் தொடங்கிவைத்தனர் என்பதை இவ்விருவோம் எங்கள் கையால் மண்ணொழுக்கி இவ்வேரி கட்டினோம் என்ற சொற்றொடர் மூலம் அறியமுடிகிறது (சண்முகம் 2001:37). இதனால், குளங்கள் கட்டும் பணி முதலில் அரசால் தொடங்கப்பட்டு, பின்னர் அப்பொறுப்பு உள்ளூர்ச் சமூகங்களுக்கு மாற்றப்பட்டது என்பதை அறியமுடிகிறது. பிற்காலக் கல்வெட்டுகள் பழுதுபார்க்கும் பணிகள், சிதைந்த குமிழிகளைப் பழுதுபார்த்தல், மீண்டும் நிறுவுதல் போன்ற பராமரிப்புப் பணிகளையே பெரும்பாலும் பேசுகின்றன. இவை பொ.ஆ. 9ஆம் நூற்றாண்டிற்கு முன்பே தமிழ்நாட்டில் குளத்துப் பாசனம் நன்கு நிறுவப்பட்டிருந்ததைத் தெளிவாகக் காட்டுகின்றன.

குளங்கள் பராமரிப்பு

குளம் தூர்வார்தல், குளத்தை விரிவுபடுத்துதல், குமிழிகளைப் பலப்படுத்துதல், தூம்பின் அடைப்பை நீக்கிச் சுத்தம் செய்தல், குமிழ், கால், தூம்பு, கலிங்கு, மடை போன்றவற்றை மீண்டும் புனரமைத்தல் ஆகியன குளத்து நீர்ப் பாசனப் பராமரிப்பில் கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான பணிகளாகும். குளத்தின் சீரான செயல்பாட்டிற்காக அரசும், ஊர்ச் சபையும் பொதுமக்களும் காட்டிய முனைப்பு நீர்ப்பாசனத்திற்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. இதில் பல்வேறு

சமூகப் படிநிலையில் உள்ள பலர் பங்குபெற்றுத் தத்தம் பணியைச் செவ்வனே ஆற்றிச் சமூகப் பொறுப்புடன் முழு நீர்ப்பாசன அமைப்பையும் செயல்படுத்தினர்.

தூர் வார்தல் மற்றும் கரை உயர்த்துதல்

குளத்துநீர்ப் பாசனத்தில் முக்கியமான பிரச்சனை குளத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் விரைவாக வண்டல் படிவதாகும். நீர்க்கோவை என்னும் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் இருந்து பல்வேறு வாரிகள் மூலம் தொடர்ந்து நீர் வருவதால் குளங்களில் வண்டல் மண் உருவாகிறது. குளத்தில் வண்டல் மண் தேங்குவதால், குளத்தின் சேமிப்புத் திறன் அல்லது நீர்க்கொள்ளளவு குறைகிறது. குளத்தின் சேமிப்புத் திறன் குறையும்பொழுது அதன் பாசனப் பகுதியைத் தொடர்ந்து பாதிக்கிறது. அதனால், வண்டல் மண் அவ்வப்போது அகற்றப்பட வேண்டும். இல்லையெனில், நீரியல் சாதனமான குமிழிகளும், மடைகளும் பாதிக்கப்படும். பொதுவாக, ஒரு குளத்தின் நடுவில் வண்டல் அதிகமாகப் படிகிறது. குளத்தின் நடுவில் வண்டல் மண் படியும் அளவு பக்கவாட்டு அல்லது கரைகளுக்கு அருகில் பதிவதைவிட அதிகமாக இருக்கும். எனவே, ஒரு குளத்தில் உள்ள நீரின் அளவு, அதில் குவிந்திருக்கும் வண்டல் மண்ணின் அளவிற்கு நேர் விகிதாசாரமாகும். குளங்களுக்கு நீர் கொண்டுவரும் வாரிகளிலும் குளத்திலிருந்து நீரை வயல்களுக்குக் கொண்டு செல்லும் வாய்க்கால்களில் ஏற்படும் வண்டல் படிவு காரணமாகக் குளத்துக்கு நீர் வருவதும், கட்டளைப் பகுதிக்கு நீர் செல்வதும் பாதிக்கப்பட்டு இறுதியில் குளம் செயல் இழந்து போகும். எனவேதான் ஏராளமான நீர்ப்பாசனக் குளங்கள் அதிக பயன்பாட்டில் இல்லாமல் இருக்கின்றன. சில நேரங்களில் அவை முற்றிலுமாகவும் கைவிடப்பட்டன. குளத்தின் சேதமடைந்த நிலையை உடைகுளம் எனக் கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது (பு.க.தொ. 89, 274, 342, 349, 421, 766). புதுக்கோட்டை மண்டலத்தில் படிந்த வண்டல் மண்ணை அகற்றும் பணியைக் கல்லுவித்தல் என்பர். சோழ மன்னன் பரகேசரியின் (பொ.ஆ.923 மற்றும் 924) 15ஆவது மற்றும் 16ஆவது ஆட்சியாண்டில் முறையே வெளியிடப்பட்ட இரு நெருஞ்சிக்குடிக் கல்வெட்டுகள் நெருஞ்சிக்குடிக் குளத்தில் வண்டல் மண் அகற்றப்பட்டதைக் குறிப்பிடுகின்றன. முதல் கல்வெட்டில் பொன்னாண்டாடி என்பவர் வழங்கிய தொகையைக் கொண்டு வண்டல் மண் அகற்றும் பொறுப்பை ஊரார் ஏற்றுக்கொண்டனர் (பு.க.தொ. 59). அதற்கு அடுத்த ஆண்டு (பொ.ஆ.924) மற்றொரு நபர் வழங்கிய தொகையைப் பயன்படுத்தி அப்பணியைத் தொடர்ந்தனர் (பு.க.தொ. 60). இந்த இரண்டு பதிவுகளும் ஒவ்வொரு ஆண்டும் குளத்தில் வண்டல் மண் அகற்றப்பட்டதை மறைமுகமாக நமக்கு எடுத்துரைக்கின்றன. இந்த வகையான பணிக்காகக் கொடைகள் வழங்கப்பட்டதைப் பல கல்வெட்டுகள் மூலம் நாம் காண்கிறோம். பொ.ஆ. 768இல் வெளியிடப்பட்ட இரண்டாம் நந்திவர்மனின் கல்வெட்டு ஊர்க் குளத்தில் படியும் வண்டல் மண்ணை ஆண்டுதோறும் அகற்ற பையூர் கணத்திடம் (சபை) பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இப்பணி வணிகர் ஒருவரிடம் இருந்து அவர்கள் பெற்ற 6,400 காடி நெல்லில் இருந்து பெறப்படும் வட்டியில் இருந்து அச்செலவு ஈடுசெய்யப்பட்து (தெ.க.தொ. 12:34).

பாண்டிய மன்னன் ஸ்ரீமாறன் ஸ்ரீ வல்லபனின் (பொ.ஆ.816-862) சாத்தனூர்க் கல்வெட்டுகள் இருப்பைக்குடி கிழவன் எட்டிசாத்தன் பல குளங்களை ஏரிகளாக (நீர்த்தேக்கங்களாக) மாற்றினார் என்பதை முன்பே குறிப்பிட்டுள்ளோம். இந்த விரிவாக்கப்பட்ட நீர்நிலைகள் அனைத்தும் அவரது பட்டப்பெயர் கொண்டு கிழவனேரி என்றழைக்கப்பட்டன. பழைய குளக்கரைகளை (பழங்கரை

இழித்து) மறுசீரமைப்பு செய்ததன் மூலம் அல்லது கரைகளை உயர்த்தியதன் மூலம் (ஏறுவித்து) பல குளங்களை விரிவுபடுத்தினார். ஏற்கனவே உள்ள குளங்களைச் சீரமைக்கும் போது, பல இடங்களில் கல் குமிழிகளை (கல் நாட்டி/மடை கற்படுத்தும்) நிறுவினார். எடுத்துக்காட்டாக, அவர் சாத்தனூர் பெருங்குளத்தில் (தெ.க.தொ. 14:43-44) வேப்பமடை, பொன்னான் மடை, பூங்குறி மடை ஆகிய மூன்று குமிழிகளை நிறுவினார் (தெ.க.தொ. 14:43-44). மடை கல்படுத்தும் என்ற சொல் முன்பு செங்கற்களால் கட்டப்பட்ட மடை தற்பொழுது கல்லால் மறுகட்டமைப்பு செய்யப்பட்டதைக் கூறுகிறது. பொ.ஆ. 8 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நெடுமாறன் என்ற மன்னரால் முன்பு நிறுவப்பட்ட ம டை யை எட்டிச்சாத்தன் புதுப்பித்ததாகக் கல்வெட்டு மேலும் கூறுகிறது. குளங்கள் ம ற்றும் ஏரிகள் ஆகியவற்றிலிருந்து தண்ணீரை ஒழுங்குபடுத்த நீரியல் கருவிகள் (மடைகள்/குமிழிகள்/தூண்கள்/தூம்புகள்) அமைப்பதில் மன்னர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் நேரடியாக ஈடுபட்டனர் என்பதை இக்கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. இருப்பைக்குடி (இருக்கன்குடி) குளத்தின் கரைக்குக் கீழே கல்லால் (கற்பிழந்து) தூம்பு கட்டப்பட்டது எனத் தெரிவிக்கிறது (தெ.க.தொ. 14:44). அவர் சத்தனூர் பெருங்குளம், மாறனூர் பெருங்குளம், சிறுபுத்தூர் பெருங்குளம், மாலங்குடி பெருங்குளம் போன்றவற்றைப் பழுது பார்த்ததால் பின் அவரது பெயரால் கிழவனேரி என்று அழைக்கப்பட்டன. பழைய கரைகளைப் புதுப்பித்தல், புதிய குமிழிகள் மற்றும் உள்வாயில்களில் கற்களைப் பாவுதல் (தெ.க.தொ.: 14, 43, 44, 832, 834) ஆகியவற்றில் அவர் சிறப்புக் கவனம் செலுத்தினார். குளங்களின் பழைய மண்கரைகளை அகற்றி அவற்றைக் கல்லால் பலப்படுத்திக் கரையின் நீளத்தை அதிகரித்துக் கரையைச் சீரமைத்தார். அவர் பொன்னான் மடை மற்றும் பூங்குறி மடை போன்ற புதிய குமிழிகளை அமைத்தார். சாத்தனூர் பெருங்குளத்து வேப்பமடை கற்படுத்தும் எனும் சொற்றொடர் அவர் வேப்பமடை எனப் பெயரிடப்பட்ட மடையைக் கற்களைக்கொண்டு புதுப்பித்துள்ளார் என்பதைத் தெளிவாகக் கூறுகிறது.

பொ.ஆ. 1013இல் சோழ மன்னன் முதலாம் ராஜராஜனின் 22ஆவது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட திருவிளங்குடிக் கல்வெட்டு நிலச் சீரமைப்பைப் பற்றிப் பேசுகிறது (பு.க.தொ. 90). குடிக்காடு குளம் உடைகுளமாய் காடெழுந்து குளங்கல்லுவிக்க என்ற கல்வெட்டுச் சொற்றொடர் குளம் பராமரிப்பு அற்று இருந்ததால் மகாசபை குளத்தைப் பழுதுபார்ப்பதற்காக நூற்றுவேலி என்ற பெயருடைய நிலத்தைக் கோவிலுக்குக் கொடையாக விற்றுப் பழுதுபார்த்தனர். குளத்தைப் பராமரிப்பது ஒரு கூட்டுச் சமூக நடவடிக்கையாகக் கருதப்படுவதை இது காட்டுகிறது.

புதுக்கோட்டைப் பகுதியில் குளத்தில் உள்ள வண்டல் மண்ணை அகற்றுவதைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல் கல்லுதல் எனப்படும் (தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி தொகுதி 1, ப.158). சோழ மன்னன் பரகேசரியின் 16ஆவது ஆட்சியாண்டில் (பொ.ஆ. 941) வெளியிடப்பட்ட நெருஞ்சிக்குடிக் கல்வெட்டு, மாவலூர் கிராமத்தைச் சேர்ந்த கல்லம்பலத்தவன் (பு.க.தொ. 60) அளித்த நன்கொடையில் ஆண்டுதோறும் பெறும் வட்டித்தொகையில் இருந்து வண்டல் மண்ணை அகற்றும் பணியை மேற்கொண்டதைக் குறிக்கிறது.

ஜடாவர்ம சுந்தர பாண்டியனின் (பொ.ஆ. 13ஆம் நூற்றாண்டு) திருவேட்பூர்க் கல்வெட்டு பயன்பாட்டில் இல்லாமல் போன ஒரு குளத்தினை மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்ததைக்

குளத்தில் நீரும் பற்றாதாய் நாடு பாழாய் இருந்து பட்டுக்கிடக்கையில் இதுக்கு எங்கள் பற்றிலே குளங் கட்டவும் என்ற சொற்றொடர் மூலம் அறியலாம். அதே கல்வெட்டு புதிய குளம் கட்ட நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதைக் குளங்கட்டலாமிடங் குளங் கட்டுவித்து குளமும் வெட்டி வயலும் திருத்தி பயிர் செய்வாராகவும் எனும் கல்வெட்டுப் பதிவு மூலம் அறியலாம் (பு.க.தொ. 45).

கரையை உயர்த்துதல்

குளத்தின் நீர்ப்பிடிப்புத் திறன் அல்லது கொள்ளளவு என்பது கரையின் உயரம் மற்றும் குளத்தின் பரப்பளவு ஆகியவற்றைப் பொறுத்தது. கரையை இரு வழிகளில் உயர்த்தியுள்ளனர். முதல் நிலையில் வழக்கமான பராமரிப்புப் பணியின்போது அணையின் கரையை உயர்த்தி நீரின் கொள்ளளவை அதிகப்படுத்தி அதன் மூலம் பாசனப் பகுதியை விரிவுபடுத்தி உள்ளனர். பொ.ஆ. 7 மற்றும் 8 ஆம் நூற்றாண்டு பாண்டியர் கல்வெட்டுகள் கரையை உயர்த்துவதில் தனித்துவமான தொழில்நுட்பத்தைக் கடைப்பிடித்துள்ளமை தெரிகிறது. எடுத்துக்காட்டாக, குளத்தில் தேங்கி நிற்கும் நீரின் தொடர்ச்சியான அலையால் கரை வலிமை இழந்து பலவீனமடைகிறது. எனவே, கரையின் உள்முகத்தில் அலைகள்/அரிப்பைத் தடுக்கும் வகையில் கல் பாவிக் கரையினைப் பலப்படுத்தினர். கல்வெட்டுகளில் காணும் ‘கற்கோதி’ என்ற சொல் கல்பாவியதைத் தெளிவாகக் குறிக்கிறது (தெ.க.தொ. 4:26). அதேபோல் 'நூலிட்டெறுவித்து' என்ற சொற்றொடர் அவர்கள் கரையை நூல் பிடித்து அளவிட்டு உயர்த்தினர் என்பதை உணர்த்துகிறது. புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டத்தில் உள்ள விராய்ச்சிலையில் உள்ள பில்லவனேஸ்வரர் கோவிலின் வடக்குச் சுவரில் காணப்படும் பாண்டிய மன்னன் சுந்தர பாண்டியனின் நான்காம் ஆட்சியாண்டில் (பொ.ஆ. 1280) வெளியிடப்பட்ட கல்வெட்டு நிலவிற்பனை ஆவணத்தைக் குறிக்கிறது. இந் நிலஆவணத்தின் படி, விராய்ச்சிலையைச் சேர்ந்த ஊரார், குளத்தையும், குளத்துடன் சேர்ந்த நிலத்தையும், கால்வாய்களையும் சோதியாழ்வார் என்பவருக்குக் காணியாக விற்று அதில் வரும் தொகையைச் சேதமடைந்த குளத்தின் கரையையும், குளத்தில் குமிழியை ஏற்படுத்திக்கொள்ளவும் அனுமதித்தனர் என்பதை வயலும் குளமும் கல்காலும் காணியாகப்பற்றி என்ற சொற்றொடரும், இக்குளத்தில் கரை தமக்குள் உயர்த்திக் கொண்டு நீரேத்தம் பாத்து முன் குளத்திலே கல்நாட்டி கொள்வாராகவும் என்ற சொற்றொடரும் குறிப்பிடுகின்றன (பு.க.தொ. 421). நில விற்பனையானது பாசன வயல், குளம், குளத்துநீர்ப் பரப்பு மற்றும் கால்வாய் (கால்) ஆகியவை ஒரே அலகாகக் கருதப்பட்டுள்ளதை இக்கல்வெட்டு காட்டுகிறது. குளத்தின் இக்கூறுகளில் ஏதேனும் ஒன்றை விட்டுவிட்டால் குளத்தின் பயன்பாட்டை அது முழுவதுமாக அழித்துவிடும் என்ற அடிப்படையில் அனைத்துக் கூறுகளையும் ஒரே அலகாகக் கருதியிருக்க வேண்டும். சில நேரங்களில் நீர்ப்பிடிப்பு அல்லது நீர்க்கோவைகளில் இருந்து நீர் கொண்டு வரும் வாரிகளும் குளத்துடன் சேர்த்து விற்கப்பட்டன. பில்லமங்கலம் சிவன் கோயில் கல்வெட்டுகளில் காணப்படும் இக்குளத்து பண்டாடு பழநடை பாய்கிற கால்களும், நீர்களும் இக்குளத்துக்கே பாய்வதாகவும் எனக் குறிப்பிடுவதால் நிலங்கள் விற்பனையில் அவர்கள் எவ்வளவு கவனம் செலுத்தினர் என்பதை இவை சுட்டிக் காட்டுகின்றன (பு.க.தொ. 363).

குளப்பரப்பு, குளத்தின் சேமிப்புத் திறன், குளம் கொண்டிருக்கிற நீரின் அளவு, நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் இருந்து வரும் நீரின் அளவு போன்றவற்றைப் பற்றி ஒருவர் அறிந்திருந்தால் மட்டுமே குளத்தைச் சரியான அளவில் கட்டமைக்க இயலும். இது மிகவும் தொழில்நுட்பம் சார்ந்த

செயல்பாடாகும். அவர்கள் நூல் அல்லது கயிறு பிடித்துக் குளத்தைக் கட்டுவதற்குப் பயன்படுத்தி உள்ளனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பில்லமங்கலத்தில் உள்ள சிவன் கோவிலில் காணப்படும் பொ.ஆ. 14ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு, கரை எழுப்புவதில் நூலின் நோக்கம் மற்றும் பயன்பாட்டைக் குறிக்கிறது (பு.க.தொ. 363). பாண்டிய மன்னன் வீரபாண்டியனின் ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட கல்வெட்டு, சுந்தர பாண்டியபுரத்தின் ஊரவருக்கும் (கிராமச் சபை) திருச்சிற்றம்பலம் உடையார் (பு.க.தொ. 363) என்பவருக்கும் இடையே நிகழ்ந்த நிலவிற்பனையில் ஊரவர்கள் குளக்கரைக்கு வெளியே நாட்டப்பட்ட கல்லுக்கும், நாவலூர் வாரிக்கும் இடையே கரையை உயர்த்திக்கொள்ள அனுமதி வழங்கப்பட்தைக் குறிக்கிறது. புறக்கரையில் நாட்டின கல்லுக்கு நேர் நாவலூர் காலளவும் கயிறு பிடித்து கரை சுமந்து கொள்வாராகவும் எனக் குறிப்பிடுகிறது. சில கல்வெட்டுகளில், வரம்பு ஏறிட்டு என்ற சொல் கரையை உயர்த்துவதைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது (பு.க.தொ. 375).

குளப்பரப்பு விரிவாக்கம்

சிறிய குளத்தின் கரையை உயர்த்துவது அல்லது குளத்தை ஆழப்படுத்துவதன் மூலம் அக்குளம் பெரிய நீர்த்தேக்கமாக அல்லது ஏரியாக விரிவாக்கம் செய்ததற்குக் கல்வெட்டுச் சான்றுகள் பல உள்ளன. குளத்தினை ஏரியாக மாற்றுவது ஒரு உன்னத பணியாகக் கருதப்பட்டது. பொ.ஆ. 7-9ஆம் நூற்றாண்டுகளில் இந்த வகையான செயல்பாடு அதிகமாகக் காணப்படுகிறது. பல்லவ மன்னன் நந்திப்போத்தரையர் (பொ.ஆ. 736) தமது 5ஆவது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட குன்னாண்டார்கோயில் (குன்றாண்டார்கோயில்) கல்வெட்டு, குளத்தை ஏரியாக மாற்றியதைக் குறிக்கிறது (பு.க.தொ. 17). இருப்பைக்குடி கிழவன் சாத்தனூர் பெருங்குளம், மாறனூர் பெருங்குளம், சிறுபுத்தூர் பாழ்க்குளம், மாலங்குடி பெருங்குளம் போன்ற பல குளங்கள் புனரமைக்கப்பட்டு விரிவாக்கப்பட்டதைப் பற்றிப் புகழ்பெற்ற இருக்கைக்குடி கல்வெட்டு தெரிவிக்கிறது (தெ.க.தொ. 14:, 43, 44). விரிவாக்கத்திற்குப் பிறகு, இவை அவரது பெயரால் கிழவனேரி எனப் பெயரிடப்பட்டன. பொ.ஆ.1013 நாளிட்ட முதலாம் ராஜராஜனின் திருவிளங்குடிக் கல்வெட்டு, சேதமடைந்த குளத்தைப் புதுப்பிப்பதைக் குறிக்கிறது. புதுப்பித்த பிறகு, அது அத்தாணிப்பேரேரி என்று அழைக்கப்பட்டது (பு.க.தொ. 90). இச்சான்றுகளைத் தவிர, குளத்தின் அளவைப் பற்றிய கல்வெட்டுத் தரவுகள் அதிகமான அளவில் நமக்குக் கிடைப்பதில்லை. புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டத்தில் உள்ள விரையாச்சிலையில் உள்ள கல்வெட்டு குளத்தின் பரப்பளவு பற்றிப் பேசுகிறது. கல்வெட்டின் தொடர்புடைய பகுதி பின்வருமாறு கூறுகிறது: “....... இக்குளத்துக்குப் பெருநான்கெல்லை ஆவது மேற்பாற்கெல்லையும் கீழ்பாற்கெல்லையும் உட்பட கீழ் மேல் எண்ணூறு அடியும் தென் வடல் எண்ணூறு அடியும் ஆக இசைந்த .....”. இது குளத்தின் அளவை 800 x 800 அடியாகத் தருவதால் இதன் மொத்த பரப்பளவு 6,40,000 சதுர அடி என அறியலாம். இத்தகைய நுணுக்கமான கணக்கீடுகள் அவர்களின் தொழில்நுட்ப வளர்ச்சியைக் காட்டுகின்றன.

குளப் பராமரிப்புக்கான நிலக்கொடைகள்

குளம் மற்றும் நீரியல் கருவிகள் அல்லது சாதனத்தின் பல்வேறு கூறுகளை அவ்வப்போது பராமரிப்பது குளத்தின் சீரான செயல்பாட்டிற்கும், தடையில்லா நீர் விநியோகத்திற்கும் முக்கியமானது. இதற்காகக் கிராம சபை குறிப்பிட்ட அளவு நிலத்தை ஒதுக்கியது. இந்த நிலத்தின்

மூலம் கிடைக்கும் வருமானம் பராமரிப்புக்குச் செலவிடப்பட்டது. குளத்தின் பராமரிப்புக்காகத் தானமாக வழங்கப்பட்ட நிலம், குளப்புரம், குளப்பட்டி, ஏரிப்பட்டி என்று அழைக்கப்பட்டன. மலம்பட்டியில் கிடைத்த முதலாம் இராஜராஜனின் 27ஆவது ஆட்சியாண்டில் (பொ.ஆ. 1012) வெளியிடப்பட்ட ஒரு துண்டுக் கல்வெட்டு குளப்பட்டியைப் பற்றிக் குறிப்பிடுகிறது. ஓணான்குடியில் கிடைத்த பொ.ஆ.13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மற்றொரு கல்வெட்டு குளப்புரத்தைக் குறிப்பிடுகிறது (இராசேந்திரன் 2017:51 மற்றும் 108). பொ.ஆ. 1305இல் மூன்றாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் ஆட்சியின்போது வெளியிடப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தின் ஆலங்குடிக் கல்வெட்டு, குளப்புரம் என்ற சொல்லின் சரியான பொருளை வழங்குகிறது (பு.க.தொ. 776). இந்தக் கல்வெட்டு, ஆலங்குடி கிராமத்தைச் சேர்ந்த அனந்தன் கூத்தனுக்கு ஊரார் வழங்கிய நிலக்கொடையான குளப்புரத்திலிருந்து வரும் வருவாயைக் கொண்டு குளம் வெட்டவேண்டும் என்பதைப் பதிவு செய்கிறது. இந்தச் செயலைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொற்றொடர் இக்குளத்துக்கு குளப்புறமான சேய்யில் விளைஞ்சது கொண்டு குளம் வெட்டுவிப்பார்களாகவும் என்ற தொடர் மூலம் அறியமுடிகிறது. மாறவர்மனின் 16ஆவது ஆட்சியாண்டில் (பொ.ஆ.1232) வெளியிடப்பட்ட குடுமியான்மலைக் கல்வெட்டு குளப்பட்டியைக் குறிக்கிறது (பு.க.தொ. 301). ஏரிப்பட்டி என்பதும் குளத்தின் பராமரிப்புக்காகக் கொடுக்கப்பட்ட நிலமாகும். ஆதித்ய சோழனின் 3ஆவது ஆட்சியாண்டில் (பொ.ஆ. 873) வெளியிடப்பட்ட வயலகம் கல்வெட்டு, வீரசோழன் இளங்கோவேலரின் வேள்படை மற்றும் உடநிலை சேவகர் குளப்பட்டி வழங்கியதைக் குறிக்கிறது (இராசேந்திரன் 2017:66).

வெட்டப்பேறு என்பதும் குளம், குமிழி, வாய்க்கால், கால்வாய் போன்றவற்றின் பராமரிப்புக்காக வழங்கப்பட்ட நிலக்கொடையாகும். சோழ மன்னன் முதலாம் பராந்தகனின் (பொ.ஆ. 944 CE) 37ஆவது ஆட்சி ஆண்டில் வழங்கப்பட்ட நிலக்கொடை வெட்டப்பேறு என்றழைக்கப்பட்டது. தலைவாயினைப் பராமரிப்பவர்கள் தலைவாய்ச் சான்றோர் என்றழைக்கப்பட்டனர். தலைவாய்ச் சான்றோரான பதினொரு உறுப்பினர்களுக்கு வெட்டப்பேறாக முன்னர் வழங்கப்பட்ட நிலம் மீண்டும் மற்றொரு தனிநபரால் அல்லூர் சிறியான் புள்ளன் நக்கனால் மீட்கப்பட்டது (தெ.க.தொ. 8:689). குளத்தின் பராமரிப்புக்காக வழங்கப்பட்ட நிலம் வெட்டப்பேறு என அழைக்கப்படுவதை இது காட்டுகிறது. இதனை உறையூர் கூற்றத்து அல்லூர் தலைவாய்ச்சான்றோம் பதினொருவோம் இவ்வூர் எங்கள் நிலம் வெட்டப்பேறு என்ற கல்வெட்டுச் சொற்றொடர் மூலம் அறியமுடிகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள லால்குடியில் சுந்தர சோழனின் (பொ.ஆ. 969) 13ஆவது ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்ட மற்றொரு கல்வெட்டு இந்த நிலக்கொடையை வெட்டப்பேறு என்றே குறிப்பிடுகிறது. சோழ மன்னன் முதலாம் ராஜேந்திரனின் (பொ.ஆ. 1019) 8ஆவது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட கரந்தை செப்பேடு, பெரிய ஏரியைப் பராமரிக்கும் அரையருக்கு வழங்கப்பட்ட நிலக் கொடையை வெட்டப்பேறு என்றே குறிக்கிறது (சுப்பராயலு 2012:63-64). இதே கல்வெட்டு நில எல்லை (வரி 729) தொடர்பாக வெட்டித்தூம்பு என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது. வெட்டிகளுக்கு வெட்டப்பேறாக விடப்பட்ட நிலத்திற்குத் தூம்பின் வழியாக நீர் பாய்வதால் வெட்டித்தூம்பு என்று பெயர் பெற்றிருக்கலாம் (கிருஷ்ணன் 1984:110).

குளங்களைப் பராமரிப்பதற்குத் தேவைப்படும் நிதியைத் திரட்டும் மற்றொரு வழி வரி விதிப்பதாகும். இந்த வரிகள் பாசிபட்டம் அல்லது மீன்பட்டம் எனப்படும். பாசிபட்டம் என்பது குளங்களில் மீன்பிடி உரிமையைப் பெறுவதற்கு விதிக்கப்படும் வரியாகும். இந்த வரி பொதுவாக மண் அகற்றும் நடவடிக்கைகளுடன் தொடர்புடையது. சடையவர்மனின் (பொ.ஆ. 1251-1270) 12ஆவது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட ஆதனூர்க் கல்வெட்டு (பு.க.தொ. 351) குளத்தில் மீன்பிடிக்கும் உரிமையைத் தனிநபர் ஒருவருக்கு வழங்கி அதற்கு ஈடாக அவர் குளத்தில் உள்ள வண்டல் மண்ணை அகற்றும் பணியை மேற்கொள்ளவேண்டும் எனக் கோயில் கேட்டுக்கொண்டது (பு.க.தொ. 351). சில நேரங்களில் மீன்பிடிக்கும் முழு உரிமையை வழங்காமல் அதில் பகுதி உரிமையை வழங்கும் நடைமுறையும் இருந்துள்ளது. விசலூர்க் கல்வெட்டு இந்த நடைமுறையைப் பதிவு செய்கிறது (பு.க.தொ. 375). விசலூரின் ஊரார், கோயிலுக்கு மீன்பிடி உரிமையில் ஒரு குறிப்பிட்ட பங்கை மட்டும் வழங்கினர். இந்த மீன்பிடி உரிமையைக் கோயிலுடன் பகிர்ந்துகொள்வதன் மூலம், வண்டல் மண் அகற்றும் பணியில் கோயிலின் பங்கையும் ஊரார் ஏற்கவேண்டியிருந்தது என்பது புலனாகிறது.

அழிகுளம்

அழிகுளம் என்பது இன்றைய மக்கள் குளத்தில் உள்ள வண்டல் மண்ணை அகற்ற பயன்படுத்தும் சொல். அழிகுளம் என்றால் குளத்தில் உள்ள வண்டல் மண்ணை நீக்குவது என்று பொருள். இந்த முறைப்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட நாளில், கிராமத்தின் தலைவர் கிராம மக்களைக் குளத்திற்கு அழைத்துச் செல்வார். குளத்தின் கரையில் அனைவரும் கூடியிருக்கும்போது, ஊர்த் தலைவர் ஒரு வெள்ளைத் துணியை அசைத்து, குளத்துக்குள் நுழைய ஒரு சமிக்ஞை கொடுப்பார். சேற்றுடன் நிறைய மீன்களுடன் இருக்கும் குளத்தில் கிராம மக்கள் இறங்கிக் குளத்தில் தமக்கென ஒரு பகுதியை ஆக்கிரமிப்பு செய்துகொள்வர். தங்கள் ஆக்கிரமிப்புப் பகுதியில் இருக்கும் வண்டல் மண்ணை அகற்றும் பணியில் ஈடுபடுவர். அப்பொழுது அவர்களது ஆக்கிரமிப்புப் பகுதியில் இருக்கும் மீன்களைப் பிடித்துக்கொள்ளலாம் (Sankaran 1997:58). இத்தகைய நடைமுறைகள் பண்டைய காலந்தொட்டு நிலவியிருக்கலாம். ஆனால் அதற்கான கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கவில்லை.

பராமரிப்புக் குழு

ஊர் மேலாண்மையில் நன்கு கட்டமைக்கப்பட்ட திறமையான நிர்வாக அமைப்பு தமிழகத்தில் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. அவற்றில், சபா, ஊர் மற்றும் நாடு என்ற மூன்று அமைப்புகளைச் சிறந்த நடைமுறை நிர்வாக அமைப்புகளாகக் குறிப்பிடலாம். உத்திரமேரூர்க் கல்வெட்டு ஊரில் ஐந்து நிர்வாகக் குழுக்கள் இருந்ததைக் குறிப்பிடுகிறது. அவற்றில் ஒன்று ஏரிவாரியம் என்ற குள மேற்பார்வைக் குழு ஆகும். இக்கல்வெட்டின்படி, முப்பது குடும்புகளில் ஆறு குடும்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

வாய்த்தலைக்குலை அரையர்கள் என்று அழைக்கப்படும் மற்றொரு குழு இருந்ததைத் திருவாவடுதுறைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது (தெ.க.தொ. 1:151). டி.எம். சீனிவாசன் (1991:199)

வாய்த்தலை மற்றும் குலை போன்ற சொற்கள் முறையே தலைவாய் மற்றும் கரைகளைக் குறிப்பதாக எடுத்துக்கொள்கிறார். ஆற்றில் இருந்து முதன்முதலாக நீர் கால்வாய் வழியாக வெளியேற்றப்படும் இடம் தலைவாய் எனப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்துவதன் மூலம் வாய்க்கால் வழியாகச் செல்லும் நீரை ஒழுங்குபடுத்தமுடியும். கால்வாயில் நுழையும் நீர் விநியோகத்தைக் கட்டுப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கம். எனவே தான் நீர் விநியோகத்தைக் கட்டுப்படுத்தும் அல்லது ஒழுங்குபடுத்தும் பணியின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் வாய்த்தலை குலை அரையர்கள் என அழைக்கப்பட்டனர். பாசனப் பகுதிகளுக்குத் தடையில்லா நீர் விநியோகத்தை உறுதி செய்வதற்காக, குளங்களைப் பராமரிக்க, நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட உள்ளூர் அளவிலான நிர்வாகக் குழுக்கள் இருந்துள்ளன என்பதற்கு மேற்கண்ட கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன.

நீர் மேலாண்மை

நீர் உரிமைகள்

எந்தவொரு நீர்ப்பாசன முறையிலும் நீர் உரிமைகள் என்பது அதன் ஒருங்கிணைந்த பகுதியாகும். நீர்உரிமைகள்தொடர்பானகல்வெட்டுகளைஆய்வுக்குட்படுத்தும்பொழுதுஅவை நீர் உரிமைகள் தொடர்பான சர்ச்சைகள் ஆயக்கட்டுக்குள்ளேயே சுமூகமாகத் தீர்க்கப்பட்டன என்பதைக் காட்டுகிறது. பெரும்பாலான நேரங்களில், நில உரிமையாளர்களுக்கும், நிலக் கொடையாளர்களுக்கும் நீர் உரிமைகள் வழங்கப்பட்டன. இரு நீர் உரிமையார்களுக்கு இடையே பிணக்கு ஏற்பட்டு அப்பிணக்குகள் அல்லது சிக்கல்களைத் தீர்க்க முடியாதபோது அரசர் அல்லது உயர் அதிகாரிகள் நேரடியாகத் தலையிட்டுப் பிணக்குகளைத் தீர்த்துவைத்துள்ளனர். அரசரின் முடிவே இறுதியான முடிவாக அமைந்தது. நீர் உரிமைகள் பற்றிய இறுதி அதிகாரம் அரசிடம் இருந்தது என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது. ஆரம்பத்தில் நீர் உரிமைகள் அல்லது நீர் மேலாண்மை பொதுவாக ஊர் அல்லது சபையின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதாக இருந்தன. சில நேரங்களில் நீர் உரிமையுடன் சேர்த்தே நிலத்தையும் விற்றனர். இதனைக் காணிக்கூற்றொடு நீர் பெருவதாகவும் (நிலத்துடன் நீர் உரிமைகள்); அரை மாக்கூற்றோடு நீரோடு நீர் பெறுவதாகவும் (½ மா நிலத்துடன் நீர் உரிமைகள்) போன்ற கல்வெட்டுச் சொற்றொடர்கள் நிலத்துடன் நீர் உரிமைகளும் விற்கப்பட்டன என்பதைத் தெரிவிக்கின்றன (தெ.க.தொ. 14:17, 19). நிலத்தின் மீதான காணி உரிமை சமுதாயத்திடம் இருந்தவரை, நீர் மேலாண்மையில் ஊரும் சபையும் முக்கிய பங்கு வகித்தன. காலப்போக்கில், 13ஆம் நூற்றாண்டிலிருந்து நிலத்தின் உரிமை தனிநபர் உரிமையாக மாற்றம் பெறத் துவங்கியது. எனவே, நீர் மேலாண்மையும், நீர் உரிமையும் நிலக்கிழார்களின் வசம் சென்றடைந்தன. இரண்டாம் நந்திவர்மனின் (731-796) காசக்குடிச் செப்பேடு, பிரம்மா ஸ்ரீராஜனின் வேண்டுகோளுக்கு இணங்க ஜெயஸ்தபாத-சோமை என்ற நபருக்கு நிலக்கொடை வழங்கப்பட்டது (பல்லவர் செப்பேடு முப்பது, தமிழ் வரலாற்றுக்கழகம், சென்னை) என்பதை குறிக்கிறது. இப்செப்பேட்டின்படி செய்யாறு ஆற்றில் இருந்து பாசனத்திற்காகத் திரையனேரிக்கு நீர் கொண்டு செல்வதற்கு ஆற்று வாய்க்கால்களைத் தோண்டவும், நீர் செல்வதற்கு ஏதுவாகக் கால்வாய்களைத் தூர்வாரிக்கொள்ளவும் மன்னர் அனுமதித்தார். அதே நேரம் வாய்க்கால்களில் தண்ணீரைத் தவறாகப் பயன்படுத்துவதையோ

அல்லது கூடைகளைப் பயன்படுத்தியோ அல்லது கிளை வாய்க்கால்களை வெட்டுவதன் மூலமாகவோ நீர் இரைப்பதைத் தவிர்க்கவேண்டும் என்றும் அவர் கட்டளையிட்டார்.

சோழர்களின் ஆட்சியின்போது, இந்த விதிகள் மேலும் மாற்றியமைக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்ட கடுமையான விதிமுறைகளாகச் செயல்படுத்தப்பட்டன. முதலாம் ராஜேந்திர சோழனின் (பொ.ஆ.1018) திருவாலங்காடு செப்பேடு தரும் தகவல்கள் நீர்மேலாண்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும் (தெ.க.தொ. 3:205). நீர் உரிமைகளைப் பற்றி இச்செப்பேடு தெளிவாக எடுத்துரைக்கிறது. தேவதானமாக வழங்கப்பட்ட நிலத்திற்குத் தேவைப்படும் நீர் அதன் விகிதாச்சாரத்திற்குத் தக்கவாறு வாய்க்கால்கள் வெட்டிக்கொள்ளப்பட வேண்டும் என்றும், தேவதான நிலத்திற்குரிய குத்தகைதாரர் அல்லாதவர்கள் இந்நிலத்திற்குச் செல்லும் வாய்க்கால்களை ஊடறுத்துத் (குறுங்கறுத்து) தமது நிலத்திற்கு நீர் கொண்டுசெல்லக்கூடாது என்றும், வாய்க்கால்களுக்குக் குறுக்காக மடை/அணை கட்டி நீரின் போக்கை மாற்றக்கூடாது எனவும், வாய்க்காலிலிருந்து கூடை போன்றவற்றைக் கொண்டு நீர் இரைக்கக்கூடாது எனவும், ஊரின் வழியாக வாய்க்கால்கள் செல்ல அனுமதிக்க வேண்டும் எனவும், நீர் வீணாகாமல் ஒழுங்குமுறையுடன் நீர்ப் பாசனத்திற்குச் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் எனவும், குளத்தின் அதிகபட்ச கொள்ளளவை நிலைநிறுத்திக்கொள்ள குளங்களின் கரைகள் குறிப்பிட்ட வரம்புகளுக்குள் உயர்த்திக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் இச்செப்பேடு குறிப்பிடுவது நீர்மேலாண்மையில் அரசும் மக்களும் கொண்டிருந்த தெளிவான அணுகுமுறையை நமக்குக் காட்டுகிறது. இந்த அரச ஆணை பொ.ஆ. 10-11ஆம் நூற்றாண்டில் வழக்கில் இருந்த நீர் மேலாண்மையின் பரந்த காட்சியை நமக்கு வழங்குகிறது. எதிர்காலங்களில் நீர்ப் பிரச்சினை ஏற்படாமல் இருக்கவேண்டும் என்பதில் அரசு மிகுந்த கவனம் செலுத்தியது என்பது இதன் மூலம் தெளிவாகிறது. நீர் இயந்தவழி, நீர்கிடந்தவாறு, (பு.க.தொ. 283), நிலவிழுக்காடு நீர் (பு.க.தொ. 285), இன்னிலத்திற்கு நிலப்பொதிவிலே நீர் (பு.க.தொ. 405) போன்ற சொற்கள் ஒரு கிராமத்தில் உள்ள அனைத்து வயல்களுக்கும் வழங்கப்பட்ட சமமான நீர் விநியோகத்தைக் குறிக்கிறது. சில சமயங்களில், குமிழிகளை மறுவடிவமைப்பதன் மூலம் நீர்ப் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டன என்பதை ராங்கியம் கல்வெட்டு நமக்கு உணர்த்துகின்றன. அக்கல்வெட்டின்படி, கீரனூர் குளத்து நீர், கீரனூர் மற்றும் பிரங்கோட்டை ஆகிய இரண்டு கிராமங்களுக்கும் சமமாக விநியோகிக்கப்பட்டது. இது நீர்முறையின் அடிப்படையில் வழங்கப்பட்டது. சில கல்வெட்டுச் சான்றுகள் கிராம மக்கள் தண்ணீரை விலைக்குப் பெற்று அதற்கு ஈடாக நெல்லை உள்ளூர்க் கோவிலுக்குச் செலுத்தியுள்ளனர். ஆனால், கோவிலுக்குச் செலுத்தவேண்டிய நெல்லினைச் செலுத்தாததால் நீர் விநியோகம் செய்வதில் பிணக்கு ஏற்பட்டது. இந்தச் சர்ச்சை ஆட்சியாளர் விஜயாலய தேவரின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது. விஜயாலயதேவர், மடையின் ஒற்றைக் கால்வாயை (கண்) இரண்டு வாய்க்கால்களாக மறுவடிவமைக்க உத்தரவிட்டார். இதனால் இரண்டு கிராம மக்களுக்கும் ஒரே நேரத்தில் கீரனூர்க் குளத்தில் இருந்து நீர் சமமாகச் செல்வது உறுதி செய்யப்பட்டது.

ஆட்சியாளர்கள் சில விதிகளை வகுத்து, நீர் விகிதாச்சாரத்தின் அனைத்துக் கூறுகளையும் கணக்கில்கொண்டு சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர் என்பது மேற்குறிப்பிட்ட

கல்வெட்டுகளின் மூலம் நன்கு விளங்கும். அன்றைய ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குமுறை நடவடிக்கைகள் அனைத்து தனிநபர்களுக்கும், சிறிய மற்றும் பெரிய நில உரிமையாளர்களுக்கும் முழுமையான நீர் விநியோகத்தை உறுதி செய்தது. பின்னர் வந்த ஆட்சியாளர்களும் பல்லவர்களின் காலத்திலிருந்த விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளைத் தொடர்ந்தனர் அல்லது தேவையான மாற்றங்களுடன் அவற்றைப் பின்பற்றினர். விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் அரசால் உருவாக்கப்பட்டன. அவை சமூகத்தின் நலனுக்காக உள்ளாட்சி அமைப்புகளால் செயல்படுத்தப்பட்டன.

நீர் உரிமைகளின் வகைப்பாடு

ஊர், சபை, நகரம் போன்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தனிநபர்களுக்கும் இடையே நடைபெற்ற நிலவிற்பனை ஆவணத்திலிருந்து பல்வேறு நீர் உரிமைகளின் தன்மை குறித்த பல்வேறு தகவலை அறியமுடிகிறது. மேலே குறிப்பிட்டுள்ளபடி, தனியார் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய அனுமதிக்கப்பட்ட நீரின் அளவு சாகுபடி நிலத்தின் பரப்பிற்கு ஏற்ப இருந்தது. இந்த நீர் உரிமைகளை இரண்டு நிலைகளில் காணலாம். முதலாவதாக, ஒரு குறிப்பிட்ட அளவு தண்ணீரின் மீதான உரிமைகள் அல்லது தண்ணீரின் மீது பகிரப்பட்ட உரிமைகள். இரண்டாவது வகை, குளத்தின் மீதான உரிமைகளையும் உட்படுத்துகிறது. சில நேரங்களில் குளத்தின் பல்வேறு கூறுகளான குளம், குளக்கால், குளத்தின் கரை, குளத்து நீர், குளத்தின் பரப்பு, குளத்தின் வாய் போன்றவற்றைச் சேர்த்து விற்றதன் மூலம் நீர்ப்பாசனம் என்பது குளமும், குளம்சார்ந்த அனைத்துக் கூறுகளும், ஆயக்கட்டும் ஆகிய அனைத்தும் ஒற்றை அலகாகக் கருதப்பட்டதை இந்நிலவிற்பனை ஆவணங்கள் உணர்த்துகின்றன. குறிப்பிட்ட நிலத்தின் மீதான நீர் உரிமைகள் பெரும்பாலும் நிலவிற்பனை ஆவணத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருக்குளம்பூரில் உள்ள வீரபாண்டியனின் 5ஆவது ஆட்சியாண்டில் (பொ.ஆ. 1301) வெளியிடப்பட்ட கல்வெட்டு வீரபாண்டிய நல்லூரைச் சார்ந்த ஊராருக்கும் பெரியதேவர் என்ற தனிநபருக்கும் இடையே நடைபெற்ற நிலவிற்பனையை எடுத்துரைக்கிறது (பு.க.தொ. 361). பாண்டிமான் குடிக்காடு குளமும் கரையும் குளத்து உள்வாயும் நீர்நிலமும் என்ற கல்வெட்டுச் சொற்றொடர் குளம், குளக்கரை, குளத்துக்கு நீர் கொண்டுவரும் உள்வாயில், பாசன நிலம் ஆகியவற்றை இணைத்தே ஊரார் விற்பனை செய்துள்ளனர் என்பது தெரிகிறது. மேலும் மருதூர் அணையில் இருந்து உருவாகும் அழவாறு நதியின் நீரைப் பெறுவதற்கும் அவர்கள் அனுமதி வழங்கினர் என்பதை இக்குலத்துக்கு நீர்போகிற மருதூர் அணையிலே நின்றும் வருகிற அழவாற்றில் அடைச்சுப்பாச்சிக்கொள்வாராகவும் என்ற கல்வெட்டுச் சொற்றொடர் நமக்கு உணர்த்துகின்றன. மேலும், கேசவனேரியின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கலிங்கிலிருந்து வெளியேறும் உபரிநீரை வாய்க்கால் வெட்டி எடுத்துச்செல்லவும் அனுமதி வழங்கினர் என்பதை இப்படி விற்றுக்குடுத்த இக்குளத்துக்கு கேசவனேரியில் கீழ்கடையில் கடைவித்து நீர்கால் வெட்டி கடை வீடும் நீர் பாச்சக்குடுப்போமாகவும் என்ற வரிகள் மூலம் அறியலாம். எனவே ஒரு நீர்த்தேக்கத்திலிருந்து அல்லது குளத்திலிருந்து மற்றொன்றுக்கு நீர் மாற்றுவது அக்காலத்தில் நடைமுறையில் இருந்தது என்பது தெளிவு. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குளங்கள் வழியாகச் செல்லும் தண்ணீரின் உரிமையைப் பொருத்தவரை பின்பற்றப்பட்ட

நீர் உரிமைகளின் தன்மையை அறிந்துகொள்ள சில கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. சில சமயங்களில் நீர் உரிமையின் ஒரு பங்கினை அல்லது பகுதியினை விற்பனை செய்துள்ளனர். குடுமியான்மலைக் கல்வெட்டு இரண்டு குளங்களிலிருந்து பெற்ற 50 விழுக்காடு நீர் உரிமையைப் பற்றி குளமிரண்டிலும் குமிழி ஒன்று பாதி பெற கடவதாக என அந்நிலவிற்பனை ஆவணம் பதிவு செய்கிறது (பு.க.தொ. 375).

நீர்ப் பகிர்மானம் மற்றும் மேலாண்மை

நீர் வழங்கல் அல்லது நீர்ப் பகிர்மானம் என்பது நீர் உரிமைக்கு ஏற்ப முடிவு செய்யப்பட்டு அளிக்கப்பட்டது. நீர் உரிமைகள் என்பது பரம்பரையாகப் பெற்றதாக இருக்கலாம் அல்லது விலைக்கு வாங்கியதாக இருக்கலாம் அல்லது சமூகம் எதிர்பார்த்த செயலில் பங்கேற்பதன் மூலம் பெறப்பட்டதாக இருக்கலாம். பொதுவாக, நில உரிமையாளர்கள் நீர் உரிமை அல்லது பங்கைப் பெறவேண்டி, ஒரு குளத்தை வெட்டும்பொழுதுதோ, புதிய கால்வாய் தோண்டும்போதோ அல்லது வேறுவகையான பணியிலோ தீவிரமாகப் பங்கேற்று அவர்கள் உரிய நீர் உரிமைப் பங்கைப் பெறுகிறார்கள். நீர் உரிமைதாரர்களின் வயல்களுக்குப் பாசனத்திற்கு நீர் வழங்கிய பிறகு எஞ்சிய உபரி நீர் இருந்தால் அவை விற்பனை செய்யப்படுகிறது. இந்த ஏற்பாடுகள் அனைத்து நீர் உரிமைதாரர்களும் குளத்தில் இருந்து தண்ணீரை முன்னுரிமை அடிப்படையில் பெற்றனர் என்பதைக் குறிக்கிறது. எவ்வாறாயினும், குளத்தில் இருந்து வெளியேற்றப்படும் நீர் சில நேரங்களில் போதுமானதாக இல்லாத பொழுது முறை வைத்து நீரை வழங்கி உள்ளனர். எனவே, அனைத்து நீர் உரிமைதாரர்களும் தண்ணீரைப் பெறும் முறையை அவர்கள் வடிவமைத்தனர். இது நீர் முறை என்று அழைக்கப்படுகிறது. இதில் பல வகையான முறைகள் இருந்துள்ளன என்பதை முன்முறை, போகுமுறை, முறைவிழுக்காடு, எங்கள்முறை, தன்முறை எனக் கல்வெட்டுகள் குறிப்பிடுவதன் மூலம் அறியமுடிகிறது.

